அரசஞ் சண்முகனாரின்

# இன்னிசை இருநூறு

உரையாசிரியர்

புலவர் ஆ. பொன்னுசாமிப்பிள்ளை

அரிமாப் பதிப்பகம்
அம்மாப்பேட்டை சேலம்-3

அரசஞ் சண்முகனாரின்

# இன்னிசை இருநூறு

உரையாசிரியர்

புலவர் ஆ. பொன்னுசாமிப்பிள்ளை
உறுப்பினர், தமிழகப் புலவர் குழு

கிடைக்குமிடம்
அரிமாப் பதிப்பகம்
அம்மாப்பேட்டை சேலம்-3

முதற்பதிப்பு 1—9—75

© ஆ பொன்னுசாமிப் பிள்ளை

விலை உருபா 5—00

கலிக்காகட்டு 7—00

உரையாசிரியர் முகவரி

*புலவர் ஆ. பொன்னுசாமிப் பிள்ளை*

*சக்தி நகர், ஆண்டகளூர் அஞ்சல்*

இராசிபுரம் வட்டம் சேலம் மாவட்டம்

அச்சிட்டோர்

பொன்முடி அச்சகம்

அம்மாப்பேட்டை சேலம்-636003

# முகவுரை

'இன்னிசை இருநூறு' என்பது ஒரு நீதி நூல். நாலடியார் நான்மணிக்கடிகை முதலிய பழைய நீதி நூல்களைப் போன்று சொல்வளமும் பொருள் வளமும் செறிந்து விளங்குவது. தன்பால் இருநூறு ஒரு விகற்ப இன்னிசை வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

அதிகாரம் ஒன்றுக்குப் பத்து வெண்பாவாக இந்நூல் இருபது அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் அவ்வப்போது பாடிய தனிப் பாக்களைத் திரட்டி அதிகார அடைவு செய்து நூலாக்கி அளித்தவர் திருவாளர் **மு. ரா. கந்தசாமிக் கவிராயரே** ஆவர். அவர் அங்ஙனம் செய்யாதிருப்பின் இந்நூல் வெளி வந்திராது; அழிந்தே போயிருக்கும். அவர் செய்த நன்றியைத் தமிழகம் என்றும் மறவாது போற்றும் என்பது திண்ணம்.

திருக்குறள் கூறுங் கருத்துக்களை நன்கு விளக்குவன வாகவே பல பாக்கள் அமைந்துள்ளன; சில பாக்கள் திருக்குறட் பாக்களை ஈற்றடிகளாகக் கொண்டு விளங்குகின்றன; ஏனைய நூல்கள் கூறுங் கருத்துக்களமைந்த பாக்களும் உள்ளன; பிற நூல்களுட் காணப்படாத புதிய புதிய கருத்துக்களமைந்த பாக்களும் உள்ளன.

எடுத்துக் காட்டுக்களாக வகைக்கு ஒவ்வொன்று காட்டுவேன். நூல் முழுவதுங் கற்று இதன் அருமை பெருமை இனிமை முதலிய பண்புகளை அன்பர்கள் அறிந்து போற்றுவார்களாக.

> "நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
> கினத்தியல்ப தாகும் அறிவு"

என்னும் திருக்குறட்பாவிற்கு விளக்கம் கூறுவார் போன்று மழைநீர் சிப்பியில் விழுந்தால் முத்து ஆகும், தாமரை இலையின்மேல் விழுந்தால் முத்துப் போன்ற வடிவத்தையடையும், பாலை நிலத்தில் விழுந்தால் அழிந்து போகும், ஆற்றில் விழுந்தால் உண்ணும் நீர் ஆகும், கடலில் விழுந்தால் உவர் நீர் ஆகும். அதுபோல் மக்கள் அறிவும் சேர்ந்து ஒழுகும்

இனத்தின் இயல்பால் பற்பல மாறுபாடுகளை அடையும். ஆதலால், தம் அறிவு மாட்சிமைப்பட விரும்புவோர் அறிவான் மிக்க நல்லோரைச் சார்ந்து ஒழுக வேண்டும் என்பது தோன்ற

"சிப்பி முளரிசுரம் ஆறு திரைவீழ்நீர்
ஒட்பத் தரளமஃ தொப்பழிவுண் ணீருவராம்
அப்படியே மாந்த ரறிவு மினத்தியல்பால்
பற்பல மாறு படும்''

எனப் பாடியிருத்தல் காண்க.

"கற்பன கல்லாக் கயவர் கருமங்கள்
நிற்பன அல்ல நினைந்தன செய்வரால்
அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது''

இந்த இன்னிசை வெண்பாவின் ஈற்றடி இரண்டும் திருக்குறட்பாவாக இருத்தல் காண்க

"முல்லை குறிஞ்சி முறையிற் றிரிந்துபெயல்
இல்லாமை யாற்பாலை யென்னப் படிவமுறும்
வல்லார் செயலும் மனமும் புகழறம்
புல்லாவேல் புன்மை புகும்''

இப்பாவின்கண்

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்
காலை''

என்னும் சிலப்பதிகார அடிகளின் கருத்து மிளிர்வதைக் காணலாம்.

கரும்பொடு சேர்த்து வளர்த்தாலும் வேம்பு இனிமை காட்டா; இரும்பொடு சேர்ந்து கிடப்பினும் பொன்னின் இயல்பு மாறா; நீர் கரும்பொடு கலப்பின் இனிக்கும், வேம்பொடு கலப்பின் கசக்கும். அவைகளை போன்று மேலோரொடு சேர்ந்து பயின்றாலும் கீழோர் தீமையே செய்வர்; கீழோரொடு சேர்ந்திருந்தாலும் மேலோர் நன்மையே செய்வர்; மேலோரொடு சேர்ந்தால் நன்மையும், கீழோரொடு சேர்ந்தால் தீமையும் புரிந்து வருவர் இடையாயோர் என்னும் பொருளை அமைத்து

''கரும்பொடு கூட்டினும் வேம்பினிமை காட்டா
இரும்புட னொன்றினும் ஏமமியல் குன்ரு
கரும்பாநீர் வேம்பா மவற்றிற் கலப்பின்
விரும்பிடைமேல் கீழுமன்ன வே''

எனப் பாடியிருத்தல் காண்க.

பயன் கருதி எல்லா மரத்தினையும் வெட்டும் கோடரி தனக்குக் காம்பாக அமைந்துள்ள மரத்தினை ஒருபோதும் வெட்டாது; நன்மை கருதிப் பகைவரைக் கொல்லுதல் அறமே எனினும், அவர்கள் விரும்பி வந்து தம்பால் அடையின் அவர்களை அன்புடன் காத்து வருதல் வேண்டும் என்பதை ஒரு பாவில் அமைத்து விளக்கியுள்ளார். அந்தப் பாவினைக் காண்க.

கொல்லும் பயன்குறித்துக் கோடரி யெம்மரனும்
கொல்லாதா லஃதுறிற் காம்பெனக் கூடாரை
நல்ல குறித்தடல் நன்றெனினும் நாடியவர்
புல்லியக்கால் காக்க புரிந்து

இன்னோரன்ன பாடல்கள் பல. ஈண்டு விரிப்பிற் பெருகும் அவை பல்காற் பயின்று சுவைத்தற்குரியன.

இந்நூலாசிரியர் சங்ககாலப் புலவர் பெருமக்களோடு சேர்த்து எண்ணுதற்குரியவர்; நுண்மாண் நுழைபுலம் உடையவர்; அரசஞ் சண்முகனார் என்னும் பெயரினர். அவரைப் பற்றிய பிற செய்திகளை நூலாசிரியர் வரலாற்றுக் குறிப்பிற் காண்க.

'இன்னிசை யிருநூறு' என்னும் இந்நூலுக்கு இந்நாள் வரை யாரும் உரை எழுதவில்லை. மூலம் மாத்திரம் கி. பி. 1913 ஆம் ஆண்டில் அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது அதுவும் இப்போது கிடைப்பதில்லை. எனவே எனக்குக் கிடைத்த ஒரு அச்சுப் புத்தகத்தை வைத்துக் கொண்டு என் சிற்றறிவிற்கெட்டியவாறு பொழிப்புரை எழுதி வெளியிடலானேன்

இந்நூலை வெளியிடுதற்கு ஊக்குவித்துப் பேருதவியும் செய்தருளிய பெருந்தகையாளர், வரையாதளிக்கும் வள்ளல் J. K. K. நடராஜா அவர்களே ஆவர். பலநூற்பாலைகளுக்குத் தலைவராகிய அவர்கள் செய்துவரும் அறச்செயல்களுக்கு ஓர் எல்லையில்லை. இருப்பினும் சில கூறுவேன்;

J. K. K. ரங்கம்மாள் நர்சரி ஸ்கூல், J.K.K. ரங்கம்மாள் மகளிர் உயர்நிலைப் பள்ளி, J. K. K. ரங்கம்மாள் இளநிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளி, J. K. K. அலமேலு அங்கப்பன் மகளிர் கலைக்கல்லூரி முதலியவைகளை அமைத்துக் கண்ணெனக்

காத்துக் கல்வியை வளர்த்து வருவதோடு பல கோயில்களையும் நிறுவி மக்களிடையே கடவுட் பற்றையும் வளர்த்து வருகிறார்.

அவர் பேருதவியால் பல குடும்பங்கள் நல்வாழ்வை அடைந்துள்ளன; அடைந்தும் வருகின்றன; மேலும் அடைந்து வருமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

அவர்களால்தான் இந்நூல் வெளி வருகின்றது. அவர் அருள் தான் கலையை வளர்க்கும் பொருள்.

எல்லாம் வல்ல இறைவனருளால் நீண்ட வாழ்நாளும், நிறைந்த பேராற்றலும் வாய்ந்து எண்ணிய அனைத்தும் எண்ணியாங்கு எய்தி இன்புற்று வாழ்வாராக.

சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய எளியேன் பேரறிஞர்களே செய்வதற்குரிய இச்செயலைத் துணிந்து செய்துள்ளேன். அதனால் உரையிற் பல குறைகள் இருத்தல் கூடும். இந்நூலைப் பயிலும் அன்பர்கள் அவற்றைத் தெரிவிப்பின் பணிவுடன் ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் அக்குறைகளை நீக்கி விடுவேன் என உறுதி கூறுகிறேன்.

சக்தி நகர்
ஆண்டகளூர் அஞ்சல்
27—7—75

இங்ஙனம்
**புலவர் ஆ பொன்னுசாமிப் பிள்ளை**
உறுப்பினர், தமிழகப் புலவர் குழு

# நூலாசிரியர் வரலாறு

'இன்னிசை யிருநூறு' என்னும் இந்நூலின் ஆசிரியர் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த திரு. **அரசஞ் சண்முகனாரே** ஆவர். அவர் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்தில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த திரு. **அரசப்ப பிள்ளையின்** மூத்த மகனாகக் கி. பி. 1868ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் செவ்வாய்க் கிழமை தோன்றினார். அவர் தாயார் பெயர் **பார்வதியம்மை** என்பது.

அவர் ஐந்தாம் வயதிலிருந்து பன்னிரண்டாம் வயது முடியுமளவும் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பயின்றார். அக்காலத்தில் முறையே எழுத்திலக்கணம் நிகண்டு சில அந்தாதி நூல்கள் ஆகியவற்றை நன்கு பயின்று தமிழில் சிறிதளவு தேர்ச்சி பெற்றார். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து அவருக்குக் கல்வி கற்பித்தவர் திரு. **வே. அழகர்சாமித் தேசிகராவார்.**

பின்னர் அவ்வூரில் உள்ள கிண்ணி மடத்தின் தலைவராக அக்காலத்தில் அமர்ந்திருந்த பல்கலைக் குரிசில் **சிவப்பிரகாச சுவாமிகளிடத்தில்** முறையே நான்காண்டுகள் பயின்று தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், புராணங்கள், சித்தாந்த நூல்கள் முதலியவற்றில் தேர்ச்சி பெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் பெரும் புலவரானார்.

பதினாறும் வயதிலேயே திருமணம் செய்து வைத்தார்கள். வாழ்க்கைத் துணைவியாரின் பெயர் காளியம்மை என்பது. இருவரும் கருத்து ஒருமித்து இல்லறத்தை யாரும் மதிக்குமாறு நன்கு நடத்தி வந்தனர். எனினும் மக்கட்பேறு வாய்க்காதது மிகவும் வருந்தத்தக்கது.

மதுரை மாநகரிலுள்ள சேதுபதி உயர்நிலைப்பள்ளியிலும், தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கலாசாலையிலும் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

மகா மகோபாத்தியாய பண்டிதமணி **கதிரேசஞ் செட்டியார்** இவருக்கு உற்றுழியுதவும் பெற்றியராகவும், தலைசிறந்த நண்பராகவும் விளங்கினார்,

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், இலக்கணக் கதிர் திரு. நாராயண ஐயங்கார், இலக்கியக் கடல் ரா. இராகவ ஐயங்கார், தனித் தமிழ் ஆசான் மறைமலையடிகள், தேசியக் கவி பாரதியார் முதலியவர்கள் இவர்பால் கொண்டிருந்த நன்மதிப்பு அளவிடற்கரியது.

இவரியற்றிய நூல்கள் சிதம்பர விநாயகர் மாலை, மாலை மாற்று மாலை, இன்னிசை யிருநூறு, வள்ளுவர் நேரிசை, பஞ்சதந்திர வெண்பா, மதுரைச் சிலேடை, நவமணிக் காரிகை நிகண்டு, திருக்குறளாராய்ச்சி, நுண்பொருட் கோவை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதலியன ஆகும்

பல்லாற்றானும் சிறப்பு எய்தியிருந்த இப்புலவரேறு நாற்பத்தேழாம் வயதில் (கி. பி. 1915ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினோராம் நாள்) தம் வழிபடு கடவுளாகிய சொக்கலிங்கப் பெருமானின் திருவடி நிழலை அடைந்தார், இவர் பிரிவு தமிழகத்திற்குப் பேரிழப்பு ஆகும்; பிரிவு கேட்டு இரங்காத அறிஞர்கள் இல்லை.

அன்னார் வரலாற்றைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'அரசஞ் சண்முகனார்' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

வாழ்க அவர் புகழ்! வெல்க தமிழ் மொழி!

இங்ஙனம்
**புலவர் ஆ. பொன்னுசாமிப் பிள்ளை**
உறுப்பினர், தமிழகப் புலவர் குழு

சக்தி நகர்
ஆண்டகளூர் அஞ்சல்
27—7—75

இன்னிசை இருநூறு என்னும் இந்நூலை
வெளியிட்டருளிய தமிழ் நாட்டின் கல்வியமைச்சர்

## மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப்

# பாராட்டி வாழ்த்திய வாழ்த்து

*மாபெருஞ் சீர்த்தி வண்டமிழ்ப் புலவன்*
*நுண்மாண் நுழைபுல முள்ளோன் நூலோர்*
*வியந்தினி தோதும் மேதகு சீலன்*
*அரசஞ் சண்முகன் எனும்பே ரறிஞன்*

*உலகுக் குறுதி உரைத்திட லாத்த*
*இன்னிசை இருநூ றென்னுமிந் நூலுக்*
*கெளியேன் என்னால் இயன்றவா றுரையை*
*எழுதி ஈந்தனென் பழுதற அதனை*
*அச்சிற் பதிப்பித் தளித்தனர்; அரிமாப்*
*பதிப்பகத் தார்அவர்க் கென்றும் என்றன்*
*வணக்கமும் நன்றியும் வாழ்த்தும் உரியன*
*ஆகும். அவையே அன்றி யான்செய்*
*கைம்மா றொன்றிலை இம்மா நிலத்தில்*
*நல்லன எல்லாம் வாய்ந்துபல் லூழி*
*வாழ்க! அன்னார் வளர்க! அவர்புகழ்.*

*காட்சிக் கெளியன் மாட்சிகூர் பெரியன்*
*பல்கலைக் குரிசில் பார்மிசை வழங்கும்*
*கலைகள் பலவும் நிலைபெறத் தமிழில்*
*தோன்றிடச் செய்யும் தோன்றல் மேதகு*
*கல்வி யமைச்சாய்ச் சொல்வளத் தொடுபொருள்*
*வளமுஞ் சிறக்கத் தமிழினை வளர்ப்போன்*
*நெடுஞ்செழியன் என்னும் பெருந்தகை அந்த*
*இன்னிசை இருநூ றென்னும் நூலைப்*
*பார்மிசை எங்கும் பரவிடத் தன்பொற்*
*கையால் வெளியிட் டருளினன் அதனால்*

*மாண்பார் வள்ளுவன் வாய்மையே போன்றது*
*பயில்வார்க் குறுதி பயந்து விளங்கிடும்*
*தமிழ்நா டுலகில் தலைசிறந் தோங்கத்*
*தன்னலங் கருதா துழைக்குமவ் வண்ணல்!*
*தவலருஞ் சிறப்புடன் எவரும் போற்ற*
*எல்லா நலனும் எய்திப்*
*பல்லூழி வாழிய! பார்மிசை இனிதே.*

சக்தி நகர்
25—9—75

இங்ஙனம்
புலவர் ஆ. **பொன்னுசாமிப் பிள்ளை**
உறுப்பினர், தமிழகப் புலவர் குழு

# பொருளடக்கம்


முகவுரை

நூலாசிரியர் வரலாறு

நாவலர்க்குப் பாராட்டு வாழ்த்தியல்

| | | |
|---|---|---|
| 1 | வாழ்த்து | 1 |
| 2 | அறம் | 7 |
| 3 | இல் வாழ்க்கை | 13 |
| 4 | கூடாவொழுக்கம் | 19 |
| 5 | நல்வினையாட்சி | 24 |
| 6 | தீவினை அச்சம் | 29 |
| 7 | ஈகை | 34 |
| 8 | துறவு | 39 |
| 9 | வெகுளாமை | 45 |
| 10 | இன்னா செய்யாமை | 50 |
| 11 | பொதுவியல் | 56 |
| 12 | கல்வி | 61 |
| 13 | முயற்சி | 66 |
| 14 | பொருளாட்சி | 71 |
| 15 | செருக்கின்மை | 77 |
| 16 | நட்பு | 83 |
| 17 | பகை | 89 |
| 18 | மேலோரியல்பு | 94 |
| 19 | கீழோரியல்பு | 99 |
| 20 | மேல்கீழ் நடுஇயல்பு | 105 |

# 1. வாழ்த்து

1. நன்னெறிமுந் நீரி னறிவென்னும் நாழியான்
இன்னிசை வெண்பா முகந்திசைப்ப எண்ணுதூஉம்
பொன்னிறத்து மால்விடைப் புத்தேள் இடம்பிரியா
அன்னை சிறுவ ரடி.

***பொழிப்புரை:*** *நன்னெறியாகிய கடல் நீரில் அறிவு என்று சொல்லப்படும் நாழியால் சிறிதளவு முகந்து இன்னிசை வெண்பாவாகக் கூற அருள்புரியுமாறு திருமகளை மார்பகத்தே கொண்டுள்ள திருமாலாகிய இடபத்தை ஊர்தியாகவுடைய சிவபெருமான், அவர் இடப்பாகத்தினின்றும் நீங்காத உலகம்மை, அவர்களின் மக்கள் இருவர் ஆகிய நால்வருடைய திருவடிகளையும் எண்ணி வாழ்த்தி வணங்குவோம்.*

விளக்கவுரை: முந்நீரின் நாழியான் முகந்து வெண்பா இசைப்பப் புத்தேள், அன்னை, சிறுவரடி எண்ணுதூஉம் எனக் கூட்டிப் பொருள் கொள்க. நன்னெறி முந்நீர், அறிவென்னும் நாழி என்பன உருவகம். எண்ணுதூஉம்-இன்னிசையளபெடை.

முந்நீர்—கடல். பொன்—திருமகள். நிறம்—மார்பு. மால்—திருமால். விடை—இடபம். புத்தேள்—தேவன். இடம் பிரியா அன்னை—உமையம்மை. சிறுவர்—பிள்ளையாரும் முருகனும்.

இறைவனை வணங்கித் தொடங்கும் செயல் இனிது முடியுமென்பது ஆன்றோர் துணிபு. (க)

2. போற்றுதூஉந் தன்க ணுயிரெலாம் பூத்தொடுங்கத்
தோற்ற மழிவின்றித் தோன்றுந் துகளிலியை
ஊற்றுக்கோ லென்ன வுயிர்த்துணை யாகறன்
ஆற்றிப் பிறப்பறுக்கு மாறு.

***பொழிப்புரை:*** *ஊன்றுகோல் போன்று உயிர்க்குத் துணையாக உதவும் அறத்தினைச் செய்து பிறப்பினை ஒழிக்க உதவி*

*யருளுமாறு தன்பால் எல்லா உயிர்களும் தோன்றியழியா நிற்கத் தான் தோற்றமும் அழிவும் இல்லாமல் என்றும் தோன்றும் குற்றமற்ற இறைவனை வாழ்த்துவோம்.*

**விளக்கவுரை:** அறன் ஆற்றிப் பிறப்பு அறுக்குமாறு துகளிலி யைப் போற்றுதூஉம் எனக் கூட்டிப் பொருள் கொள்க. ஊன்றுகோல் என்பது எதுகை நோக்கி ஊற்றுக்கோல் என வலித்தல் விகாரம் பெற்று நின்றது. என்ன-உவம உருபு.

தோற்றம் அழிவு-உம்மைத் தொகை; பிறத்தலும் இறத்தலும் என்பது பொருள்.

இறைவனை இடைவிடாது வாழ்த்துவோர் அறநெறியில் வழு வாது நின்று வீடு பெறுவர் என்பது கருத்து. (உ)

3. அங்கண் விசும்புமுத லைந்தொடு பல்லுயிரைச்
செங்கதிர்ச் செல்வனைத் திங்களைப் போற்றுதூஉம்
எங்கும் நிறைந்தொளி ரீறி லிறைவற்குத்
துங்க வடிவாத் துணிந்து.

*பொழிப்புரை:* *எங்கும் நிறைந்து விளங்கும் அழிவில் லாத இறைவனுக்குரிய வடிவமாகத் துணிநது அழகிய இட மகன்ற வான் முதலாக உள்ள ஐந்தையும், பல உயிர்களையும் கதிரவனையும், திங்களையும் போற்றுவோம்.*

**விளக்கவுரை:** இறைவற்கு வடிவாத் துணிந்து போற்றுதூஉம் எனக் கூட்டுக. விசும்பு முதல் ஐந்து—வான் வளி தீ நீர் மண் என் பன. செங்கதிர்ச் செல்வன்—கதிரவன். துங்கம்—தூய்மை. ஈறு—அழிவு.

இறைவனே விசும்பு முதலாகவுள்ள எல்லாப் பொருள்களாகவும் விளங்குகின்றான். ஆதலால் அனைத்தையும் அவன் திருவுருவாகவே எண்ணிப் போற்றுதல் வேண்டுமென்பது கருத்து. (௩)

4. நாமகட் போற்றுதூஉம் நாமகட் போற்றுதூஉம்
தோமி லிறைவ னடிப்புணையாற் றுன்பமெனும்
நாமக் கடனீந்த நல்லறிவு மீகானை
ஏம மெனவீத லின்.

*பொழிப்புரை:* *குற்றமற்ற இறைவன் திருவடிகளாகிய மரக்கலத்தால் அச்சத்தைத் தருகின்ற பிறவித் துன்பமாகிய கடலைக் கடக்கத் தூய பேரறிவாகிய கப்பலோட்டியைச்*

*சேமநிதி போன்று ஈதலால் கலைமகளை வாழ்த்துவோம்! கலைமகளை வாழ்த்துவோம்!*

**விளக்கவுரை:** புணையால் கடல் நீந்த மீகானை ஈதலின் நாமகட் போற்றுதுாஉம் எனக் கூட்டிப் பொருள் கொள்க. தோம்—குற்றம். புணை—மரக்கலம, நாமம்—அச்சம், மீகான்—கப்பலோட்டி, ஏமம்—சேமநிதி.

பேரறிவே வீடுபேற்றுக்குக் காரணமாதலின் அதனை அருளும் நாமகளைப் போற்றுதும் என்றார். (௪)

5. நூலினைப் போற்றுதூஉம் நூலினைப் போற்றுதூஉம்
காலங் கருதாது காய மிறுவரையும்
வாலறிவ னற்றாள் வணங்கிப் பிறப்பறுக்கச்
சாலத் துணையா தலான்.

***பொழிப்புரை:*** *காலங் கருதாமல் உடலினின்றும் உயிர் நீங்குமளவும் மெய்யறிவினையுடைய இறைவனின் நல்ல தாளை வணங்கிப் பிறப்பினை நீத்து வீடுபேறு அடையப் பெரிதும் துணையாக இருத்தலால் நூலினைப் போற்றுவோம்! நூலினைப் போற்றுவோம்!*

**விளக்கவுரை:** காலம் கருதாது இறுவரையும் நற்றாள் வணங்கிப் பிறப்பு அறுக்கத் துணையாயுதவுதலால் நூலினைப் போற்றுதூஉம் நூலினைப் போற்றுதூஉம் என முடிபு கொள்க. காயம் இறுவரையும்-இறக்குமளவும். வாலறிவு—மெய்யுணர்வு. பிறப்பு அறுதல்—வீடு பேற்றினையடைதல். பிறவிப் பிணியைப் போக்கும் இயல்புடைமை பற்றி நற்றாள் என்றார்.

கல்வியறிவிற்குப் பயன் வாலறிவனின் திருவடிகளைப் பணிந்து பிறப்பினை ஒழித்தலே ஆகும் என்பது கருத்து. (௫)

6. நீத்தாரைப் போற்றுதூஉம் நீத்தாரைப் போற்றுதூஉம்
நேத்திர மென்ன வுலகை நெறிநிறீஇ
மூத்த அறிவினு னூற்பொருள் முற்காட்டி
ஆத்தனையும் காட்டிவிட லான்.

***பொழிப்புரை:*** *கண் போன்று மக்களை நன்னெறியில் நிறுத்தித் தம் பேரறிவினால் நூற் பொருள்களை முன்னர் உணர்த்தி இறைவனையும் காட்டி விடுதால் முற்றத் துறந்த முனிவர்களைப் போற்றுவோம்! முற்றத் துறந்த முனிவர்களைப் போற்றுவோம்!*

விளக்கவுரை: நீத்தல்—பற்று விடுதல். நேத்திரம்—கண். 'நிறீஇ'-சொல்லிசையளபெடை. மூத்த அறிவு—பேரறிவு. ஆத்தன்—கடவுள். 'நேத்திரம்'-உபமானம்; 'நீத்தார்'-உபமேயம்.

உலகை நெறிநிறீஇ நூற்பொருள் காட்டி ஆத்தனையும் காட்டி விடலால் நீத்தாரைப் போற்றுதூஉம் நீத்தாரைப் போற்றுதூஉம் என முடிபு காண்க.

மக்களுயிர்க்கு உற்ற துணையாவார் முற்றத் துறந்த முனிவரே என்பது கருத்து. (சு)

7. தூய மலர்தூ யிறைஞ்சுதூஉம் தொண்டியற்றித்
தாய்தந்தை யாசா னிவர்தம்மைச் சார்பாய
காயமு நல்லறிவு மீந்து கடவுளை
ஆயத் துணைநிற்ற லான்.

*பொழிப்புரை:* வீடுபேற்றுக்குத் துணையாகவுள்ள உடலையும் மெய்யறிவையும் ஈந்து கடவுளை ஆராய்ந்து அறியத் துணையாக இருத்தலால் தாய் தந்தை ஆசான் ஆகிய இம் மூவரையும் தூய்மையான மலர்களைத் தூவி வணங்கி வழிபாடு செய்வோம்.

விளக்கவுரை: காயமும் அறிவும் ஈந்து கடவுளை ஆயத் துணை நிற்றலான் தாய் தந்தை ஆசான் இவர்தம்மை மலர் தூய் இறைஞ்சித் தொண்டு இயற்றுதூஉம் என முடிபு கொள்க.

'இறைஞ்சுதூஉம் தொண்டியற்றி' என்பதை இறைஞ்சித் தொண்டியற்றுதூஉம் என விகுதி பிரித்துக் காட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

தூய—தூய்மையான தூய்—தூவி. ஆசான்—ஆசிரியர். சார்பு—துணை. காயம்—உடல். ஆய—ஆராய. காயத்தை ஈந்து வளர்த்த தாய்தந்தையரையும் நல்லறிவை ஈந்து நன்னெறிப்படுத்தும் ஆசானையும் என்றும் மறவாது போற்றவேண்டுமென்பது கருத்து. (எ)

8. வானம் பரவுதூஉம் வானம் பரவுதூஉம்
ஞான முதல்வ னருள்போல ஞாலக்குப்
பானமு மாகி வளமும் பலவளித்துத்
தானே துணையா தலான்.

*பொழிப்புரை:* இறைவன் அருள்போலக் கைம்மாறு கருதாது உலகத்துயிர்கட்குப் பருகும் நீரும் ஆகி உணவு முதலிய வளங்களையும் ஆக்கிக் கொடுத்து வாழ்க்கைக்குத் துணை

*யாக நிற்றலால் மழையை வாழ்த்துவோம்! மழையை வாழ்த்துவோம்!*

விளக்கவுரை: ஆகி அளித்துத் துணையாதலான் பரவுதூஉம் பரவுதூஉம் என முடிபு கொள்க. வானம்—மழை. ஞான முதல்வன் — ஞானத்தைத் திருமேனியாகவுடைய இறைவன்; ஞானத்தால் உணரப்படும் முதல்வன் எனினும் பொருந்தும். மழையின்றேல் உண்ணும் உணவும் பருகும் நீரும் பல்வகை வளனும் இலவாம் என்பது வெளிப்படை. 'ஞாலக்கு'-அத்துச்சாரியை தொக்குநின்றது.

> ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉம் மழை'' —குறள் (அ)

9 **சிந்தித்து வாழ்த்துதூஉஞ் சிந்தித்து வாழ்த்துதூஉம்**
**நந்தா வறத்தை இறைவனை நாடுயிர்க்கு**
**முந்துறத் தன்னையு மேனைய மூன்றையும்**
**தந்தே துணையா தலான்.**

*பொழிப்புரை: இறைவன் திருவடிகளை அடைய விரும்பி முயலும் மக்களுயிர்க்கு முன்னர்த் தன்னையும் பின்னர்ப் பொருள் இன்பம் வீடு என்னும் மூன்றையும் அளித்துத் துணையாக நிற்றலான் அழிவில்லாத அறத்தினை இடைவிடாது நினைத்து வாழ்த்துவோம்.*

விளக்கவுரை: உயிர்க்குத் தன்னையும் மூன்றையும் தந்து துணையாவதால் அறத்தைச் சிந்தித்து வாழ்த்துதூஉம் என முடிபு கொள்க. தன்னை என்பது அறத்தினை உணர்த்திற்று. ஏனைய மூன்று—பொருள் இன்பம், வீடு என்பன. சிந்தித்தல்—நினைத்தல்.

'நந்தா'-ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'தந்தே' என்பதில் 'ஏ'-அசைநிலை.

> சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்ினூஉங்
> காக்க மெவனோ வுயிர்க்கு. —குறள்
> அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
> மறத்தலி னூங்கில்லை கேடு. —குறள் (கூ)

10. **அன்பினைப் போற்றுதூஉம் அன்பினைப் போற்றுதூஉம்**
**அன்பும் அறிவனும் வேறென்ப வாய்விலார்**
**அன்பே வடிவா யறிவ னமர்தலின்**
**அன்பே யுயிர்காத்த லான்.**

***பொழிப்புரை:*** *ஆராய்ந்தறியும் அறிவில்லாதவர்கள் அன்பு வேறு அறிவன் வேறு என்று கூறுவர்; அன்பு வடிவமாகவே அறிவன் அமர்ந்திருத்தலாலும் அவ்வன்பே உயிர்களைக் காத்து வருதலாலும் அன்பினை வாழ்த்துவோம்! அன்பினை வாழ்த்துவோம்!*

**விளக்கவுரை:** ஆய்விலார் வேறு என்ப; (அது பொய்). அமர்தலின் காத்தலான் அன்பினைப் போற்றுதூஉம் அன்பினைப் போற்றுதூஉம் ~~உம்~~ என முடிபு கொள்க. அறிவன்—கடவுள்.

அன்பே வாழ்க்கைக்கும் வீடு பேற்றுக்கும் மூலகாரணமாக உள்ளது என்பது கருத்து. (க0)

# 2. அறம்

11. மெய்யறிவ னூலின் விதித்த விலக்கிய
செய்தலுஞ் செய்யா விடலுந் திகழறன்
மைதீர் மனநாவாற் காயத்தால் வாய்ப்பன
செய்கவெஞ் ஞான்றும் தெரிந்து.

*பொழிப்புரை:* மெய்யறிவினையுடைய இறைவன் அருளிய நூலில் விதித்தன செய்தலும், விலக்கியன செய்யாது விடுதலும் விளங்குகின்ற அறங்களாகும்; குற்றமற்ற மனத்தாலும், நாவாலும், உடலாலும் பொருந்துவனவற்றை ஆராய்ந்து எப்பொழுதும் இடைவிடாது செய்து வருக.

விளக்கவுரை: வாய்ப்பன தெரிந்து எஞ்ஞான்றும் செய்க என மாற்றிப் பொருள் கொள்க. மெய்யறிவன்—இறைவன். மை—குற்றம் வாய்ப்பன...பொருந்துவன. 'திகழறன்'-வினைத்தொகை. 'மனநா'-உம்மைத் தொகை. 'ஆல்' உருபை மனத்தோடுங் கூட்டுக. 'செய்க'-வியங்கோள்.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல் —குறள் (க)

12. ஞானியெனத் தேவனென நல்லனெனச் செல்வனெனக்
கோனெனப்பல் கோடி கொடுக்குஞ் சிறப்பினையும்
ஈனும் மறந்தா லிடர்பலவும் ஈனுமால்
ஆனது செய்க வறன்.

*பொழிப்புரை:* அறமானது தன்னைச் செய்பவனுக்கு ஞானி எனவும் தேவன் எனவும் நல்லன் எனவும் செல்வன் எனவும் மன்னன் எனவும் புகழப்படுதல் முதலாகவுள்ள பல கோடி நலங்களையும் கொடுக்கும்; வீடு பேற்றினையும் அளிக்

கும் அதை மறந்து செய்யாமலிருந்தால் துன்பங்கள் பலவற்றையும் கொடுக்கும். ஆதலால் இடைவிடாது அறத்தினைச் செய்து வருக.

விளக்கவுரை: 'பல்கோடி' என்பது பன்மை குறித்து நின்றது; பல நலங்களையும் என்பது பொருள். எல்லாப் பேற்றினும் சிறந்தது ஆதலின் வீடு சிறப்பு எனப்பட்டது.

இம்மை மறுமைப் பயன்களையும் வீடு பேற்றினையும் தரவல்லது அறனே என்பது கருத்து.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. —குறள் (௨)

13. சிவா நினக்கே யோவா தறவினை செய்வேன்
அவாவேன் பிறவன் பளியெனல் வேண்டும்
உவாமதி பாம்போ டுறுவது போலும்
அவாவொடு கூடு மறன்.

*பொழிப்புரை*: 'சிவபெருமானே! நின்பொருட்டு இடைவிடாமல் அறச்செயல்களைச் செய்து வருவேன். பிற பொருள்களை விரும்பேன். அன்பினை அளித்தருள்' என நின்பால் வேண்டிக்கொள்ளும் எண்ணத்தினை எனக்குக் கொடுத்தருளவேண்டும். பிற பொருளை விரும்பி அதனை அடையும் பொருட்டுச் செய்யும அறமானது, நிறைமதி இராகு என்னும் பாம்புடன் சேர்ந்திருத்தல் போல் ஆகும.

விளக்கவுரை: பாம்புடனுற்ற உவாமதி தன் ஒளி குன்றிக் காணப்படுதல் போல் அவாவொடு செய்யும் அறத்தின் பயன் குன்றும். உவாமதி—நிறைமதி. பாம்பு—இராகு என்னும் கோள்.

இறைவனிடத்து அன்புடையனாகும் பேற்றினைப் பெறுதலே அறத்தினாலடையத் தகும் பயனாகும் என்பது கருத்து.

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம். —குறள் (௩)

14. சினகரம்போய்த் தீர்த்தம்போய்ச் செய்யினும் நன்மை
வினைவேறு சிந்தையும் வேறாகு மாயின்
மனநற் றளியொளிர் வாலறிவற் காணார்
தினையளவும் நீங்கார் திருக்கு.

*பொழிப்புரை:* கோயில்கட்குச் சென்றும் புண்ணிய தீர்த்தங்கட்குச் சென்றும் அறங்களைச் செய்து வந்தாலும் செயலும் சொல்லும் எண்ணமும் வேறு வேறாக இருக்குமாயின் மனமாகிய நல்ல கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் காணார். தினையளவும் மாசு நீங்கப்பெறார்.

விளக்கவுரை: சினகரம்—கோயில். தீர்த்தம்—புண்ணிய தீர்த்தம். நன்மை—அறம். வினை—செயல். சிந்தை—எண்ணம். இனம் பற்றிச் 'சொல்' வருவித்து உரைக்கப்பட்டது. தளி—கோயில். வாலறிவன்—மெய்யுணர்வினையுடைய கடவுள். திருக்கு—குற்றம்.

மனத்துக்கண் மாசு இலனாதலே அறத்திநுக்கு இன்றியமையாததாகும் என்பது கருத்து.

'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'—குறள் (௪)

15. நன்றென்ப கண்ணப்பர் செய்கருமம் நாடுங்கால்
அன்றென்ப தக்கனார் செய்த அறவினை
ஒன்றும் மனத்தியல்பால் சொல்லும் உறுவினையும்
என்றிவை மாற லியல்பு.

*பொழிப்புரை:* கண்ணப்பர் செய்த கொலைத் தொழிலை அறச் செயல் என்று உலகோர் கூறுவர்; தக்கனார் செய்த வேள்வியாகிய அறச் செயலைத் தீய செயல் என்றே அறிஞர் கூறுவர். ஆராயுமிடத்துப் பொருந்திய மனத்தின் இயல்பால் சொல்லும் செயலுமாகிய இவை மாறுபடுதல் இயல்பு

விளக்கவுரை: மனமாசறுத்தோர் பிறர் நலங்கருதிக் கூறும் கடுஞ்சொல்லும் செய்யும் தீய செயலும் நல்ல அறங்களே ஆகும்; மனமாசு அறாதவர் தம் நலங்கருதிக் கூறும் இன்சொல்லும் நல்ல செயலும் தீயனவேயாகும் என்பது கருத்து.

நன்று—அறம். அன்று—அறம் அன்று (பாவம்). உறுவினை—உற்ற செயல். மாறல்—தீயன நல்லன ஆகவும், நல்லன தீயன ஆகவும் மாறுதல்.

மனநலனே அறத்தினுக்கு முதற்காரணம் என்பது கருத்து. (௫)

16. சொல்லுழவர் வித்திடா தெய்ப்பிற் றுகளெய்தும்
செல்வறப்பிற் கேடுறினுஞ் சேரா பழியவர்க்கு
நல்ல வினைதொடங்க னங்கடனா முற்றுக்கால்
இல்லையே நிந்தை யெமக்கு.

*பொழிப்புரை:* உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணி என்று சொல்லப்படும் உழவர் வயலில் விதைகளை விதைக்காமல் மடிந்திருப்பின் அவர்களை வறுமையும் பழியும் அடையும்; வித்து இடுதலால் முளைத்த பயிர் மழை பெய்யாமையால் அழிந்து போனாலும் அவர்கட்குப் பழி உண்டாகா. நல்ல செயல்களைச் செய்யத் தொடங்குதல் நம் கடமையாகும்; அது முடிவு பெறாமற் போனாலும் நமக்குப் பழியில்லை.

விளக்கவுரை: வித்து—விதை. எய்ப்பின்—மடிமையை மேற்கொண்டிருப்பின். துகள்—குற்றம்(வறுமையும் பழியும்). செல்—மழை. நிந்தை—பழி. இவ்வெண்பாவில் எடுத்துக் காட்டுவமையணி அமைந்திருத்தல் காண்க. முற்றுக்கால்—பயன்தராத வகையில் இடையில் அழிந்துபோனாலும் நிந்தை—பழி.

ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு நல்வினைகளைச் செய்து வரவேண்டும் என்பது கருத்து. (கசு)

17. தினையளவு மீசன் செயல்கடப்பார் யாரே
மனையே பொருளே மகவே யாதானும்
வினையா லிழப்பினு மேவினும் பன்மேநாய்
இனையா தறனியற்ற லின்பு.

*பொழிப்புரை:* ஈசன் செயலில் தினையளவேனும் கடப்பவர் உலகத்தொருவரும் இல்லை. மனை பொருள் மகவு முதலியவற்றுள் யாதேனும் ஒன்றைத் தீவினையால் இழப்பினும் பல நோய்களை அடைந்தாலும் வருந்தாமல் அறச் செயல்களைச் செய்து வருதலே இன்பமாகும்.

விளக்கவுரை: ஈசன் செயல்—ஊழ். கடப்பார்-வெல்ல வல்லவர். மனை—இல்லம், மனைவி. வினை என்றது ஈண்டுத் தீவினையைக் குறிக்கும். இனையாது—வருந்தாமல். இயற்றல்—செய்தல்.

ஊழ்வினை காரணமாக வரும் இடர் குறித்துக் கலங்கலாகாது என்பது கருத்து.

'இடுக்கண் வருங்கால் நகுக' —குறள் (எ)

18. இயமாதி நோய்தரினு மெய்ப்பின்று செய்க
முயல்கடை போயின் முடியாப்பே ரின்பப்
பயனெய்துங் காமாதி யின்பம்போற் பற்றும்
இயல்பினநீக் காமை யிடர்.

*பொழிப்புரை:* இயமம் நியமம் ஆதனம் பிராணுயாமம் முதலிய யோகப் பயிற்சிகள் முதலில் துன்பத்தைத் தரினும் சோர்வின்றிச் செய்து வருக; முயற்சி முடிவு பெறுமாயின் அழிவில்லாத பேரின்பத்தினை நல்கும் வீடுபேறு எய்தும்; காமம் முதலிய இன்பம் போல் உள்ளத்தைப் பற்றும் இயல்பினவற்றை நீக்காதிருத்தல் பிறவித் துன்பத்திற்குக் காரணமாகும்.

**விளக்கவுரை:** இயமாதி—இயமம் நியமம் ஆதனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்பன. எய்ப்பு—சோர்வு. முயல்—முயற்சி. முடியா—அழிவில்லாத. பயன்—வீடுபேறு. பற்றும்—உள்ளத்தைப் பற்றிக்கொள்ளும். இடர்—துன்பம்.

யோகப் பயிற்சியால் பிறப்பினை ஒழிக்க வேண்டும் என்பது கருத்து. (அ)

19. மலைத்துணைப் பஞ்சுமொரு தீப்பொறியான் மாயுந்
தலைப்பட்ட நல்லறம்பல் கோடியுஞ் சாயும்
நிலைப்பட்ட சான்ருேர்க்கோர் தீங்கியற்றி வீள்வான்
தலைப்பட்டுச் சாய்நகுடன் சான்று.

*பொழிப்புரை:* மலையளவினதாக உள்ள பஞ்சும் ஒரு சிறிய தீப்பொறியால் அழிந்து போகும். அதுபோல் மேற்கொண்டு செய்து வரும் அறங்கள் பலவும், சான்ருண்மையை மேற்கொண்டு ஒழுகும் பெரியோருக்கு ஒரு தீங்கு செய்த அளவில் அழிந்தொழியும். அதற்குச் சான்று, தான் செய்து வந்த அறச் செயல்களின் பயனுகத் தேவேந்திரனுகும் பேற்றினையடைந்திருந்தும் முனிவர்களை வெகுண்டு கூறியதால் அப்பதவியை இழந்து அழிந்த நகுடனே ஆவான்.

விளக்கவுரை: நல்லறம் பல்கோடியும் சான்ருேர்க்கோர் தீங்கு இயற்றின் சாயும் எனக் கூட்டுக. தலைப்பட்ட—மேற்கொண்ட, சான்ருேர்—நற்குணங்கள் பலவற்ருனு நிறைந்த பெரியோர். வான்—விண்ணுலகு.

பெரியோரைப் பிழைத்தலாகாது என்பது கருத்து. (கூ)

20. பேய ரொடுபாலர் பித்தரென மெய்யறிவின்
தூயர் வழீஇ நடப்பினும் சூழற்க
ஆயுங்கா லவ்வா ருெழுக வவாவனரி
சீயவினை மேற்கொள் செயல்.

**பொழிப்புரை.** மெய்யுணர்வு உற்ற மேலோர் பேயர் போன்றும் பாலர் போன்றும் பித்தர் போன்றும் தம் நிலையின் வழுவி நடநதாலும அவர் செய்கை குறித்து ஆராயா தொழிக. ஆராயுமிடத்து அவ்வாறு ஒழுகப் பிறர் அவாவுதல் சிங்கத்தின் தொழிலை நரி மேற்கொள்வது போலாம்.

விளக்கவுரை: மெய்யறிவின் தூயர்—துறவு பூண்ட மேலோர். 'நடப்பினும்'-உம்மை எதிர்மறை; பெரும்பாலும் நடவார் என்பதை உணர்த்திற்று. சூழ்தல்—அவரே நெறி தவறி நடக்கும்போது நாம் ஏன் தவறலாகாது என்று ஆராய்தல். அவாவல்—விரும்புதல். சீயம்—சிங்கம். சீயத்தின் வினை—யானையைக் கொன்று தின்னல். நரி அச்செயலை மேற்கொண்டால் முடிவு பெருது; உயிரை இழக்கவும் நேரும்

பற்றுவிட்ட மேலோர் செயலை ஆராய்ந்து அவ்வாறு ஒழுக விரும்புவது தவறு என்பது கருத்து. (க0)

# 3. இல்வாழ்க்கை

21. விருந்தோம்ப றென்புலந் தெய்வம் விரும்பல்
மருந்தானு மொக்கலுட னுண்டு மகிழ்தல்
பெருந்தவ ராதியோர்ப் பேணலிவை யில்லத்
திருந்தார்க் குரிய வியல்பு.

***பொழிப்புரை:*** விருந்தினரைப் பேணுதலும், தென்புலத்தார்க்கும், தெய்வத்திற்கும் உரிய அறங்களைச் செய்தலும், அமிழ்தே எனினும் சுற்றத்தாருடன் சேர்ந்து உண்டு மகிழ்தலும், துறவினர் முதலியோரைப் பேணுதலுமாகிய இவை இல்வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகுவார்க்குரிய கடமைகளாகும்.

விளக்கவுரை: ஓம்பலும் விரும்பலும் மகிழ்தலும் பேணலும் இல்லத்திருந்தார்க்கு இயல்பு ஆகும். ஓம்பல்—பாதுகாத்தல். தென்புலம்—ஆகுபெயர்; இறந்துபோன முன்னோர். மருந்து—அமிழ்து ஒக்கல்—சுற்றத்தார். பெருந்தவராதியோர்—துறவினர், வானப்பிரஸ்தர், பிரமசாரி என்போர். இல்லத்திருந்தார்—இல்வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகுவோர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
ஐம்புலத்தா றோம்பல் தலை." —குறள்

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை." —குறள்

இதனால் இல்வாழ்வார்க்குரிய கடமைகள் உணர்த்தப்பட்டுள்ளன. (க)

22. நல்ல குடிப்பிறந்து நாற்குணமு மேற்கொளீஇ
எல்லை கடவா வியல்கற்பி னுள்]மனையா
இல்லற மேயினா ரேனை யறத்தாற்றிற்
செல்லாதுஞ் சேர்வர் சிறப்பு.

*பொழிப்புரை:* மாசு இல்லாத உயர்ந்த குடியிற் பிறந்து நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் மேற்கொண்டு மகளிருக்கு உரிய அறத்தினின்றும் வழுவாது ஒழுகும் கற்பினையுடையவள் மனைவியாக வாய்க்கப் பெற்று இல்லறத்தை மேற்கொண்டு செய்து வருவோர் துறவறத்தினை மேற்கொள்ளாமலேயே வீடுபேற்றினையடைவர்.

விளக்கவுரை: நல்ல குடி—நோயும் பழியும் இல்லாத குடி. எல்லை—தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வில்லாது உரிய செயல்களைச் செய்து வருதல். ஏனை அறம்—துறவறம். சிறப்பு—வீட்டுலகம்.

இல்வாழ்க்கைக்குத் துணையாகும் பெண்ணுக்குரிய இலக்கணமும் அவ்விலக்கணம் அமைந்த பெண்ணை வாழ்க்கைத்துணையாகப் பெற்றவன் எய்தும் பயனும் இதனுல் கூறப்பட்டுள்ளன. (உ)

23. இல்லாளுந் தானு மனத்தா லிரண்டெனா
நில்லா தறஞ்செய்து நிற்க துறவிற்பின்
வெல்லாப் புலமைந் தவித்த விழுமியோர்
அல்லார்க் கிளமை யரில்.

*பொழிப்புரை:* வெல்லுதற்கரிய ஐம்புலன்களையும் வென்று அடக்கிய மேலோரல்லாத மாந்தருக்கு இளமைப் பருவம் பற்றினை உண்டாக்கிப் பகைவன் போன்று துன்புறுத்தும்; ஆதலால், இல்வாழ்க்கையை மேற்கொண்டு இல்லாளும் தானும் ஒருமனதுடையராய் இன்பம் துய்த்தலோடு பல்வகைப்பட்ட அறங்களையும் செய்து பின்னர், துறவறத்தினை மேற்கொண்டு வழுவாது நிற்க.

விளக்கவுரை: இல்லாள்—மனைவி. 'தான்' என்றது கணவனை உணர்த்திற்று. மனத்தான் இரண்டெனா நில்லாது—வேறு வேறு எண்ணம் உடையவர்களாயிராமல் ஓர் எண்ணம் உடையவர்களாய் நின்று. புலம் ஐந்து—சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. புலம் ஐந்து அவித்தல்—புலன்களை நாடிச் செல்லும் அவா ஐந்தையும் அடக்குதல். அரில்—பகை.

இல்லறத்தை மேற்கொள்ளாது இளமையில் பூணும் துறவு நிலைப்பது மிக அரிது என்பது கருத்து. (௩)

24. தூய்யபுகழ்க் கற்பால் தொழப்படுவாள் மெய்ஞ்ஞானம்
எய்து மருந்தவத்தோர் தேவ ரெவரானுஞ்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

*பொழிப்புரை:* தூய புகழினைத் தரும் கற்பினால் அதனை யுடையவள் மெய்யுணர்வு எய்திய அருந்தவத்தோர் தேவர் முதலிய எல்லோராலும் வணங்கப்படுவாள். பிற தெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயில் எழுவாள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்.

விளக்கவுரை: துய்ய—தூய. 'தொழாஅள்' செய்யுளிசையளபெடை. இந்நூலாசிரியர் தம் கூற்றுக்குச் சான்றாக 'தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்றும் பொய்யாமொழியை எடுத்துக் காட்டியுள்ளார். கற்பின் சிறப்பு இதனால் கூறப்பட்டது. (உச)

25. பறழ்பல பன்றி பயப்பினு மென்மன்
கறையடி சுட்டுறுங் கன்றொன்றீன் றாலும்
பிறைபோ லறிவு பெருகு மகவொன்
றுறினுறுவ வேறென் னுள.

*பொழிப்புரை:* பன்றி பல குட்டிகளைப் பயந்தாலும் அவற்றால் யாது பயன்? யானை ஒரு கன்று ஈன்றாலும் அது யாவரானும் நன்கு மதிக்கப் பெறும். வளர்பிறை போன்று நாளுக்கு நாள் அறிவு பெருகும் மகவு ஒன்று பெற்றால் பின்னர்ப் பெறுவதற்குரிய பொருள் வேறொன்றுமில்லை.

விளக்கவுரை: யானைக் கன்று போருக்கும் பிற தொழிற்கும் உதவுவது போன்று பன்றிக்குட்டி உதவாது. அறிவுமிக்க நன்மக்கட் பேற்றினும் சிறந்த பேறு வேறு இல்லை என்பது கருத்து.

பறழ்—குட்டி. கறையடி—யானை. சுட்டுறுதல்—மதிக்கப்படுதல். பிறை—வளர்பிறை. 'என்' என்பது இன்மை குறித்து நின்றது. (உரு)

26. பேதைமை மக்கட் பெறலிற் பெருமையால்
தீதின் றவமதிப்பு மின்றாவுஞ் சேராவாம்
நீதிநெறி நின்றார் பெறார்புன் னெறியொழுகி
வாதைதரு பேதை மகவு.

*பொழிப்புரை:* அறிவில்லாத மக்களைப் பெறுவதினும் பெறாமல் இருத்தல் நன்று(குற்றமில்லை). யாவரானும் இகழப் படுதலும் துன்பமும் சேரா. நீதிநெறியில் தவறாமல் ஒழுகு வோர் தீநெறி பற்றியொழுகித் துன்பந்தரும் அறிவில்லாத மகவைப் பெறார்.

விளக்கவுரை: பேதைமை—செய்வன தவிர்வன யாதும் அறி யாமை. தீது—குற்றம். அமைதிப்பு—இகழப்படுதல். இன்னா—துன் பம். புன்னெறி—தீநெறி வாதை—துன்பம்.

அறிவில்லா மக்களைப் பெறுதலால் பல்வகைத் துன்பமும், பழி யும் வரும் என்பதும் நன்னெறியில் நின்றார் அறிவில்லாத மக்களைப் பெறார் என்பதும் இதனால் கூறப்பட்டன. (சு)

27. மன்னுயிரைத் தன்போல் மதிக்கு மருளானே
துன்னுமுயிர் வீடெனினு மஃதுந் தொடர்பின்கண்
முன்னுறு மன்பான் முளைத்தெழூஉ மஃதின்றேல்
என்னபயன் ஒன்றானு மில்.

*பொழிப்புரை:* உலகின்கண் நிலைபெற்றுள்ள உயிர்களைத் தன்னுயிர் போன்று எண்ணி அவைகளுக்கு உற்ற இடரைத் துடைக்கும் அருளால் உயிர் வீடுபேற்றினை அடையும் என்றாலும் அத்தகைய சிறப்பினையுடைய அருளும் தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய தொடர்புடையார்மாட்டு முன்னர் உறும் அன்பால் தோன்றி வளரும். அவ்வன்பு இல்லையாயின் அடையும் பயன் யாது? ஒன்றும் இல்லை.

விளக்கவுரை: உயிர் விடு தன்னும் என மாற்றிக் கூட்டுக. 'முளைத்தெழூஉம்' இன்னிசையளபெடை. 'ஒன்றாயினும்' என்பது ஒன் றானும் எனக் குறைந்து நின்றது.

இதனால் அன்புடைமையின் சிறப்பு கூறப்பட்டது. (எ)

28. உடையானை யுள்ளத் துடையானென் றானும்
உடையான்; பசிகுளிர்கண் டுள்ளத் துடையான்
உடையானா னாற்றா னுறுவதுடை யானன்
புடைமா னுடையா னுயிர்.

*பொழிப்புரை:* இறைவனை இடைவிடாது நினைப்பவன் ஒன்றானும் அழியான்; பிறர் பசியையும் குளிரையும் கண்டு அவர்கள் தன்னை நினைந்து வாழ்த்துமாறு அவைகளை நீக்கா

*தவன் ஊணும் உடையுமில்லாமல் பின்னர் தான் அடையப் போகும் துன்பத்தினை நீக்காதவனுவான். ஆதலால் பிற உயிர்களிடத்து அன்புடையவனே தன் உயிரிடத்தும் அன்பு டையவன் ஆவான்.*

விளக்கவுரை: உடையானை உள்ளத்து உடையான் ஒன்றுனும் உடையான்; பசி குளிர் கண்டு உள்ளத் துடையான்; உடையான் ஊணுன் தான் உறுவ துடையான்; அன்பு உடையான் உடையான் உயிர் என மூன்று வாக்கியங்களாகப் பிரித்துப் பொருள் கொள்க.

உடையான் ஊணுன் தான் உறுவ துடையான்—தான் உறும் குளிரையும் பசியையும் போக்கிக்கொள்ள உடையும் உணவும் இல்லாமல் துன்புறுவன்.

> "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை யில"
> "பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
> தீப்பிணி தீண்ட லரிது"
> "அன்பின் வழிய துயர்நிலை யஃதிலார்க்
> கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்னும் திருக்குறட்பாக்களின் கருத்துக்களை இப்பாவானது அடக்கிக் கொண்டிருத்தல் காண்க. (அ)

29. இன்ன லுறுமேபே ரின்பந் தருநெறி
உனனி னுளதா லுஞற்ற லரிதன்றால்
என்னல மேனு மிழப்பிலஃ தெவ்வுயிருந்
தன்னுயிர்போற் காணுறூஉஞ் சால்பு.

*பொழிப்புரை: ஆராயின் துன்பம் உறாமலேயே பேரின்பத்தினையடையும் நெறி உளதாதல் புலனும்; அதனைச்செய்து வருதலும் அரிதன்று; தனக்குரிய நலங்களுள் எதனையும் இழக்கவேண்டியதுமில்லை; அநநெறிதான் யாதோ எனின், எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் காணும் சால்புடைமையே ஆகும்.*

விளக்கவுரை: இன்னல்—துன்பம். பேரின்பம்—வீடுபேறு. உஞற்றல்—செய்தல். எந்நலமேனும்—ஐம்பொறிகளாலும் நுகரத் தகும் பொருள்களுள் ஒன்றையாயினும். இழப்புஇல்—இழக்க வேண்டியதுமில்லை

மன்னுயிரைத் தன்னுயிர் போல் எண்ணுவோர் துறவு பூணுமலேயே வீடுபேற்றினை எய்துவர் என்பது கருத்து. (கூ)

30. பாத்தூ ணறிந்து பகைவெல்லல் நீராடல்
நீத்தறுயில் காலை பிறனில் நினையாமை
சீர்த்த முயற்சியிவை காக்கையினைச் சிற்றெறும்பைப்
பார்த்துங்கொள் ளாமை பழி.

***பொழிப்புரை:*** *பகுத்து உண்ணுதலும் காலம் இடம் உணர்ந்து பகையை வெல்லுதலும காலையில் துயில் நீத்தலும் நீராடலும் பிறனில் விழையாமையும் இடைவிடாது உழைக்கும் சிறந்த முயற்சியும் ஆகிய இவைகளைக் காக்கையினிடத்தும் சிற்றெறும்பினிடத்தும் பார்த்தும் மேற்கொள்ளாதிருத்தல் பழியாகும்.*

விளக்கவுரை: பெற்ற உணவை இனத்தோடு சேர்ந்து உண்ணுதலும் காலமும் இடனும் தேர்ந்து பகையை வெல்லுதலும் அதிகாலையில் துயில் எழுதலும் நீராடலும் பிறனில் விழையாமையும் காக்கையினிடங் காணும் நல்லியல்புகள். *சீர்த்த முயற்சியுடைமை* எறும்பின் இயல்பு.

அஃறிணைப் பொருள்களிடத்துங் காணப்படும் இந்நல்லியல்புகளை உயர்திணைப் பொருள்களாகிய மக்கள் மேற்கொள்ளாதிருத்தல் பழியே ஆகும். *(க0)*

# 4. கூடாவொழுக்கம்

31. தமதிற் பிறர்தொடினுந் தாய்பொறா ரென்னோ
அமைவின் றயலாடோட் சேரற் கமர்வர்
நமனுல கெய்தி நலிவெய்தற் கன்றோ
சுமையா விவர்தோன்றி னார்.

***பொழிப்புரை:*** தம் மனைவியைப் பிறர் தொட்டாலும் பொறாமல் சினங் கொள்பவர் என் கருதி அடக்கமின்றிப் பிறனுக்குரியாளைத் தழுவி இன்புற விரும்புகின்றனர். நமனு லகையடைந்து துன்புறுதற்கே உலகிற்குச் சுமையாக இவர்கள் தோன்றியுள்ளார்கள்.

**விளக்கவுரை:** பிறனில் விழைவோரைப் பகையும் பழியும் பாவமும் அச்சமும் விட்டு நீங்கா வாகலின் இம்மை மறுமைப் பயன்களை இழந்து துன்புறுவர் என்பது கருத்து. 'தோட்சேரல்'- இடக்கரடக்கல்.

32. அறநெறியா னஞ்சா தடைதலே யின்பம்
புறநெறியா னஞ்சியயல் புக்கென் பெறுங்கொல்
இறுமுயிர்கால் கையிழக்கு மெய்தும் பழியும்
அறைபோந் திருவோ டறன்.

***பொழிப்புரை:*** இல்லறத்தோடு பொருந்தி அஞ்சாது மனைவியிடத்து அடைவதே இன்பமாகும். தீநெறியால் அச்சத்தோடு பிறனுக்கு உரியாளை அடைந்து தழுவிப் பெறுவது யாது? இவ்வொழுக்கம் வெளிப்படின் உயிரையும் இழக்க நேரும் அல்லது கை கால்களையேனும் இழப்பான். பழியும் அடைவான். திருவும் அறமும் அவனைவிட்டு நீங்கும்.

**விளக்கவுரை:** 'அறநெறி' என்றது ஈண்டு இல்லறத்தினை. புறநெறி—தீயொழுக்கம். 'அயல்'-ஈண்டு ஆகுபெயராய்ப் பிறர் மனையாளை உணர்த்திற்று. 'என் பெறும்' என்றது அடைவது துன்பமே

யன்றி இன்பம் ஒரு சிறிதும் இல்லை என்பதை விளக்கி நின்றது. 'போகும்' என்பது இடை உயிர்மெய் கெட்டுப் போம் என நின்றது.

இதனால் இன்பமாவது இன்னதென்பதும், பிறர் மனையாளை விரும்பி ஒழுகுவதால் வருவன இவை என்பதும் கூறப்பட்டுள்ளன.

33. பிறன்மனை வேட்டொழுகு பேதைநீ டூழி
மறலி யுலகத்து வைகிப்பின் வந்தே
பிறனலந் தன்மனை பெட்டுத்தற் பேணா
துறனேக்கி நோத லுறும்.

**பொழிப்புரை:** பிறன் மனையாளை விரும்பி ஒழுகும் அறிவிலி இறந்த பின்னர் நமனுலகிற் பல்லூழிக்காலந் துன்புற்றுப் பின்னர் உலகில் பிறந்து தன் மனையாள் அயலானை விரும்பிச் சேர்ந்து இன்புற்றுத் தன்னைப் பேணாதிருத்தலைக் கண்டு மிகவும் துன்புறுவான்.

விளக்கவுரை: வேட்டு—விரும்பி. மறலி—நமன். பிறன் நலம்—பிறனால் பெறும் இன்பம். பெட்டு—விரும்பி. பேணாது—உண்டி முதலியவற்றால் பேணாமல். நோதல்—துன்பம.

பிறனுக்குரியாளை விரும்பி ஒழுகுபவன் தன் மனையாள் பிறனைக் காதலித்து ஒழுகுதல் கண்டு வருந்துவன் என்பது இதனால் கூறப்பட்டது. (௩)

34. பிறனில் விழைந்த பொழுதே பிறங்கும்
அறிவு மழுங்குமா லாளுமா லச்சங்
குறையுமா லாண்மை குடிபுகுமால் வஞ்சம்
புறம்புறுமால் நட்புப் புகழ்.

**பொழிப்புரை:** பிறன் மனையாளை விரும்பியொழுகத் தொடங்கியபொழுதே விளங்கும் அறிவு மழுங்கும்; அச்சம் ஆட்கொள்ளும; ஆண்மை குறையும்; வஞ்சம் குடிகொள்ளும்; நட்பும் புகழும் வெளியேறும்.

விளக்கவுரை: பிறன் இல்—அயலானுக்குரிய மனையாள். பிறங்கும் அறிவு—எதனையும் நுணுகி ஆராய்ந்து அறியவல்ல அறிவு. 'ஆல்'-ஐந்தும் அசைநிலைகள். பிறனில் விழைவானுக்கு உளவாகும் தீமைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். (௪)

35. செல்லாம லிச்சைவழிச் சிந்தை யிறையினிறீஇ
நல்லநாட் பூப்பின்பி ஞடிக் கவலின்றி
இல்லா ளிடத்துமன்பா னன்மக்கட் பேறெண்ணி
அல்லான் முயக்க மவம்.

*பொழிப்புரை:* உள்ளம் விரும்பியவாறு ஒழுகாமல் அதனை இறைவன்பால் நிறுவிப் பூப்பின் பின்னர் நல்ல நாள் பார்த்துக் கவலை சிறிதும் இல்லாமல் அன்போடு தன் மனையாளிடத்தும் நன்மக்கட்பேற்றினை விரும்பியல்லது கூடுதல் வீண் செயலாகும்.

விளக்கவுரை: இச்சைவழிச் செல்லாமல் எனவும் பூப்பின் பின் நல்ல நாள் நாடி எனவும் அன்பால் இல்லாளிடத்தும் எனவும் மாற்றிக் கூட்டுக. 'நிறீஇ'-சொல்லிசையளபெடை.

'மிதுன இச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பு' என்ற விதி பற்றி எழுந்தது இப்பா. (௫)

36. கொண்டானிற் றீர்ந்தயலாற் கூடி யொழுகுவாட்
கண்டாலும் பாவ மிருமரபுங் காய்கதிரோன்
உண்டா மளவு முறும்பழியாம் காணேமிப்
பெண்டேபோற் றீய பிறப்பு.

*பொழிப்புரை:* தன் கணவனின் நீங்கி அயலானைக் கலந்து ஒழுகுவாளைக் கண்டாலும் பாவம் வந்துசேரும்; கதிரவன் உள்ளவளவும் அவள் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் மிக்க பழி உளதாகும்; இப்பெண் போன்று தீய பிறப்பு உடையாரை யாம் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை.

விளக்கவுரை: காய்கதிரோன் உண்டாமளவும் இருமரபும் பழி உறும் எனவும் இப்பெண்டேபோல் தீய பிறப்பு யாம் காணேம் எனவும் கூட்டுக. 'ஒழுகுவாள்'-வினையாலணையும் பெயர். 'காணேம்'-தன்மைப் பன்மை எதிர்மறை வினைமுற்று. கற்பு நெறியினைக் கடந்தொழுகும் மகளிரின் இழிபு இதனால் கூறப்பட்டது. (௬)

37. தாக முறினுமழை தன்வாய்ப்பட் டாலன்றி
ஆகாப் பிறநீர் அருந்தலிலை சாதகப்புள்
தேகமுறு வேளெனினுஞ் செல்லாள்பெண் கொண்டான்பால்
போக மறினும் புறன்.

பொழிப்புரை: மிக்க நீர்வேட்கையுற்றாலும் மழை நீர் தன் வாயில் விழுந்தால் அதனைப் பருகுவதன்றி நிலத்தின் கண்ணுள்ள நீரைச் சாதகப்புள் ஒருபோதும் அருந்துவதில்லை அதுபோல் அயலான் உடலோடு கூடிய மன்மதன் போன்று அழகுடையவனாக இருப்பினும் அவன்பால் தன்னை மணந்து கொண்ட கணவன் ஆண்தன்மையற்றிருந்தாலும் சென்று கலந்து இன்புற ஒருபோதும் கற்புநெறியில் நிற்கும் பெண் விரும்பாள்.

விளக்கவுரை: தன் வாய்ப்படும் மழை நீரையன்றி வேறு நீரைச் சாதகப் புள் பருகாதது போல் தன்னை மணந்துகொண்ட கணவன் விரும்பிக் கூடுங் காலத்து இன்புறுவதல்லது அயலான் அழகு மிக்க வனாக இருந்தாலும் அவனைக் கூடி இன்புறக் கற்புடையவள் ஒரு போதும் விரும்பாள் என்க.

பிற நீர்—நிலத்தின்கண் உள்ள நீர். சாதகப் புள்—வானம்பாடி. வேள்—மன்மதன். கொண்டான்—கணவன். 'போகம்'-ஆகுபெயர். எடுத்துக் காட்டுவமை இப்பாவில் அமைந்திருத்தல் காண்க. (எ)

38. ஆழி விரற்றுணையா வாக்குப வங்குலியை
ஆழியள வாக்கா ரதுவொப்ப வாடூஉத்தான்
வீழு மவளைத்தன் னிச்சைவழி வீழ்த்தலன்றித்
தாழுமோ பெண்மனம்போற் சாய்ந்து.

பொழிப்புரை: விரல் அளவினதாக மோதிரத்தைச் செய்வார்கள்; மோதிரத்தின் அளவினதாக விரலைச் செய்ய மாட்டார்கள். அதுபோல் ஆண்மகன் தன்னால் விரும்பப் படும் பெண்ணைத் தான் விரும்பியவாறு ஒழுகும்படி செய்த லன்றி அப்பெண்ணின் விருப்பம்போல் அடங்கி ஒழுகான்.

விளக்கவுரை: மனை விழைவார் மாண்பயனெய்தாராதலின் பெண் மனம்போல் தாழான் என்க. ஆழி—மோதிரம், அங்குரி—விரல். ஆடூஉ—ஆண்மகன். வீழும்—விரும்பப்படும். 'தாழுமோ'—ஓ-எதிர் மறை. (அ)

39. தொழுநோய் முதற்பல சூழும் நிரப்பாம்
இழுதையென் றெள்ளுவ ரீன்றருங் கற்புப்
பழுதுறும் மர்மனைக்குப் பண்புடை யாளர்
ஒழிகபொருட் பெண்டி ருறவு.

*பொழிப்புரை:* குட்டநோய் முதலாக உள்ள பல நோய்களும் வந்து சேரும்; வறுமையும் வந்திடும்; பேயே எனப் பெற்றோர்களும் இகழ்ந்து கூறுவர்; பெருமையையுடைய மனைவியினது கற்புங்கெடும். ஆதலால் நற்குணங்களையுடைய பெரியோர் பொருட்பெண்டிர்பால் உறவு கொள்ளாதொழி வார்களாக.

விளக்கவுரை: நிரப்பு—வறுமை. இழுதை—பேய். எள்ளுவர்—இகழுவர். பழுதுறும்—கெடும். பொருட்பெண்டிர்—பொருள் கொடுப்பார் யாவருக்கும் தம் நலத்தினை விற்போர்.

பொருட் பெண்டிர் உறவு பலவகைத் தீமைகளுக்கும் காரணமா யிருத்தலால் இதனைக் கொள்ளலாகாது என்பது கருத்து. (௩௯)

40. கன்னி விலங்கு கலன்கழிந் தாரிவர்த்
துன்னி முயங்கிய தீயவர் தோய்ந்தெழாஅர்
மன்னு நிரயம்பல் லூழிபின் மாழ்குவர்
நன்னரில் பேடா நடித்து.

*பொழிப்புரை:* கன்னியும் விலங்கும் கைம்பெண்ணும் ஆகிய இவர்களை அடைந்து கலந்து இன்புற்ற தீயவர் நிலைபெற்ற நரகிடை வீழ்ந்து பல்லூழிக்காலம் அதனினின்றும் எழாஅர்; பின்னர் மேன்மை சிறிதுமில்லாத பேடாகத் தோன்றி நடித்து மாழ்குவர்.

விளக்கவுரை: உயர்திணையும் அஃறிணையும் விரவிப் பெரும்பான்மை பற்றி உயர்திணை முடிபு கொண்டது. விலங்கு—மிருகம். கலன் கழிந்தார்—மங்கல நாணை இழந்த விதவை. முயங்குதல்—புணர்தல். நிரயம்—நரகம். நன்னர்—மேன்மை.

கன்னி விலங்கு கலன்கழிந்தார் என்னும் இவரைக் கலந்து ஒழுகும் தீயோர் மறுமையின்பத்தை இழத்தலேயன்றித் துன்பமும் உறுவர் என்பது கூறப்பட்டது. (௪0)

# 5. நல்வினையாட்சி

41. செல்வமும் கல்வி யிலையேற் சிறப்பில்லை
கல்வியும் நுண்ணறி வின்றேற் கணிப்பில்லை
எல்லா மிருப்பினு நல்லொழுக்க மில்லாயின்
வல்லார்க்கு மில்லை மதிப்பு.

*பொழிப்புரை:* கல்வி இல்லையெனின் திரண்ட செல்வம் உடையாரும் சிறப்புறார்; நுண்ணுணர்வு இல்லையெனின் கல்வி கற்றோரும் மதிப்புறார்; செல்வம் கல்வி நுண்ணுணர்வு ஆகிய எல்லாம் இருப்பினும் நல்லொழுக்கமில்லையெனின் வல்லவர்களும் மதிக்கப்படமாட்டார்கள்.

விளக்கவுரை: செல்வம் கல்வி நுண்ணுணர்வு ஆகிய எல்லாவற்றினும் நல்லொழுக்கமே சிறந்தது என்பது கருத்து. (க)

42. வஞ்சத்தாற் செய்த சிறுநன்றும் வானளவின்
எஞ்சா தெனமறவா தின்னுயிரு மீபவே
விஞ்சு பயனறிந்த மேலோர் விழுச்சான்று
மஞ்சார்கை மத்திரத்தார் மன்,

*பொழிப்புரை:* தன்னலம் ஒன்றையே கருதி வஞ்சகமாக ஒருவன் செய்த சிறிய நன்றியையும் அதனால் தமக்கு உண்டாகிய பயனை உணர்ந்த பெரியோர் என்றும் மறவாமல் வானினும உயர்ந்ததாக மதித்து அதற்கு ஈடாகத் தம உயிரையும் ஈவர். மேகம் போன்று கைம்மாறு கருதாமல் ஈயும் கையையுடைய மத்திர நாட்டுக் கிறைவனாகிய சல்லியனை அதற்குச் சீரிய சான்றுவான்.

விளக்கவுரை: பாரதப் போரில் தருமருக்குத் துணையாக விரும்பிப் படையோடு சென்ற சல்லியனை வஞ்சகமாக வழியில் தண்ணீர் பந்தர் வைத்துத் துரியோதனன் தன் வயமாக்கிக் கொண்டான். தண்

ணீர்ப் பந்தர் வைத்து உதவினதற்காகச் சல்லியன் துரியோதனனுக்குத் துணையாக நின்று தருமருடன் கடும்போர் புரிந்து உயிரைத் துறந்தான் என்பது வரலாறு.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்" —குறள் (உ)

**43. இன்சொல் பிறர்சொலிற்ரு மின்பமுறன் மெய்யதனுல்**
**என்பொருளு மெஞ்சாவே யென்பு மனம்வருந்தா**
**அன்புறுவ ரொன்னுரு மச்சோ வஃதறிந்தும்**
**வன்சொலுரைப் பார்க்கென் வரவு.**

***பொழிப்புரை:*** *பிறர் கூறும் இன்சொல் தமக்கு இன்பம் பயத்தல் மெய்; இன்சொல் சொல்லுவதால் எப்பொருளும் குறைந்து போகா; உடலும் உள்ளமும் வருந்தா; பகைவரும் அன்பராவர்; அதனை அறிந்து வைத்தும் அந்தோ கடுஞ் சொல் சொல்லுவார்க்கு வரும் நன்மைதான் யாதோ?*

**விளக்கவுரை:** 'என்பு'—எலும்பு, ஆகுபெயராய் உடலை உணர்த்தி நின்றது. 'என்புமனம்'-உம்மைத் தொகை. 'அச்சோ'- இரக்கக் குறிப்பு.

இன்சொலுரைப்பார்க்கு எல்லா நலனும் உளவாம் என்பது கருத்து. (ங)

**44. செய்யாமற் பேருதவி செய்தார்கொன் றன்னவிடர்**
**செய்தா ரயலா ரெனுந்திறன் தேராமே**
**எய்துவ கேடெனினு மாக்கமென் றெண்ணிநடு**
**வெய்தலே மேலோ ரியல்பு.**

***பொழிப்புரை:*** *தமக்கு ஓர் உதவியும் செய்யாமலிருக்கவும் முன்வந்து நமக்குப் பேருதவி செய்தவர் எனவும் கொன்றாற் போன்ற தீங்கினைச் செய்தவர் எனவும் அயலார் எனவும் ஆராய்ந்து பாராமல் நலங்கள் பலவும் அழியுமெனினும் அவற்றை ஆக்கமாகவே எண்ணி முத்திறத்தார்க்கும் நடுநிலையாக நின்று முடிவு கூறுதலே நீதிபதிகளுக்கு முறையாகும்.*

**விளக்கவுரை:** கொன்றால் என்பது கொன்று எனத் திரிந்து நின்றது. நட்பினர் பகைவர் அயலார் என்று எண்ணி ஒரு பக்கம் சாயா

மல் நடுநிலைமையாக நின்று தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்பது கருத்து. (சு)

45. உண்ணுஞ் சுவையுணர்ந்து மோதலிலா நாப்போல
எண்ணில் பொருள்கண்டு மென்கொல் பயனின்றே
புண்ணே யெனப்படூஉம் போந்தாருண் ணோக்கறிந்து
கண்ணோட்டம் செய்யாத கண்.

*பொழிப்புரை:* தான் உண்ணும் பொருள்களின் சுவையை நன்கு உணர்ந்தாலும் பேசுந் தன்மையில்லாத நாக்குப் பயன் படாதது போன்று கணக்கற்ற பொருள்களைப் பார்த்தாலும் யாது பயன்? தன்பால் வந்தவர்களின் உள்ளக் குறிப்பினை யுணர்ந்து அவர்களுக்கு அருள் செய்யாத கண் யாவரானும் புண்ணே என்று இகழ்ந்து கூறப்படும்.

விளக்கவுரை: ஓதல்—பேசுதல். 'கண்டாலும்'-என்பது கண்டும் எனத் திரிந்து நின்றது. 'கொல்'-அசை நிலை. கண்ணோட்டம்—அருள் கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் என்பது கருத்து. (ரு)

46. புள்விலங்கி னுள்ளும் பொருளுணர வல்லவுள
விள்ளுங்கால் கண்முகம் நோக்கி விளைவுணரின்
ஒள்ளிய மக்களா மஃதின்றே லூர்ந்துயிர்ப்புக்
கொள்ளுமர மென்றே கொளல்.

*பொழிப்புரை:* பறவைகளுள்ளும் விலங்குகளுள்ளுங் பார்த்த அளவில் பொருள்களின் இயல்பை அறிந்துகொள்ள வல்லன இருக்கின்றன; கூறுமிடத்துக் கண்ணையும் முகத்தினை யும் பார்த்து ஒருவர் உள்ளக் குறிப்பினை உணர வல்லவரே நுண்ணுணர்வினையுடைய மக்களாவார்; அவ்வுணர்வில்லாத வர்களை உயிர்ப்புடனூர்ந்து செல்லும் மரங்களென்றே கொள்க.

விளக்கவுரை: புள்—பறவை. விலங்கு—மிருகம். வல்ல—வல்லன. விள்ளுதல்—கூறுதல். விளைவு—உள்ளக் குறிப்பு. ஒள்ளிய—நுண்ணுணர்வுடைய. 'கொளல்'-அல் ஈற்று வியங்கோள்.

நுண்ணுணர்வில்லாதாருக்கும் மரத்திற்கும் உள்ள வேறுபாடு இடம் பெயர்ந்து செல்லுதலும் செல்லாமையுமே ஆகும். நுண்ணுணர்வில்லார் மக்களாகார் என்பது கருத்து. (கூ)

**47. உள்ளம் பொறிநா வொடுங்கலுறிற் பள்ளம்போம்**
**வெள்ளமென நாற்பொருளும் மேவும் பிறவடக்கம்**
**கொள்ளா னெனினுமொரு நாவடக்கம் கொள்கதப்பிற்**
**கொள்ளு மளப்பில் குறை.**

*பொழிப்புரை: மனமும் மெய்யும் மொழியும் தீநெறிக் கண்செல்லாது அடங்குமாயின் பள்ளத்தை நோக்கி விரைந்து செல்லும் நீர்ப்பெருக்கே போன்று உறுதிப் பொருள் நான்கும் ஒருவன்பால் விரைந்து வந்து சேரும்; மனமும் மெய்யும் அடங்காது போனாலும் மொழியையேனும் அடக்கியாள்க; தவறினால் அளவற்ற துன்பங்களை அடைய நேரும்.*

விளக்கவுரை: மனத்தால், வெஃகல் வெகுளல் பொல்லாக்காட்சி என்னும் மூன்று குற்றங்களும், மெய்யால் (உடலால்) கொலை களவு காமத் தீவிழைவு என்னும் மூன்று குற்றங்களும், மொழியால் பொய் குறளை வன்சொல் பயனில்சொல் என்னும் நான்கு குற்றங்களும் நிகழும். அவையனைத்தும் நிகழாமற் காப்பதே அடக்கமாகும்.

பொறி, நா என்பன முறையே உடலையும் மொழியையும் உணர்த்தி நிற்றலால் ஆகுபெயர்கள். மொழியால் வருங் குற்றங்கள் அடங்கின் பிறவும் தாமாகவே அடங்கி விடுமென்பது கருத்து. (எ)

**48. இறத்தலெஞ் ஞான்று மிலையாயி னாவி**
**துறத்த லொழிக துறந்தபின் மானம்**
**இறத்தல் கடந்தா ரெவர்கூற்றான் மாய்விற்**
**சிறத்தலுறுஞ் சீர்ப்பொருட்டான் மாய்வு.**

*பொழிப்புரை: மானம் துறந்தபின் எப்போதும் இறவாமல் இருக்க முடியுமெனில் மானத்திற்காக உயிர் விடுதலைத் தவிர்க; இறவாமல் என்றும் உடலொடு நிலைத்திருப்பார் யார்? கூற்றுவனால் இறத்தலைக் காட்டிலும் புகழின் பொருட்டுத் தாமே உயிர் விடுதல் சிறப்பாகும்.*

விளக்கவுரை: மானம் துறந்தபின் எஞ்ஞான்றும் இறத்தல் இலையாயின் ஆவி துறத்தல் ஒழிக எனவும், கூற்றான் மாய்விற் சீர்ப் பொருட்டான் மாய்வு சிறத்தலுறும் எனவும் மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. மானம்—எஞ்ஞான்றும் தந்நிலையிற் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாகும். சீர்—புகழ் மாய்வு—இறத்தல்.

உயிரைத் துறந்தேனும் மானத்தைக் காக்க வேண்டுமென்பது கருத்து. (அ)

49. எச்சநீ ராவிற்கீ கென்னினு நன்றாகா
எச்சிறுமை யானு மிரவற்க வில்லறத்தார்
பிச்சையேற் றுண்கை துறந்தார்க்கே பெற்றியாம்
இச்சை வெறுப்பில்லாமை யின்.

*பொழிப்புரை:* பசுவிற்குச் சிறிதளவு நீர் ஈக என்று இரத்தலும் இழிவேயாகும். ஆதலால், மிகச்சிறிய பொருளையேனும் இல்லறத்தார் இரவாது ஒழிக. விருப்பு வெறுப்பு இல்லாமையால் பிச்சையேற்று உண்பது பற்றற்ற துறவிகளுக்கே உரிய செயலாகும்.

விளக்கவுரை: ஈக + என்னினும்—ஈகென்னினும், வியங்கோளின் இறுதி அகரம் தொக்கது. நன்று—புகழ். 'நன்று ஆகா' எனவே பழியாயிற்று. 'இரவற்க'-எதிர்மறை வியங்கோள். உண்கை—தொழிற் பெயர். இச்சை வெறுப்பு-உம்மைத் தொகை. இரத்தல் இல்லறத்தார்க்கு இழிவாகும் என்பது கருத்து. (கூ)

50. செல்வம் விரும்பிற் பிறர்க்களிப்பத் தேடுக
கல்வி விரும்பி னெறிநிற்பக் கற்கமன்
அல்லலிலா வின்பமுற வெண்ணி யருநெறியிற்
செல்லினிடர் நோன்றல் செயல்.

*பொழிப்புரை:* செல்வத்தை விரும்பினால் வறுமையால் துன்புறுவோருக்கு அளிப்பதற்காகத் தேடுக; கல்வியை விரும்பினால் நன்னெறியில் நிற்கும் பொருட்டுக் கற்க; துன்பமில்லாத இன்பத்தினை அடைய விருப்பி ஆற்றுதற்கரிய துறவு நெறியிற் செலின் அந்நெறியில் உறும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்க.

விளக்கவுரை: அல்லலிலா இன்பம்—வீடுபேறு. அருநெறி—ஆற்றுதற்கரிய துறவறம். நோன்றல்—பொறுத்தல்.

'செல்வத்துப் பயனே ஈதல்.' —புறநானூறு

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.' —குறள்

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.' —குறள் (கo)

# ௬. தீவினை அச்சம்

51. பிறர்பொரு ளன்னா ருணராது பெட்பின்
சிறிய கொளினுமவை நஞ்சினுந் தீய
இறைவ னொறுக்கும் பிழைப்பினு மென்றும்
உறைப விருள்சே ருலகு.

*பொழிப்புரை*: பிறர் பொருளை அவர் அறியாதவாறு விருப்பத்தோடு சிறிதளவு கொண்டாலும் அவை நஞ்சினுங் கொடியவாம்; அவ்வாறு கொண்டவனை மன்னன் ஒறுப்பான்; மன்னன் ஒறுத்தலுக்குத் தப்பினாலும் என்றும் நரகிடைக் கிடந்து துன்புறுவான்.

விளக்கவுரை: பெட்பு—விருப்பம். நஞ்சு—விடம். இறைவன்—மன்னன். 'ஒறுக்கும்'-செய்யுமென்முற்று ஆண்பாலில் வந்துளது. இறைவனொறுத்தலுக்குக் கள்வன் தப்பினாலுந் தெய்வத்தின் ஒறுத்தலுக்குத் தப்பானென்பது கருத்து. (௧)

52. ஆறலைத்தல் கொள்ளை யதிகாரம் பொய்வஞ்சம்
சீறி வெருட்டல் குறைமுடிப்பல் செய்வலினிப்
பேறென லின்ன பிறரறிய வெளவினும்
வேறல்ல கள்ள வினை.

*பொழிப்புரை*: வழிப்பறி செய்தலும் கொள்ளையடித்தலும் உத்தியோகத்திலிருந்து கொண்டு கையூட்டுப் பெறுதலும் பொய் சொல்லுதலும் வஞ்சித்தலும் வெகுண்டு அச்சுறுத்தலும் வேண்டுங் காரியத்தை முடித்துக் கொடுப்பேன் என்றலும் இனி ஆக்கம் பல உளவாகுமாறு செய்வேன் என்று கூறுதலும் ஆகிய இவற்றாலும் இவைபோல்வன பிறவற்றாலும் பிறர் அறியுமாறு அயலார் பொருளைக் கவர்ந்தாலும் அவை திருட்டுத் தொழிலாகுமேயன்றி நல்வினையாகா.

விளக்கவுரை: இனிப் பேறு செய்வல் என மாற்றுக. குறை—வேண்டும் காரியம். பேறு—ஆக்கம். வெளவுதல்—கவர்தல். வேறு—நல்வினை. பிறர் காணச் செய்யினும் ஆறலைத்தல் முதலியன துன்பந் தரும் செயல்களேயாதலால் திருட்டோடு ஒக்கும் என்பது கருத்து.

53. பயனில் பொருணற் பயன்படு மாறும்
நயனில் கடுமுத னல்லுயிர் மாயா
துயவுங் குறித்தோர்ந் துரனுடையார் கள்ளிற்
செயிர்தீ ரறமாஞ் சிறந்து.

*பொழிப்புரை:* உலகுக்குப் பயன்படாதிருக்கும் பொருளை அதற்கு பயன்படுத்துமாறும் நன்மை பயவாத நஞ்சு முதலியவற்றை உண்டு நல்ல உயிர்கள் மாயாமல் வாழுமாறு செய்யவும் எண்ணித் துணிந்து அறிஞர்கள் திருடினுல் அது குற்றமற்ற அறமாகச் சிறந்து விளங்கும்.

விளக்கவுரை: நயன்—நன்மை. கடு—நஞ்சு. உய்ய என்பது 'உய' என இடைக் குறைந்து நின்றது. தன்னலங் கருதாது பிறர் நலங்கருதி நல்ல எண்ணத்தோடு செய்யின் களவும் அறமாகுமென்பது கருத்து. (ந)

54. மன்னுயிர்க்குத் தூய நலந்தருஞ்சொல் வாய்மையே
இன்னு விளைக்குஞ்சொல் பொய்யே யிஃதுணர்ந்து
தன்னெஞ் சறிவது பொய்யாமைச் சாற்றலுறின்
என்னபிற வில்லெனினு மென்.

*பொழிப்புரை:* உலகின்கண் நிலைபெற்ற உயிர்களுக்குக் குற்றமற்ற நன்மையைச் செய்யுஞ் சொல் பொய்ம்மையே எனினும் அது வாய்மையாகவே நன்கு மதிக்கப்படும்; துன்பத்தினை விளைவிக்கும் சொல் வாய்மையே எனினும் அது பொய்ம்மையே போன்று இகழப்படும்; இதனை நன்குணர்ந்து தன் நெஞ்சறிந்ததைப் பொய்யாது சொல்லிவரின் பிறவறங்களுள் யாதேனும் ஒன்றுகூடச் செய்யாமலிருப்பினும் குற்றமில்லை.

விளக்கவுரை: தூய நலந் தருஞ் சொல்—ஒருவருக்கும் துன்பம் விளைவிக்காமல் பிறர்க்கு நன்மை பயக்கும் சொல். இஃதுணர்ந்து—இந்நெறியினை ஆராய்ந்தறிந்து,

பொய்ம்மையும் வாய்மையாக மதிக்கப்படும் இடமும், வாய்மையும் பொய்ம்மையாக இகழப்படும் இடமும் இதனால் கூறப்பட்டன.

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யார்யார்க்கும்
தீமை இலாத சொலல்" —குறள்
"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" —குறள் (ச)

**55. ஒழுக்கம் பிழையாரைப் பொய்சொற்று மோம்பல்
விழுப்பமா மவ்வுரையால் வெய்யரைக் காத்தல்
இழுக்கா முயர்ந்தார் பொருட்டு மியம்பார்
வழுக்கியும்பொய் சான்ரு வரின்.**

***பொழிப்புரை:*** *நல்லொழுக்கத்தினின்றும் தவருத மேலோரைப் பொய் சொல்லியேனும் காத்தல் அறமாகும்; பொய் சொல்லித் தீயரைக் காத்தல் தீதாகும்; அறங்கூறவையத்தில் சான்ருகவரின் உயர்ந்தார் பொருட்டும் பொய்ம்மையை மறந்தும் நல்லோர் கூருர்.*

விளக்கவுரை: சொற்றும்—சொல்லியும். ஓம்பல்—பாதுகாத்தல் அவ்வுரை—பொய்ம்மொழி. வெய்யர்—தீயர். வழுக்குதல்—தவறுதல், மறத்தல்.

எதன் பொருட்டும் அறங்கூறவையத்தில் பொய்ச்சான்று கூறலாகாது என்பது கருத்து. (ரு)

**56. மற்ருேர்பாற் சொல்லேனென் றேற்ற மறைமொழியைப்
பிற்றைப் பிறர்போய்ப் பெரிது வருத்தினும்
உற்ற துரைப்பது பொய்யாம் உதுமறைத்து
மற்ருென்று கூறல் வழக்கு.**

***பொழிப்புரை:*** *அயலாரிடத்துச் சொல்லேன் என்று தான் கேட்ட மறைமொழியைப் பின்னர்ப் பிறர் போய் மிகவும் துன்புறுத்திக் கூறுமாறு கேட்பினும் அம்மறை மொழியைக் கேட்டவாறே உரைப்பது பொய்யேயாகும். ஆதலால் அதனே மறைத்து பிறிதொன்று கூறுதலே முறை.*

விளக்கவுரை: மறைமொழி—அயலார் அறியின் கேடு பயக்குமென மறைத்து வைக்குஞ் சொல். பிற்றை—பின்னர். உற்றது—முன்னர்த் தான் கேட்டு உணர்ந்தது. 'உது'-சுட்டு. வழக்கு—முறை.

கொன்றன்ன இன்னா செய்யினும் தான் கேட்ட மறைமொழியைப் பிறர்க்கு உரைத்தல் தவறு என்பது இதனால் கூறப்பட்டது. (சு)

**57. பிறர்தம்மின் மேலா வினையாப் பிறங்கிற்**
**பொருதிழிபு கண்டக்கால் புன்மை மகிழ்ப**
**சிறுமை யுறுங்கா லழுங்கிச் சிறந்தால்**
**உறுபவே சான்றோ ருவப்பு.**

*பொழிப்புரை:* தம்மினும் சிறந்தவராகவோ தம்மோடு ஒத்தவராகவோ பிறர் வாழக் காணின் பொறாமல் அவர் தாழ்வுறுதல் கண்டவிடத்துக் கீழோர் மகிழ்வர்; பிறர் தாழ்வுறுங்கால் வருந்தி அவர் சிறந்தவிடத்து மகிழ்வர் மேலோர்;

விளக்கவுரை: இணை—ஒப்பு. 'புன்மை'-ஆகுபெயர். சிறுமை—வறுமை. 'உறுபவே' என்பதில் ஏ-அசைநிலை கீழோர் இயல்பும், மேலோர் இயல்பும் இதனால் கூறப்பட்டன.

58. பிறராக்கங் காணிற் செவிக்கொளிற் பேணப்
பொறுமை கயவருளும் யார்மாட்டும் போகா
மறலியின் மிக்கொறுப்ப வந்தெய்தும் நாடி
யறன்முற்று மில்லா ரகம்.

*பொழிப்புரை:* பிறர் செல்வம் உறுவதைக் காணினும் கேட்பினும விரும்பாது கொள்ளும பொறுமையானது கீழ்மக்களுள்ளும் எல்லோரிடத்துஞ் செல்லாமல் அறத்தினைச் சிறிதும எண்ணுதவர் உள்ளத்தினை நாடி அவருக்குக் கூற்றுவனைக் காட்டிலும மிககத் துன்பத்தினைச் செய்ய வந்து சேரும்

விளக்கவுரை: பொறுமை கயவருளும் யார்மாட்டும் போகா; அறம் முற்றும் இல்லார் அகம் நாடி மறலியின் மிக்கொறுப்ப வந்தெய்தும் எனக் கூட்டிப் பொருள் கொள்க. (எ)

'பேண' ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'கயவருளும்,'-முற்றும்மை. 'மறலியின்'-இன் உருபு உறழ்பொருளில் வந்துளது. கயவருள்ளும் சிலரே பொறுமை கொள்வர் என்பது கருத்து. (அ)

59. மகளிர் கருச்சிதைத்தல் கற்பழித்தல் வைப்போர்
உகவில் முதல வுலப்பத்தீ வைத்தல்
அகவையவ் வாண்டே யறவெரிவா யாழ்த்தும்
மிகல்வினை யீண்டுமுறன் மெய்.

**பொழிப்புரை:** மகளிர் கொண்டுள்ள கருவினைச் சிதைத்தலும் கற்பினை அழித்தலும் வைக்கோற் போரும் மனை முதலியனவும் வெந்து சாம்பராகுமாறு அவற்றில் தீ வைத்தலுமாகிய தீவினைகள் செய்தவனை அவனுக்குரிய வயதாகிய ஆண்டுகள் முடிந்ததும் நரகிடை வீழ்த்தித் துன்புறுத்தும்; அத்தீவினைகள் மிகுமானால் இம்மையினும் துன்பம் உறுதல் மெய்.

விளக்கவுரை: வை—வைக்கோல். இல்—மனை. அகவை—வயது. ஆண்டு—வருடம். எரிவாய்—நரகு. மிகல்வினை—மிக்க தீவினையின் பயன். ஈண்டும்—இம்மையினும்.

செய்த தீவினை விடாது தொடர்ந்து துன்புறுத்தும் என்பது கருத்து.

'தீவினை செய்தான் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.' —குறள் (௯)

60. கூலி கொடாதும் குறைத்தும்பன் னாட்கழிப்பிச்
சால வருத்திப்பின் றந்து மருஞர்செய்தும்
வேலைகொள் வார்க்கிருட் பார்விட்ட பின்னராம்
போலும் சிவிகைப் பொறை.

**பொழிப்புரை:** கூலி கொடாமலும் கூலியைக் குறைத்துக் கொடுத்தும் பலநாள் கழிந்த பின்னர் மிகவும் வருத்திப் பின் கொடுத்தும் துன்பம் செய்தும் வேலை கொள்வார்க்கு நரகின் நீங்கின பின்னரும் உலகின்கண் மகனாகப் பிறந்து பிறர் ஊரும் சிவிகையைச் சுமந்து செல்லும் நிலைமை வந்து சேரும்.

விளக்கவுரை; பன்னாள்—பலநாள். கழிப்பி—கழித்து. சால—மிக உரிச்சொல். அருஞர்—துன்பம். இருட்பார்—இருள்சேர்ந்த உலகம், நரகம். வேலை கொள்வார்க்கு இருட்பார் விட்ட பின்னர் சிவிகைப் பொறை ஆம் எனக் கூட்டுக. 'போலும்'-உரையசை. (௬0)

# 7 ஈகை

61. உடல்பொரு டாமே படைத்தா ருளரோ
உடையா னிறையே யொழியா வறத்தின்
நடையார் பிறர்க்களிப்ப நல்கின னடித்
தடையின்றி யொல்வ தரல்.

**பொழிப்புரை:** உடலையும் செல்வத்தையும் தாமே உண்டாக்கிக் கொண்டவர் யாருமில்லை; அவற்றிற்கு உரியவன் இறைவன் ஒருவனேயாவான். அறநெறியின் நீங்காதொழுகுவோர் வறுமையால் வாடும் பிறர்க்கு அளிப்பதற்காகவே அவைகளை அவன் கொடுத்தருளினன்; ஆதலால், துன்புறுவோருக்குக் கொடுத்தற்கியலும் பொருள்களைச் சிறிதும் தடையின்றி விருப்பத்தோடு தருக.

**விளக்கவுரை:** 'உளரோ'-ஓ எதிர் மறை. 'இறையே'-ஏ பிரிநிலை நடையார்—ஒழுகுவோர். ஒல்வ—கொடுத்தற்கியலும் பொருள்கள். 'தரல்'-அல் ஈற்று வியங்கோள். அறஞ் செய்யாதார் பொருளானாகும் பயனை யடையார் என்பது கருந்து. (க)

62. காயமும் பொன்னும் கனப்போ லழியுங்காண்
பேயே யெனக்காத்துப் பின்னுவ வென்றெண்ணி
ஈயாமை தானுநன் றென்றுமவை பொன்றுவேல்
சாயாமுன் வாய்ப்ப தரல்.

**பொழிப்புரை:** உடலும் பொருளும் காணுங் கனவே போன்று அழிந்து போகும்; அவை என்றும் அழியாமலிருக்குமானால் பின்னர் உதவும் என்று எண்ணி இரப்போருக்கு ஈயாமல் பேயே போன்று அவைகளைக் காத்துக்கொண்டிருத்தலும் நலமாகும்; அவை அழிதல் ஒரு தலையாதலால் அழியாமுன் கொடுத்தற்கியைந்த பொருளைப் பிறர்க்குத் தருக.

விளக்கவுரை: 'அழியுங்காண்'-என்பதில் காண் அசைநிலை. 'பேயே'-ஏ பிரிநிலை. 'ஈயாமைதானும்'. தான் அசைநிலை. உம்மை—இழிவு சிறப்பு.

'அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால்
அற்குப வாங்கே செயல்.' —குறள்
'நாச்செற்று விக்குள்மேல் வாரா முன்னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.' —குறள்

63. கூறை மருந்தொடு சோறுங் கொடுமினோ
ஊறுசெய் தீய ரெனினு முடன்விரைந்து
வேறு கொடுப்பவே மேலவர்த் தேடுதல்
மாறிலா நூலோர் வழக்கு.

*பொழிப்புரை:* நும்பால் வந்து இரப்பவர் உயிர்கட்கு இடையூறு செய்யும் கொடியவர் எனினும் ஆடையும் மருந்தும் அன்னமும் வழங்குமின்; வழங்கின் அப்பொழுதே அவர் விரைந்து நன்மை செய்வர்; துறவோராயின் அவர் இருக்குமிடத்தைத் தேடியடைந்து உதவ வேண்டுமென்பது அறநூல் வல்லாரனைவருங் கண்ட ஒன்றற்கொன்று மாறுபாடில்லாத முடிபு ஆகும.

விளக்கவுரை: கூறை—ஆடை. ஊறு—இடையூறு. வேறு என்பது ஈண்டுக் கொடுமைக்கு மாறான நன்மையை உணர்த்திற்று. மேலவர்—துறவோர். தமக்கு உதவி செய்தவருக்குத் தீயரும் நன்மையே செய்வர் என்பது கருத்து. (௩)

64. பண்புபல பெற்றுமினனும் பேணாப் பரிசினாய்
புண்படூஉங் காக்கைபல பொல்லாக் குணம்பெற்றும்
உண்ப விளித்துதவு மாற்றி னுயர்வுறூஉம்
எண்பெறார் பாத்தூ ணிலார்.

*பொழிப்புரை:* நற்குணங்கள் பல பெற்றிருப்பினும் தன் இனத்தைப் பேணாத தன்மையினால் நாய் துன்பத்தினையடையும்; கொடிய குணங்கள் பல பல பெற்றிருப்பினும் தான் உண்ணும் பொருள்களைத் தன் இனத்தை யழைத்து அவற்றொடு சேர்ந்து உண்பதனால் காக்கை சிறப்பினை அடையும்; தம்பால் உள்ளதைப் பகுத்துக் கொடுத்து உண்ணாமல் தாமே தனித்து உண்பவர்கள் பிறரால் ஒருபோதும் மதிக்கப்படமாட்டார்கள்.

விளக்கவுரை: இனம்பேணு—சுற்றம் தழுவாத. பரிசு—இயல்பு எண்—மதிப்பு. பாத்தூண்—சுற்றத்தார், விருந்தினர், இரவலர் முத லியவர்களுக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணுதல். பகுத்துண்ணுர் மதிப்புறுர் என்க.

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள.' —குறள் (௪)

**65.** பாரி ததீசி பலிகன்ன ஞதியோர்
ஓரி னிணையில் வணிக முஞற்றிஞர்
நீரி னெழுத்தேர் நிலையாப் பொருள்கொடீஇப்
பேரா நிலைப்புகழ் பெற்று.

**பொழிப்புரை**: *ஆராயுமிடத்துப் பாரி ததீசி பலி கன் னன் முதலியவர்கள் ஒப்பற்ற வாணிபம் செய்தவரேயாவர், நீரின்மேல் எழுதிய எழுத்தே போன்று அழியும் பொருளைக் கொடுத்து என்றும் அழிவின்றி நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றதனுல்.*

விளக்கவுரை: பாரி புலவர்க்கும் இரவலர்க்கும் மாரி போல் வழங்கினதேயன்றி ஓரறிவுயிராகிய முல்லைக்கும் தன் பொற்றேரை யீந்தான்; ததீசி முனிவர் தம முதுகெலும்மை இந்திரனுக்கு வழங்கி ஞர்; மாபலி வாமனனுக்கு மூன்றடி மண் ஈந்தான்; வாமனன் ஈரடி யால் மூவுலகையும் அளந்து கவர்ந்து கொண்டு மூன்ருவது அடியை அவன் தலைமீது வைத்துப் பரமபதத்தினை அவனுக்கு அருளினன்; கன்னன் இந்திரனுக்குத் தன் கவச குண்டலங்களும், கண்ணனுக் குத் தான் செய்துவந்த அறத்தின் பயனையும் கொடுத்தான். உஞற் றிஞர்—செய்தார். 'ஏர்'-உவம உருபு. 'பேரா'-ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

ஒன்ருக வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதொன் றில். —குறள் (௫)

**66.** ஈப்பிற் பிறமிக்க நல்லன இல்லவா
நீப்பிற் பிறமிக்க வீடில்லை நீடுயிர்க்
காப்பிற் பிறமிக்க கொள்வவில் வள்ளுவன்
யப்பாபிற் பிறமிக்க இல்.

**பொழிப்புரை**: *இரப்பவர்க் கீதலினும் சிறந்த நற்செயல் கள் வேறு இல்லை; பற்று விடுதலினும் சிறந்த வீடு பேறு வேறு இல்லை; வாழும் உயிரைக் காத்தலினும் மேற்கொள்ளு*

*தற்குரிய சிறந்த அறம் வேறு இல்லை; வள்ளுவனார் இயற்றியருளிய திருக்குறளினும் சிறந்த நூல் வேறு இல்லை.*

**விளக்கவுரை:** ஈப்பு—ஈதல். நீப்பு—நீத்தல், பற்று விடுதல். காப்பு—காத்தல். யாப்பு—செய்யுள், ஈண்டு திருக்குறளை உணர்த்திற்று. 'இல்லவாம்'-என்பதில் ஆம். அசைநிலை.

திருக்குறளினிடத்து இந்நூலாசிரியர் கொண்டுள்ள பற்றும் பெருமதிப்பும் இதனால் புலனாகின்றது. (சு)

67. ஏற்றது மூவடிமண் என்னினு மூவுலகென்
றாற்றலாற் காட்டி நெடியோ னருள்செய்தான்
பேற்றையளப் பார்யார் பெரியார்க்கே தானுமொன்று
போற்றி யளித்தல் பொருள்.

***பொழிப்புரை:*** *தான் மாபலிபால் இரந்து பெற்றது மூவடி மண்ணே எனினும் நெடியோன் தன் ஆற்றலால் மூவுலகும் என்று காட்டி அவனுக்குப் பரமபதத்தையருளினன். பெரியோர்களுக்கீந்த தானத்தின் பலனை இனைத்து என்று அளந்து உரைக்க வல்லார் யார்? ஒருவருமிலர் ஆதலால், பொருளைப் போற்றிப் பெரியோர்கட்கு யாதேனும் ஒன்றை யாவது கொடுத்து உதவுக.*

**விளக்கவுரை:** ஏற்றது—பெற்றுக் கொண்டது. ஆற்றல்—பெருமை, வல்லமை. நெடியோன்—திருமால்.

உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். —நாலடியார். (எ)

68. மாணறிவ ரென்றுணரின் வன்பகைவ ராயினும்
பேணிக் கலைப்பொருளு மீதல் பிழையன்றே
பூணுடல் பொன்றிடினும் பொன்ரு புகழுடல்
காணிற் றுரோணன் கரி.

***பொழிப்புரை:*** *தம்பால் எய்தியவர் பேரறிஞரென்று தெரியின் அவர் கொடிய பகைவரே ஆனாலும் அவருக்கு அருமைமிக்க கலைப் பொருளையும் விருப்பத்தோடு கற்பித்தல் பிழையன்று; பொருந்திய ஊனுடல் அழிந்து போனாலும் புகழுடல் என்றும் அழியா; அதற்குத் துரோணனே சான்று ஆவான்.*

விளக்கவுரை: மாணறிவர்—பேரறிஞர். வன்பகைஞர்—தன்னை கொல்லும் பகைவர். பொன்ரு—அழியா. கரி—சான்று

தம்மைக் கொல்லுவதற்காகவே பிறந்தவன் என்று தெரிந்திருந்தும் தம்பால் வில்வித்தை கற்றுக்கொள்ள விரும்பி வந்த திட்டத்துய்மனுக்கும் அதனைத் துரோணுச்சாரியார் கற்பித்தார். (அ)

69. தாழைமுள் பாம்பொடு தானுறினு மப்பூவைச்
சூழ்மணத்தாற் சென்னிமிசைச் சூடுப வீகையினன்
கீழ்குலத்தான் தீயார்க் கெழுமியா னயினுஞ்சீர்
சூழ்தலான் வையந் தொழும்.

*பொழிப்புரை:* தாழம்பூவானது முள்ளுடனும் பாம்புடனும் சேர்ந்து இருந்தாலும் சூழ்ந்துள்ள நறுமனத்தால் அதனைத் தலைமேல் சூடிக்கொள்வர்; தாழ்ந்த குலத்தானயினும் தீயவர்களோடு சேர்ந்து ஒழுகுபவனயினும ஈகையால் புகழை மேவி இருப்பானயின் அவனை உலகம் தொழும்.

விளக்கவுரை: 'தாழை'-ஆகுபெயர். 'ஒடு'-உருபை முள்ளுடனும் கூட்டுக. சென்னி—தலை. தீயார்—கொடியவர். கெழுமுதல்—சேர்ந்து பழகுதல். வையம்—உலகோர், ஆகுபெயர். இதனுள் எடுத்துக் காட்டுவமையணி அமைந்துள்ளது. (கூ)

70. கொடுப்ப தழுக்கறுப்பான் கோடித் தடுப்பான்
தடுப்ப நினைப்பான் இவர்சுற்றந் தாமும்
உடுப்பதூஉ முண்பதூஉ மின்றி யுழன்றே
அடுப்ப கொடிய அளறு.

*பொழிப்புரை:* ஒருவருககு ஒருவர் ஒன்று வழங்குதலைப் பார்த்துப் பொருமை கொளபவனும், வெறுத்துத் தடுபபவனும், தடுக்க நினைப்பவனும் ஆகிய இவர்கள சுறறத்தாரும் உடுக்க உடையும உண்ண உணவுமில்லாமல் வருந்திக் கொடிய நரகினையும் அடைவர்.

விளக்கவுரை: பொருமையுடையோர் தாமே அன்றி அவர் சுற்றமும் அழியுமென அதன் கொடுமை கூறியவாறு. அடுப்ப—அடுப்பர் அளறு—நரகு.

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.' —குறள் (கo)

# 8. துறவு

71. மகவு மனைபொன் கலைகண்மாய் வொன்றே
பகைமிடி சோம்பு பருவர லாசை
வெகுளியா ஞமெனின் மேற்கடை போகா
துகளறவாய்ந் தெய்தல் துறவு.

*பொழிப்புரை:* மக்கள் மனைவி செல்வம் பற்றுக்கோடு முதலியன அழிதலும், பகை வறுமை சோம்பல் துன்பம் ஆசை முதலியன வெகுளியான் உண்டாதலும் உண்மையின் முதுமைக்கண் பற்று உடையவர்கட்கு விரும்பிய எண்ணங்கள் நிறைவேறா; ஆதலால் நன்கு ஆராய்ந்து பிறவித் துன்பங்கள் நீங்க இளமையிலேயே துறவு பூண்க.

விளக்கவுரை: கலைகண்—பற்றுக்கோடு, மிடி—வறுமை. பருவரல்—துன்பம். துகள்—குற்றம், பிறவித்துன்பம். எய்தல்—எய்துக. 'ஒன்றே'-எண்ணிடைச் சொல்.

'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
தற்றே ருறுவ தறிக.' —மணிமேகலை (௧)

72. வஞ்சத் துறவால் மனிச்சர் மயங்குற
நெஞ்சிற் றுறவார் படிற்றொழுக்கில் நின்றவர்
நஞ்சிற் கொடியர்பின் வீழ்ந்தெழார் நைந்துளம்
அஞ்சக் கொடிய வளறு.

*பொழிப்புரை:* உள்ளத்தில் பற்று விடாமலிருந்தும் மக்களனைவரும் மயங்குமாறு பற்று விட்டவர் போன்று வேடம் பூண்டு வஞ்சித்து வாழ்வார் விடத்தினும் கொடியரேயாவர்; அவர் இம்மையில் பல்வகைத் துன்பங்களையும் அடைந்து

*மறுமையிலும் மனம் நொந்து அஞ்சக் கொடிய நரகிடை வீழ்ந்து அழுந்துவர்.*

விளக்கவுரை: படிற்றொழுக்கம்—தவவேடத்தில் மறைந்து நின்று தவம் அல்லாத செயல்களைச் செய்தல். உளம் நைந்து அஞ்சக்கொடிய அளறு வீழ்ந்து எழார் எனக் கூட்டிப் பொருள் கொள்க. தமக்கு உதவி செய்தாரை மறுமையில் இழிந்த பிறப்பினராகப் பிறக்குமாறு செய்தலால் நஞ்சிற் கொடியர் என்றார்.

அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த்
தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி
யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர்
மடங்கலஞ் சீற்றந் துப்பின் மானவேல் மன்ன ரேறே.
—சீவகசிந்தாமணி (உ)

73. புறத்துமனஞ் செல்லாமே வேட்டுவன்பால் புக்க
திறத்தாற் புழுவும் அதன்வடிவாந் தேரின்
அறக்கடலா மண்ண லடிசேர்ந்தா லன்னோன்
இறப்பிலுரு வெய்த லியல்பு.

***பொழிப்புரை:*** *புறத்தில் மனஞ் செல்லாமல் குளவியினிடத்தடைந்த தன்மையால் புழுவும் அக்குளவியின் வடிவத்தையடையும்; அதுபோல் புறத்தே மனஞ் செல்லுவதால் உளவாகுந் தீமைகளை ஆராய்ந்து அறிந்து அதனை அடக்கி அறவாழியந்தணனாகிய இறைவனடியையே இடைவிடாது நினைப்போர் அவ்விறைவனுடைய அழிவில்லாத உருவினை அடைவது மெய்.*

விளக்கவுரை: புறத்துமனஞ் செல்லாமை—வேறொன்றை நினையாது குளவியையே நினைத்துக் கொண்டிருத்தல். வேட்டுவன்—குளவி. அறக்கடலா மண்ணல்—இறைவன். அன்னோன்—அவன். இறப்பு—அழிவு. இயல்பு—மெய். தேர்ந்து என்னும் எச்சம் தேரின் எனத் திரிந்து நின்றது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.' —குறள் (ரு)

74. பாலை கடந்தினிய பூஞ்சோலை பற்றற்கு
மேலாஞ் சிவிகைமிசைச் செல்வான் விரும்புமோ
கோலுங் குடைசெருப்பு மெய்யுணர்ந்தார் கொள்ளாரே
மேலாய யோகும் விழைந்து.

*பொழிப்புரை:* பாலை நிலத்தைக் கடந்து இனிய பூஞ் சோலையை அடைவதற்குப் பிறரால் சுமக்கப்படும் பல்லக்கில் ஏறிச் செல்வோன் கோலும் குடையும் செருப்பும் விரும்பான்; தத்துவ ஞானத்தினையடைந்தோர் சிறந்த யோகப் பயிற்சியையும் விரும்பி மேற்கொள்ளார்.

விளக்கவுரை: சிவிகை—பல்லக்கு. விரும்புமோ—விரும்பான். ஓ-எதிர் மறை. கோல்—ஊன்றுகோல். 'யோகும்'-உம்மை உயர்வு சிறப்பு. ஞானமே வீடு பேற்றினுக்குச் சிறந்த சாதனம் என்பது கருத்து.

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.' —குறள் (௪)

75. ஒருதலை யேனு முணாவினுயிர் நிற்றல்
வருவாய்க்குத் தக்க வயிறுகொள லின்றே
பொருபசிக்கு நேர்வ புசிப்பினிதா மன்றிப்
பெருவாழ்வு வேண்டல் பிழை.

*பொழிப்புரை:* உணவினால் உயிர் உடலொடு பொருந்தி நிற்பது உண்மையே எனினும் வருவாய்க்குத் தக்கவாறு வயிற்றினை விரிவுபடுத்திக் கொள்ள இயலாது; துன்புறுத்தும் பசிநோயைப் போக்கக் கிடைத்த உணவினை உண்ணுதல் இன்பமாகும்; அவ்வாறு செய்யாமல் செல்வத்தோடு சிறப்பாக வாழ விரும்புதல் துன்பத்துக்கேதுவாகும். துன்பத்துக்குக் காரணம் பற்றே என்பது கருத்து.

விளக்கவுரை: ஒருதலை—உண்மை. உணா—உணவு. பொருபசி—அறிவு முதலியவற்றை அழித்துத் துன்புறுத்தும் பசி. பிழை—தீது.

'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்.' —புறநானூறு

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே.'—மணிமேகலை

'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.' (௫)

76. எண்ணின் இரத்தம் தசையே இருகொங்கை
புண்ணென்றே அல்குல் புழுக்கும்பி சேறுநிறை
துண்ணெனன் குழியஃதே துன்புறுதீச் சூழ்நரகு
பெண்ணுசை சாலப் பிழை.

*பொழிப்புரை:* ஆராயின் கொங்கைகளிரண்டும் இரத்தமும் தசையுமேயாதல் புலனும்; அல்குலானது புண்ணும் புழுக் குவியலும் அச்சத்தைத் தரும் சேறும் நிறைந்த குழியாகும்; மேலும் அதுவே மிக்க துன்பத்தைத் தரும் கொடுமை நிறைந்த நரகமும் ஆகும். ஆதலால் பெண்ணுசை கொள்வது மிகவும் தீதாகும்.

விளக்கவுரை: தசை—இறைச்சி. கும்பி—குவியல். துண்ணெனல்—அச்சக் குறிப்பு. தீச்சூழ் நரகு—கொடுமைகள் நிறைந்த நரகம்.

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே' —கம்ப ராமாயணம் (சு)

77. காவாமை யாற்பலநோய் காப்பினுநோய் பற்பலவே
யாவானுஞ் செய்வதுநோய் செய்யாமை யானுநோய்
சாவாமை நோய்சாவு நோய்காண் தவிர்கவே
ஆவா வுடற்க ணவா.

*பொழிப்புரை:* உடலைக் காவாதிருப்பின் பலநோய்கள் வந்துறுப; காத்துவரினும் பற்பல நோய்கள் வருதல் ஒருதலை; நோய் நீக்கத்தின் பொருட்டுச் செய்வனவும் துன்பந் தருவனவேயாகும்; செய்யாமலிருப்பினும் நோய் நீங்காது; இறவாமலிருத்தலும் துன்பம்; இறத்தலும் துன்பம்; ஆவா உடலின் மீது வைத்துள்ள பற்றினை விட்டு விடுக.

விளகககவுரை: காவாமை செய்யாமை சாவாமை என்பன எதிர் மறைத் தொழிற் பெயர்கள். எஞ்ஞான்றும் உடலால் வருவது துன்பமே என்பது இதனுல் கூறப்பட்டது. உடலின் மீதும் பற்று வைக்கலாகாதென்பது கருத்து.

'அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.' —குறள் (எ)

78. ஆசைப்பேய்க் கோட்பட்டா னண்ட மளவில
பேசப் பெறினும் பயனென்கொல் பீழையே
ஆசையிலாற் கொன்றுனு மில்லெனினு மல்லலில்
ஈச னவனே யெனல்.

*பொழிப்புரை:* ஆசையாகிய பேயால் பிடிக்கப்பட்டவன் யாவரும் புகழ்ந்துரைக்குமாறு அளவிடற்கரிய உலகங் களைப் பெற்றாலும் அவற்றால் அவன் எய்துவது துன்பமே யன்றி இன்பம் ஒரு சிறிதும் இல்லை; பற்று விட்டவனுக்கு யாதொரு பொருளுமில்லை எனினும் அவன் ஒருபோதும் துன்பம் அடையான்; ஆதலால் அவனே ஈசனுவான் என்க.

விளக்கவுரை: அண்டம்—உலகம. பேச—யாவரும் புகழ்ந்து ரைக்குமாறு. பீழை—துன்பம். அல்லல்—துன்பம். எனல்—என்க. பற்றுடையான் எவ்வளவு வந்தாலும் இன்புறன் என்பது கருத்து. (அ)

79. இல்லார் பொருள்நாடல் வையத் தியற்கையே
எல்லா முடையார் விரும்பார்மன் னெப்பொருளும்
நில்லாமை யுள்ளி நிராசைப் பொருள்பெறின்
இல்லாப் பொருளியாது மில்.

*பொழிப்புரை:* பொருளில்லாதவர் (வறிஞர்) பொருளை விரும்பித் தேடுதல் உலகியற்கையே யாகும்; எல்லாப் பொருளையும் உடையவர் எப்பொருளையும் விரும்பார். செல்வம் இளமை உடல் முதலியன அழியுமியல்பினவே, நிலைத்திருப் பன அல்ல என எண்ணிப் பற்றின்மை என்னும் பொருளைப் பெற்றால் பின்னர் இல்லாத பொருள் யாதுமில்லை.

விளக்கவுரை: இல்லார்—வறிஞர். நாடல்—விரும்புதல் வையம—உலகம். நில்லாமை—நிலையாமை. நிராசை—பற்றின்மை. யாதும்—ஒன்றும். பற்று அற்றவன்பால் எல்லாச் செல்வமும் தாமே வந்து எய்தும் என்பது கருத்து. (கூ)

80. இச்சை யறுத்துயர் மெய்யுணர் வெய்திஞேர்
எச்சம யத்தி லிருப்பினு நீங்கினும்
பிச்சை புகினும் பெருமுயல் கொள்ளினும்
உச்சிமேற் கொள்ளும் உலகு.

***பொழிப்புரை:*** *பற்று அற்று மெய்யுணர்வினை யடைந்தோர் எந்தச் சமயத்தினராக இருந்தாலும் எந்தச் சமயத்தையும் சேராதவராக இருந்தாலும் பிச்சையெடுத்து உண்பவராக இருந்தாலும் ஏதேனும் தொழிலை மேற்கொண்டு மெய்வருந்த உழைப்பவராக இருந்தாலும் அவரை உலகம் உச்சிமேற்கொண்டு போற்றும்.*

**விளக்கவுரை:** இச்சை—பற்று. மெய்யுணர்வு—ஞானம். பெருமுயல்—மிக்க உழைப்பு. 'உலகு'-ஆகுபெயர். உண்மை ஞானியை உலகோர் வணங்கிப் போற்றுவர் என்பது கருத்து. *(௧0)*

# ௯. வெகுளாமை

81. சிறுமைபிறர் சொல்லிற் பொறாது சினத்தல்
அறிவன் றஃதுண்மை யாயின் மகிழ்க
பிறிதாயின் நிந்தை யவர்க்கே தமக்கென்
பொறையே அறிஞர்க்குப் பூண்.

*பொழிப்புரை:* தம்மைக் குறித்துப் பிறர் புறங்கூறின் பொறாது வெகுளுதல் அறிவுடைமையாகாது. அவர் கூறினது உண்மையானால் மகிழ்ச்சி அடைக; பொய்யானால் அவர்க்கே பழியாகும்; அதனால் தமக்குப் பழியோ துன்பமோ உண்டாகாது; அறிஞர்க்கு அழகு பொறுமையே ஆகும்.

விளக்கவுரை: சிறுமை—புறங்கூறுதல், இகழ்ந்து கூறுதல். நிந்தை—பழி. பொறை—பொறுமை. எவ்வாற்றானும் வெகுளலாகாதென்பது கருத்து.

'தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.' —குறள் (க)

82. நூலறியா மாக்கள் நுணங்கறி வின்மையால்
சால விழித்தாங் கொறுப்பினுந் தாம்பொறுக்க
மேலோர் சிறியோர் வினைமதியார் கொல்வார்யார்
காலானை ஈமிதித்தக் கால்

*பொழிப்புரை:* நீதிநூல் கல்லாத புல்லர் நுண்ணுணர்வு இல்லாமையால் மிகவும் இகழ்ந்து கூறி ஒறுத்தாலும் அறிஞர்கள் பொறுத்துக் கொள்வார்களாக; சிறியோர் செயலைப் பெரியோர் ஒரு பொருளாக மதியார்; ஈயானது தன் காலால் மிதித்தவிடத்து வெகுண்டு அதனைக் கொல்வார் யாரும் இலர்.

விளக்கவுரை: மாக்கள்—பகுத்தறிவில்லாதவர்கள். 'மாவும் மாக்களும் ஐயறி வினவே' 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களைக் காண்க. நுணங்கு அறிவு—பொருள்

களை நுனித்து ஆராய்ந்தறியும் அறிவு. 'சால'-உரிச்சொல். ஈ காலானே மிதித்தக்கால் கொல்வார் யார் என மாற்றிப் பொருள் கொள்க. (உ)

83. கேடுபிறராற் கெழீஇயினும் தாஞ்சினவார்
கோடா மனத்தவர் கூர்ந்துணரி னெப்பயனும்
பீடுறு மூழா னலதில் பிறர்கருவி
நாடினம்பை நோதல் நகை.

*பொழிப்புரை:* பிறரால் தமக்கு அழிவு வரினும் நல்ல உள்ளம் உடையோர் ஒருபோதும் சினங்கொள்ளார்; ஆராய்ந்தறியின் ஒருவரடையும் பயன்கள் யாவும் வலிமை மிக்க பழவினையாலன்றி உளவாகா என்பது புலனும்; பிறர் கருவியாதலன்றி வேறில்லை; எய்தவனை நோவாது அம்பை நொந்து கொள்ளுதல் நகைப்பிற்கே இடமாகும்.

விளக்கவுரை: கேடு—அழிவு. கோடா மனம்—தீயன சிந்தியாத உள்ளம். கூர்ந்துணர்த்தல்—ஆராய்ந்தறிதல். பீடு—வலிமை. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது புறநானூறு. (ந)

84. வல்லோற் சினந்துதக்கன் நொந்தான் வலிகொண்டே
அல்லல் விளைத்து மழிந்தான் சுயோதனன்பின்
செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற.

*பொழிப்புரை:* தன்னினும் வலிமை மிக்கவனைச் சினந்து தக்கன் மிக்க துன்பத்தினை அடைந்தான்; தன்னுடைய வலிமையால் துரியோதனன் பாண்டவருக்குப் பல இன்னல்களை விளைத்தும் பின்னர் அவர்களால் அழிந்தே போனான். ஆதலால், ஒருவன் வெகுளி அவனின் வலியார்மேல எழின் அவனுக்கே தீதாகும்; ஏனை எளியார்மேல் எழினும் அதனிற் றீயன பிற இல்லை.

விளக்கவுரை: வல்லோன் என்றது சிவபெருமானை. தக்கன் சிவபெருமானை இகழ்ந்து வேள்வி செய்ததால் மிக்க துன்பமுற்றான். துரியோதனன் தன் வலிமையால் பல துன்பங்களைப் பாண்டவர்கட்கிழைத்து முடிவில் போர் புரிந்து அவர்களால் கொல்லப்பட்டான். எவ்விடத்தும் சினம் கொள்வது தீது என்பது இதனால் கூறப்பட்டது. பின் இரண்டடியும் திருக்குறள். (ச)

85. நட்டாராற் கேடு வாலுமுள நாடாமே
ஒட்டா ரெனச்சினந் தூறவர்க் கெண்ணற்க
வெட்டார் நெறிபிழைத்து வீழினுங்கால் நாக்கடிக்கப்
பட்டாலும் தட்டார்தம் பல்.

*பொழிப்புரை:* நட்பினராலும் சில வேளைகளில் கேடு வருதலும் உண்டு; அதனால் அவரைப் பகைவரென எண்ணி ஆராயாமல் அவர்கட்குத் துன்பம் விளைக்க எண்ணற்க. நடக்குங்கால் நெறி தவறி வீழ்ந்தாலும் கால்களை எவரும் வெட்டமாட்டார். பல்லால் நாவானது கடிக்கப்பட்டாலும் தம் பல்லை எவரும் தட்டிவிட மாட்டார்கள்.

விளக்கவுரை: நட்டார்—நட்பினர். ஒட்டார்—பகைவர். ஊறு—துன்பம். நெறி—வழி. பிழைத்து—தவறி. 'எண்ணற்க'-எதிர்மறை வியங்கோள், வெட்டார், தட்டார் என்பன எதிர்மறை வினைமுற்றுக்கள். நல்லன என எண்ணி நட்டார் செய்யும் செயல் ஒருகால் தீமையாய் முடிதலும் உண்டு; அதனைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பது கருத்து. (ரு)

86. ஆசா னவையி லுயிர்க ளரியநூல்
ஈசன் பசுப்பெண்டிர் சேய்நண்ப ரின்னரை
ஏசினர்க் காணிற் பொறைதீ தினிதொறுத்தல்
காசில் வலியிருந்தக் கால்.

*பொழிப்புரை:* ஆசான், குற்றமற்ற உயிர்கள், அரிய நூல், கடவுள், பசு, பெண்டிர், மக்கள், நண்பர் ஆகிய இவர்களை இகழ்ந்துரைப்போரைக் காணின் பொறுத்துக்கொண்டிருப்பது தீது. குற்றமற்ற வலிமையிருப்பின் இகழ்ந்துரைததோரை ஒறுப்பது நன்று

விளக்கவுரை: ஆசான்—ஆசிரியன். நவையில் உயிர்கள்—மக்களுக்குத் தீங்கு பயவாத உயிர்கள். சேய்—குழந்தை. இன்னர்—இவர்கள். ஏசினர்—இகழ்ந்தவர். ஒறுத்தல்—தண்டித்தல். காசு—குற்றம். உயர்திணையும் அஃறிணையும் விரவி மிகுதியான் உயர்திணை முடிபு கொண்டது. (சு)

87. இல்லாள்சேய் சீடர் இணக்க முடையவர்
நல்ல நெறிபிழைப்பிற் செல்லி னவைநெறிக்கண்
சொல்லும் பொறைதீ தினிதே துயர்மிகப்
பல்கா லிடித்தொறுக்கும் பண்பு.

*பொழிப்புரை:* மனைவியும் மகனும் மாணவரும் நட்பினரும் நன்னெறியிலிருந்து வழுவினும் தீநெறிக்கட் செல்லினும் தடுக்காமல் பொறுத்துக் கொண்டிருப்பது தீதாகும்; மிகவும் துன்புறுமாறு பல்கால் இடித்துரைத்தாவது ஒறுத்தாவது நல்வழிப்படுத்துதலே இனிதாகும்.

விளக்கவுரை: இல்லாள்—மனைவி. சேய்—புதல்வன். சீடர்—மாணவர். இணக்கமுடையவர்—நட்பினர். சொல்லும் பொறை—யாவரானும் நன்று என்று கூறப்படும் பொறுமை. துயர்—துன்பம். இவ்விரண்டு பாட்டானும் பொறை தீதாகுமிடமும் ஒறுத்தல் நன்றாகுமிடமும் கூறப்பட்டுள்ளன. (எ)

88. மெய்யுணர் வுற்றுயர் வித்தகரைப் பித்தரென
வைய மிகழினும் நெஞ்சத்து மாசறுதல்
எய்துநா ளென்றுகொலா மிப்பித்தர்க் கென்றவர்
செய்வரருள் கொள்ளார் சினம்.

*பொழிப்புரை:* மெய்யுணர்வினை (ஞானத்தினை)யடைந்து உயர்ந்த பெரியோர்களைப் பார்த்துப் பித்தரென்று உலகோர் இகழ்ந்து கூறினும் இப்பித்தருக்கு நெஞ்சத்து மாசு நீங்குதல் என்றோ என்று அப்பெரியோர் இரங்குவர். ஒருபோதும் சினம் கொள்ளார்.

விளக்கவுரை: மெய்யுணர்வு—நத்துவ ஞானம். வித்தகர்—பெரியோர். பித்தர்—பைத்தியக்காரர். அருள் செய்வர்—இரங்குவர். சினம் கொள்வோர் மெய்யுணர்வுற்றவராகார் என்பது கருத்து. (அ)

89. அங்கி தனைக்கொதிப்பச் செய்யினும் அந்நீரம்
பொங்காது சில்கணத்தே தண்ணெனல் பூணுமால்
புங்கவர்பாற் சீற்றம் பொருந்தத்தீ யார்செயினும்
தங்காது செய்யார் தவறு.

*பொழிப்புரை:* நெருப்பானது தன்னைக் கொதிக்குமாறு செய்தாலும் நீர் பொங்கியெழுந்து அதனை அவிக்காமல் சில விநாடிகளில் குளிர்ச்சியை அடையும்; பெரியோர்பால் வெகுளி தோன்றுதற்கேதுவாகிய செயல்களைத் தீயோர் செய்தாலும் அப்பெரியோர்பால் வெகுளி தங்கியிராது; தமக்குத் தீங்கு இழைத்தவருக்குத் தீங்கு செய்யாது பொறுத்துக் கொள்வர்.

விளக்கவுரை: அங்கி—நெருப்பு. நீரம்—நீர். புங்கவர்—மேலோர். தீயார்—கொடியர். தங்காது—சீற்றம் நிலைத்திராது. தவறு—தீங்கு.

தீங்கு செய்வாருக்கும் தீங்கு செய்யாது பொறுத்துக் கொள்ளுதல் மேலோருக்கு இயல்பு என்பது இதனால் கூறப்பட்டது. (௮௯)

90. தம்மை இகழலுடல் தாங்களவு நோவுறுத்தல்
வெம்மை மனக்கு விளைத்தலிவை கீழ்செய்யில்
சும்மா இருப்ப பெரியார் துயர்மிக்கால்
அம்மா பொறையும் அரிது.

***பொழிப்புரை***: *தம்மை இகழ்ந்து கூறுதலும் உடல் தாங்குமளவு துன்புறுத்தலும் மனம் வெறுத்து வெகுளுமாறு பிற செயல்களைச் செய்தலும் ஆகிய இவற்றைக் கீழ்மக்கள் செய்யினும் பெரியோர் வெகுளாது பொறுத்துக் கொள்வர்; கீழ்மக்கள் செய்யும் இடர் மிகுமாயின் பெரியோருக்கியல்பாயமைந்துள்ள பொறுமையும் நீங்கிவிடும்.*

விளக்கவுரை: மனத்துக்கு என்பது மனக்கு என அத்துச்சாரியை குறைந்து நின்றது; தொகுத்தல் விகாரம். சும்மா இருப்ப—அமைதியாக இருப்பர், 'இருப்ப'-பகர ஈற்றுப் பலர்பால் வினைமுற்று.

'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.'
'சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே,' என்றார் பிறரும்.

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பது கருத்து. (௯0)

# 10. இன்னா செய்யாமை

91. எல்லா வுயிரும் இறைவனுட லாதலிற்றும்
அல்லல் பிறசெய்யிற் றுன்புறலி னுயுங்கால்
கொல்லாமை யொன்றே தலையாய நல்லறன்மற்
றெல்லாம் அதன்பின் எழும்.

*பொழிப்புரை:* உயிர்கள் எல்லாம் இறைவனுக்கு உடலாயிருத்தலானும் பிற உயிர்கள் துன்பம் செய்யுங்கால் தாம் துன்புறுதலானும் ஆராயுமிடத்துக் கொல்லாமை ஒன்றே அறங்களுள் சிறந்த நல்லறமாதல் புலனும்; ஏனைய அறங்கள் எல்லாம் அதனிற் றாழ்ந்தனவே ஆகும்.

விளக்கவுரை: 'எல்லாவுயிரும்'-உம்மை முற்றும்மை. இறைவன்—கடவுள். அல்லல்—துன்பம். தலையாய—முதன்மையான, சிறந்த. 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்றார் வள்ளுவனாரும். 'எழும்'-செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று. (க)

92. புரவலர் வீரர் புரைதபு நீதி
மரபிற் பிறவுயிர் மாய்ப்ப வரினும்
கரையகல் அன்பு கசிந்துரு காரேல்
வெருவுறு பாவம் விடா.

*பொழிப்புரை:* மன்னரும் போர்வீரரும் குற்றமற்ற நீதி நெறியின்படி பிறவுயிர்களைக் கொலை செய்ய நேர்ந்தாலும் அவ்வாறு செய்தமைக்கு எல்லையற்ற அன்பால் உள்ளம் நெகிழ்ந்து உருகாயற் போவாராயின் அச்சத்தை விளைக்கும் பாவங்கள் அவர்களை விட்டு நீங்கா.

விளக்கவுரை: புரவலர்—மன்னர். புரை—குற்றம். தபுதல்—நீங்குதல். கரை — எல்லை. கசிதல்—நெகிழ்தல். வெரு—அச்சம். 'விடா'-எதிர்மறைப்பன்மை வினைமுற்று தீயரையும் பகைவரையும்

கொல்வது முறையே எனினும் கொல்ல நேர்ந்தமையை எண்ணி இரங்குதல் வேண்டுமென்பது கருத்து. (உ)

93. தூய விடுத்தாயுள் தேய்த்துத் துயர்தரூஉம்
தீய புலாலுண்ணின் நல்லறிவுந் தேயுமால்
சீயத்தின் வாழ்நாள் சிலவாந்தந் தீனியல்பால்
காயநெடி துய்க்குங் கரி.

*பொழிப்புரை:* *தூய உணவை விடுத்துத் தீயன பயக்கும் புலாலையுண்டால் அது வாழ்நாளைக் குறைத்து நோய் முதலிய துன்பங்களையும் தரும்; நல்லறிவும் தேயும். புலால் உண்ணும் சிங்கத்தின் வாழ்நாள் சிலவாம். கரும்பு தழை முதலியவற்றை உண்ணும் யானையின் வாழ்நாள் மிகப்பலவாம்.*

விளக்கவுரை: தூய—உண்பவர்க்கு நன்மையே பயக்கும் உணவு. தீய—தீமையைத் தருவன. சீயம்—சிங்கம். தீன்—உணவு. காயம்—உடல். மரக்கறிபோன்று புலாலுணவு நன்மை பயவாமையே அன்றித் தீமையும் பயக்குமென்பது கருத்து. (௩)

94. வாழ்நா ளுடனறிவு தேய்வொன்றோ மற்றுப்பின்
ஊழிற் கொலைவினையும் நெஞ்சி னுவக்குமால்
சூழிற்றான் கொல்லாவூன் துய்ப்பினுந் தீதுடல்
வீழின் நரகுறுதல் மெய்.

*பொழிப்புரை:* *புலாலுணவை உண்பவர்க்கு வாழ்நாளும் அறிவும் குறைதலேயன்றிப் பிற்காலத்தில் கொலை செய்யவும் உள்ளத்தில் விருப்பம் உண்டாகும்; கொலை செய்யின் பாவம் உளதாகுமென்று ஆராய்ந்து தான் கொல்லாமல் பிறர் கொன்ற ஊனைத் தின்னுதலும் பாவமேயாகும். அவ்வாறு உண்போரும் மரணத்தின் பின் நரகினையடைதல் தப்பாது.*

விளக்கவுரை: தேய்வு—குறைதல். பின் ஊழ்—பிற்காலம். 'ஆல்'-அசைநிலை, சூழ்ந்து என்பது சூழின் எனத்திரிந்து நின்றது. உடல் வீழ்தல்—மரணமடைதல். கொன்று தின்றலேயன்றி விலைக்கு வாங்கிப் புலாலைப் புசிப்பதும் தீதாகுமென்பது இதனால் கூறப்பட்டது. 'விலைப்பாலிற் கொண்டுஊன் மிசைதலுங் குற்றம்,' 'அறவினை யாதெனிற் கொல்லாமை,' கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று' என்னும் அறவுரைகளையுங் காண்க. (௪)

95. எண்ணிலநோ யொன்ருனு மேகு மொருநோய்க்கே
எண்ணப்பல் கோடி யுளவே மருந்தந்நோய்
மண்ணின் வினைதீர் வழியொன்றுண் ணுமலும்போம்
உண்ணற்க நோயுறினு மூன்.

***பொழிப்புரை:*** *கணக்கற்ற நோய்களனைத்தும் ஓர் மருந்திலேயே நீங்கினும் நீங்கும்; ஒரு நோய்க்கே மிகப் பல மருந்துகளை உண்ண நேர்ந்தாலும் நேரலாம்; உலகின்கண் துன்பம் நுகர்தற்குரிய தீவினை நீங்கினவிடத்து மருந்து எதுவும் உண்ணுமலேயே நோய் நீங்கிவிடுதலும் உண்டு. ஆதலால், நோய் மிகினும் புலால் உணவு கொள்ளற்க.*

விளக்கவுரை: 'ஒன்று'-ஆகுபெயர். பல்கோடி என்பது பன்மை குறித்து நின்றது; மிகப்பல என்பது கருத்து. 'உண்ணற்க'-எதிர் மறை வியங்கோள். நோய் நீங்குதற்காகவும் புலால் உண்ணலாகாதென்பது இதனுல் கூறப்பட்டது. உண்ணின் அப்பாவத்தால் மேலும் நோய் அடைய நேரும் என்பது கருத்து. (ரு)

96. தின்றன வெல்லாம்பின் தின்னுவ அன்பின்றிக்
கொன்றன கொல்ப குறைப்ப குறைத்தன
ஒன்றும் பிழையாதென் றுன்னியுயிர்க் கூறுசெயார்
என்றும் பிறத்த லிலர்.

***பொழிப்புரை:*** *ஒருவனுல் தின்னப்பட்ட ஊனையுடைய உயிர்களெல்லாம் பின்னர் அவனுடைய ஊனைத் தின்பன ஆகும்; அன்பில்லாமல் ஒருவனுல் கொல்லப்பட்ட உயிர்களெல்லாம் பின்னர் அவனைக் கொல்வன ஆகும்; ஒருவனுல் தம் உறுப்புக்கள் குறைக்கப்பட்டன எல்லாம் பின்னர் அவன் உறுப்புக்களைக் குறைப்பன ஆகும்; இவற்றுள் எதுவும் தவருது என்று எண்ணிப் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாதவர்கள் என்றும் பிறவா நிலையை (வீடுபேற்றினை) எய்துவர்.*

விளக்கவுரை: 'தின்றன,' 'கொன்றன, 'குறைத்தன' இம்மூன்றும் செயப்படு பொருளைச் செய்தது போலத், தொழிற்படக் கிளந்த செயப்பாட்டு வினையாலணையும் பெயர்களாகும்; இவை முறையே தின்னப்பட்டன, கொல்லப்பட்டன, குறைக்கப்பட்டன எனப் பொருள்படும். கொல்ப, குறைப்ப இவ்விரண்டும் பகர இடை

நிலை பெற்று வந்த அகர ஈற்றுப் பலவின்பால் வினையாலணையும் பெயர்களாகும். பிற உயிர்களுக்கு ஊறு செய்வோர் வீடுபேற்றினை அடையார் என்பது கருத்து. (சு)

97. ஆற்றலிலா தாரென் றயல்கெடுப்பச் சூழற்க
கூற்றுவ னுண்மை குறிக்கொளல் வேண்டுமால்
நேற்றிருந்தா ரின்றழியக் கண்டு நினைவிலார்
சாற்றினுங் கேளார் தடுத்து.

**பொழிப்புரை:** வலிமையற்றவரென்று எண்ணி அயலாரைக் கெடுக்க எண்ணற்க; கூற்றுவ னிருத்தலைக் கருத்தில் வைத்துக் கொண்டிருத்தல் வேண்டும்; நேற்று உயிருடன் இருந்தவர் இன்று இறந்து ஒழிதலைப் பார்த்திருந்தும் ஆராய்ந்துணரும் அறிவில்லாதவர்கள் பிறர் தடுத்துச் சொன்னாலும் கேளாமல் எளியவர்களைக் கெடுக்கவே துணிவர்.

விளக்கவுரை: ஆற்றல்—வலிமை. 'அயல்'-ஆகுபெயர். கூற்றுவன்—நமன். 'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகல் தாமே வரும்.' 'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு' என்னும் குறட்பாக்களையும் நோக்குக. (எ)

98. ஏதிலார் குற்றங்க ளுடை லியல்பன்றால்
தீதிலார் யாவருளர் தேரி னரியரே
நோதக்க எவ்வுயிர்க்குஞ் செய்யாமே நுண்ணறிவோர்
மேதக்க செய்ப விழைந்து.

**பொழிப்புரை:** அயலார் செய்யும் குற்றங்களை ஆராய்ந்தறிய முற்படுவது முறையன்று; குற்றமற்றவர்கள் யார்? ஆராயின் அரிய (இல)ராதல் புலனும்; நுண்ணறிவுடையோர் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல் விருப்பத்தோடு நன்மையே செய்துவருவர்.

விளக்கவுரை: ஏதிலார்—அயலார், பிறர். நாடல்—ஆராய்ந்தறியத் தொடங்குதல். இயல்பு—முறை. தீதிலார்—குற்றமற்றவர். நோதக்க—துன்பந் தருவன. மேதக்க—மேன்மை தருவன.

'அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு'

என்று வள்ளுவனாருங் கூறுவது காண்க. (அ)

99. தீயரை யேனோர் சினந்து சிதைக்குங்கால்
தூயர் தடாஅர் துகளுறு மென்றஞ்சித்
தீயரல் லாரிடந் தீர்ப்பரே தம்முயிர்
சாயினு மஞ்சாது தாம்.

*பொழிப்புரை:* கொடியவர்களை நல்லோர் வெகுண்டு ஒறுக்கும்பொழுது குற்றமற்ற பெரியோர் தடுக்கமாட்டார்கள்; அதனால் தீமை பெருகுமென்று அஞ்சுதலே தடாமைக்குக் காரணமாகும். நல்லோருக்கு உற்ற இடரைத் தம் உயிருக்குக் கேடு விளைவதாயிருப்பினும் அஞ்சாது சென்று பெரியோர் தீர்ப்பர்.

விளக்கவுரை: தீயர்—தீமையே செய்து வரும் கொடியர். ஏனோர்—நன்மையே செய்து வரும் பெரியோர். சிதைத்தல்—ஒறுத்தல் 'தடா அர்'-செய்யுளிசையளபெடை. துகள்—தீமை. சாயினும்—அழிவு வருவதாயிருப்பினும். தீயர் எவ்வாற்றானும் திருந்தாது நல்லோர்க்கும் தீமையே செய்வராதலின் அவரை ஒறுத்தலும் அறமாயிற்று.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.' —குறள் (சுு)

100. கொல்லக் கருதிலியா னென்னதெனல் கொல்கமன்
வெல்லக் கருதிற் புலமைந்தும் வெல்கநலம்
புல்லக் கருதிற் பரனன்பே புல்லுகசீர்
சொல்லக் கருதிற் சொலல்

*பொழிப்புரை:* கொல்ல விரும்பினால் யான் என்னும் அகப் பற்றையும் எனது என்னும புறப் பற்றையும் கொல்க. வெல்ல விரும்பினால் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளையும் வெல்க; இன்பம் பொருந்த விரும்பினால் இறைவனிடத்து அன்பு கொள்க; சொல்ல விரும்பினால் பிறர் புகழைச் சொல்லுக.

விளக்கவுரை: மெய்யை (உடம்பை) யான் என்று கூறுவது அகப்பற்று. பொன், புவி, மனை முதலியவற்றை எனது என்று கூறுவது புறப்பற்று. புலமென்பது ஈண்டுப் பொறி வாயிலாக வரும் அவாவையுணர்த்தி நின்றது. நலம்—இன்பம். இறைவன்பால் இடைவிடாது அன்பு செய்வார்க்கு, இருவகைப் பற்றும் நீங்கும்; துன்பத்திற்குக் காரணமாகிய பற்று நீங்கவே இன்பம் தானாகவே வந்தெய்தும். பிறர் பழி கூறாது அவர் புகழையே கூறுவார் யாவரானும் நன்கு மதிக்கப்படுவர்.

'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.'
'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'
என்னும் மறைமொழிகளையும் நோக்குக. (க0)

# 11. பொதுவியல்

101. திருவா னறிவும் அறிவால் திருவும்
வரலில் அவையூழ் வகையான் வருவ
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

*பொழிப்புரை:* பொருளால் அறிவும் அறிவால் பொருளும் வருவன அல்ல; அவ்விரண்டும் ஊழ்வினையான் வருவன ஆகும்; உலகத்து ஊழினாலாகிய இயற்கை இரண்டு வகையாக உள்ளன; ஆதலால், செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு.

விளக்கவுரை: பெரும்பாலும் செல்வமுடையோர் அறிவில்லாதவர்களாயிருத்தலும், அறிவுடையோர் செல்வமில்லாதவர்களாயிருத்தலும் கண்கூடு. திரு—செல்வம். வரல் இல்—வருதல் இல்லை. ஊழ் வகை—திருவினைத் தரும் ஊழ், அறிவினைத் தரும ஊழ் என இரண்டாகும். தெள்ளியர்—அறிவுடையர். பின்னிரண்டடியும் திருக்குறளாதல் காண்க. (க)

102. ஈரத் திரியி னிருந்தகளி நெய்த்திரியில்
சாருந் தழலொப்ப நூற்பொருள் சாருமால்
கூரியர் மந்தருழைச் செல்வங் குறுகுமே
யார்மாட்டும் வேசை யென.

*பொழிப்புரை:* நீரால் நனைந்த திரியில் நெருப்பு பற்றாது போதல் போல மந்தமதியுள்ளவர்பால் நூற்பொருள் சாராது; பெரிய தகளியில் உள்ள நெய்யால் நனைந்த திரியில் நெருப்பு விரைந்து பற்றிச் சுடர் விட்டு எரிதல் போல் கூர்மையான அறிவுடையவர்பால் நூற்பொருள் சார்ந்து விளங்கும்; செல்வமோ எனில் பொது மகளிரே போன்று யாரிடத்தும் மேவும்

விளக்கவுரை: ஈரத்திரியில் தழல் ஒப்ப யந்தருமை நூற்பொருள் சாருமெனவும், இருந்தகளி நெய்த்திரியில் சாருந்தழலொப்பக் கூரியருழை நூற்பொருள் சாருமெனவும் கூட்டிப் பொருள் கொள்க, 'உழை'-என்பதனைக் கூரியர் என்பதனோடுங் கூட்டுக. வேசையெனச் செல்வம் யார்மாட்டும் குறுகுமென்றதனால் கற்புடை மகளிர் போன்று நூற்பொருள் கூரியர்மாட்டே குறுகுமென்பதும் புலனாம். (உ)

103. வானெறி வித்துநில னுற்றுங்கு மன்னுயிர்க்குத்
தானியற்று மெவ்வினையுந் தற்சாருஞ் சிற்சில
பானெறி யாற்பயன் பன்னாட் கழிப்பியும்
ஈனும் பனைவித் தென.

***பொழிப்புரை:*** *விண்ணை நோக்கி எறியும் விதை நிலத்தையுறுதல் போன்று ஒருவன் பிற உயிர்கட்குச் செய்த வினைகள் யாவும் பின்னர் அவனையே அடையும்; மிகச் சில வினைகள் ஊழின் முறைப்படி பல நாட்கள் கழிந்த பின்னரும் பனையின் விதையே போன்று பயன்தருவதுமுண்டு.*

விளக்கவுரை: வான்—விண், ஆகாயம். உற்றுல் என்பது 'உற்று'-எனத் திரிந்து நின்றது. ஆங்கு'-உவம உருபு. எவ்வினையு—வினைகள் யாவும். பால்—ஊழ். ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது என்பது இதனால் கூறப்பட்டது. (௩)

104. காலம் பிழைத்தக்காற் பாலுநோய் காட்டிவிடும்
நூலா ருணர்ந்தீயின் நஞ்சமும் நோய்வீட்டும்
சீலரால் துன்பமும் தீயரான் இன்பமுமாம்
காலங் கருதல் கடன்,

***பொழிப்புரை:*** *காலந் தவறிப் பருகினால் பாலும் நோயை விளைவிக்கும்; மருத்துவ நூலார் நன்கு ஆராய்ந்து கொடுத்தால் நஞ்சும் நோயைப் போக்கி விடும்; நல்லோரால் துன்பமும், தீயோரால் இன்பமும் சில சமயங்களில் விளைவதும் உண்டு; ஆதலால், நிகழ்வது ஆகும் காலமா அல்லது போகும் காலமா என்பதனை ஆராய்ந்தறிந்து அமைதியாக இருப்பதே முறையாகும்,*

விளக்கவுரை: காலம் பிழைத்தக்கால் என்பதற்குப் போகூழ் வந்தவிடத்து என்றும் பொருள் கொள்ளலாம். நோய் வீட்டும்—

நோயைப் போக்கிவிடும். நல்லோரால் துன்பம் வந்துழி இது ஊழால் வந்ததே என்று எண்ணி அமைய வேண்டுமே அன்றி அவரை வெகுளலாகாதென்பது கருத்து. (ச)

105. பனையடியிற் பாலுண்ணினுங் கள்ளென்ப யாக
மனையிடத்திற் கள்ளுண்ணினும் மேலென்ப செய்யும்
வினைநல்ல வேனும் உலகம் வெறுக்கும்
நினைக இடத்தின் நிலை.

**பொழிப்புரை:** *பனைமரத்தின் அடியில் அமர்ந்து பாலையே பருகினாலும் அதனைக் கள் என்றே உலகோர் கூறுவர்; வேள்விச் சாலையில் அமர்ந்து கள்ளையே பருகினாலும் அதனைப் பருகுதற்குரிய பால் என்றே கூறுவர்; நல்ல செயலைச் செய்தாலும் செய்யும் இடம் தீதாயிருப்பின் உலகம் வெறுக்கும்; ஆதலால், இடத்தின் இயல்பை ஆய்ந்து செயலைச் செய்க.*

விளக்கவுரை: செய்யும் இடத்தின் இயல்புக்கு ஏற்பச் செயல்கள் மதிக்கப்படுமென்பது இதனால் கூறப்பட்டது. (ரு)

106. தலைமேல் அரதனமே தாங்கினும் வாயின்
நிலைகடுவால் பாம்பஞ்சி நீங்குப யாரும்
கலைபலதேர் நுண்ணறிவ னேனுங் கடுஞ்சொல்
சொலுமாயிற் கொள்ளார் தொடர்பு.

**பொழிப்புரை:** *தலையின்மேல் இரத்தினத்தைத் தாங்கிக் கொண்டிருந்தாலும் வாயில் இருக்கும் விடத்தினால் அச்சமுற்றுப் பாம்பினை நெருங்காது நீங்குவர் உலகோர்; (அது போல்) கலைகள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்த நுண்ணறிவுள்ளவனாக இருப்பினும் கடுஞ்சொல் சொல்வானாயின் அவன்பால் யாரும் நட்புக் கொள்ளார்.*

விளக்கவுரை: அரதனம்—இரத்தினம். கடு—நஞ்சு. நீங்குப—நீங்குவர். தொடர்பு—நட்பு. கலைகள் பலவும் கற்றவனாக இருப்பினும் கடுஞ்சொல் சொல்வானுக்கு யாரும் பகைவராவர் என்பது கருத்து. (சு)

107. கரவினு மிக்க கடிவினை இல்லை
இரவினு மிக்க இளிவரவு இல்லை
புரவினு மிக்க அரணில்லை புல்லார்ப்
பரவினுமில் மிக்க பழி.

*பொழிப்புரை:* இரப்பாரைக் கண்டு தம்பால் உள்ளதை மறைத்து வைத்து இல்லையென்று சொல்லுவதைக் காட்டிலும் மிகக் கொடிய செயல் வேறு இல்லை; ஒருவர்பால் சென்று ஒன்றை இரத்தலினும் இழிவு தருவது வேறொன்று இல்லை; பிற உயிர்களைப் பாதுகாத்தலினும் சிறந்த அரண் வேறு இல்லை; பகைவரைப் புகழ்ந்து வாழ்வதினும் மிக்க பழிதருவது வேறு இல்லை.

விளக்கவுரை: கரவு—கரத்தல், மறைத்தல். கடிவினை—கொடிய செயல். இரவு—இரத்தல். புரவு—புரத்தல். புல்லார்—பகைவர். பரவு—பரவுதல், புகழ்தல். கரவு, இரவு, புரவு உகர விகுதி பெற்ற தொழிற் பெயர்கள். பரவு என்பது முதனிலைத் தொழிற் பெயர்.

'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவின் இளிவந்த தில்.'
ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

என்னும் திருக்குறட்பாக்களையும் நோக்குக. (எ)

108. வண்மை தவங்கல்வி வீரமிவை மற்றின்ன
ஒண்மை யுடையன ஒன்றால் புகழியாக்கை
நண்ணும் அவரன்றே பொன்றா நலம்பெற்றார்
மண்ணாவார் மற்றை யவர்.

*பொழிப்புரை:* ஈகை தவம் கல்வி வீரம் என்னும் இவையும் இவை போன்று சிறப்புடையன பிறவும் ஆகிய இவற்றுள் ஒன்றால் புகழுடம்பினை அடைந்தவரே அழிவில்லாத நிலையினைப் பெற்றவராவார்; ஏனையோர் மண்ணே ஆவர்.

விளக்கவுரை: வண்மை—ஈகை. இன்ன—இவை போல்வன. ஒண்மையுடையன—சிறப்புடையன. யாக்கை—உடம்பு. பொன்றா—அழியாத. புகழுடம்பு மாயாது நிலைத்து நிற்கும், ஊனுடம்பு மாய்ந்து ஒழியும் என்பது இதனால் கூறப்பட்டது. (அ)

109. பொன்னே எனினும் புகுமிட ஞற்கழல்
மன்னர் முடிபோல் மதிப்புற வில்லையால்
என்ன பெருமை இருப்பினும் சிற்றினம்
மன்னிற் கெடுமே மதிப்பு.

*பொழிப்புரை:* பொன்னினாற் செய்யப்பட்டதே என்றாலும் தான் அடைந்துள்ள இடத்தால் கழல் அரசர் முடி

போன்று மதிக்கப்படுவதில்லை; (அதுபோல்) ஒருவன்பால் பெருமைக்கு ஏதுவான குணங்கள் பலவுமிருப்பினும் அவன் கீழ்மக்களைச் சேர்ந்து ஒழுகுவானாயின் உலகோரால் மதிக்கப்பட மாட்டான்.

**விளக்கவுரை:** முடியும் கழலும் பொன்னால் செய்யப்படுவனவே எனினும் அடைந்துள்ள இடத்தால் முடி மதிக்கப்படுகின்றது, கழல் மதிக்கப்படுவதில்லை. பெருமைக்குரிய குணங்கள் பலவும் இருப்பினும் பெரியோரைச் சார்ந்து ஒழுகுவோரே மதிக்கப்படுவர், கீழ்மக்களைச் சேர்ந்து ஒழுகுவோர் மதிக்கப்படார். சிற்றினம் சேரலாகாது என்பது கருத்து. (கூ)

110. சிப்பி முளரிசுரம் ஆறு திரைவீழ்நீர்
ஒட்பத் தரளமஃ தொப்பழிவுண் ணீருவராம்
அப்படியே மாந்த ரறிவு மினத்தியல்பால்
பற்பல மாறு படும்.

**பொழிப்புரை:** சிப்பி தாமரையிலை காடு ஆறு கடல் இவற்றில் விழும் மழைநீர் முறையே ஒளி பொருந்திய முத்து முத்து போன்ற உருவம் அழிவு உண்ணும் நீர் உவர் நீர் என்னும் வேறுபாடுகளை அடையும்; அவ்வாறே மக்கள் அறிவும் சார்ந்து ஒழுகும் இனத்தினியன்பால் பற்பல மாறுபாடுகளை அடையும்.

**விளக்கவுரை:** மழைநீர் சிப்பியில் விழுந்தால் முத்து ஆகும், தாமரையிலையில் விழுந்தால் முத்துப் போன்ற வடிவத்தையடையும். காட்டில் விழுந்தால் அழிந்து போகும், ஆற்றில் விழுந்தால் உண்ணும் நீராகும், கடலில் விழுந்தால் உவர் நீராகும். அதுபோல் மக்களறிவும் சேர்ந்தொழுகும் இனத்தினியல்பால் பற்பல மாறுபாடுகளை அடையும். தம் அறிவு மாட்சிமைப்பட விரும்புவோர் அறிவான்மிக்க நல்லோரைச் சார்ந்து ஒழுக வேண்டுமென்பது கருத்து. (கo)

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

# 12. கல்வி

111. சின்னாட் பழகினுந் தேர்ச்சி இளமைக்கண்
பன்னாட் பழகினும் மூப்பிற் பயனின்றாம்
இன்னாவாத் தோன்றினும்பின் இன்பம் மிகவுறூஉம்
முன்னாடிக் கற்க முயன்று.

*பொழிப்புரை:* இளமைப் பருவத்தில் சிலநாள் பயின்றாலும் நன்கு தேர்ச்சி அடையலாகும்; முதுமைப் பருவத்தில் பலநாள் பயின்றாலும் சிறிதும் தேர்ச்சி பெற இயலாது; கற்பது முதலில் துன்பமாகத் தோன்றினாலும் பின்னர் மிக்க இன்பம் வந்து சேரும்; ஆதலால், இளமைப் பருவத்தில் முயன்று கற்றுக்கொள்க.

விளக்கவுரை: சின்னாள் — சில நாள். பன்னாள் பல நாள். மூப்பு —முதுமைப்பருவம். பயன் இன்று தேர்ச்சி பெற இயலாது. இன்னா —துன்பம். முன்னாடி—இளமைப்பருவம். 'இளமையிற்கல்' தொடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கும் மடங்கொன்றறிவற் கறும் கல்வி'. 'கேடில் விழுச்செல்வங் கல்வி' என்பனவற்றையுங் காண்க. (க)

112. கல்லாத மாக்கள் கசடறார் செய்கருமம்
வல்லாரே யானும் வளம்பெற்றா ரானுமென்
நல்லார் மதியார் நரகிற் புகுவார்காண்
சொல்லாய்ந்து கற்க தொடர்ந்து.

*பொழிப்புரை:* கல்வியறிவில்லாத மாந்தர் குற்றமற்றவராகார்; செய்யுந் தொழிலில் வல்லவர்களே ஆயினும் பல்வகை வளமும் பெற்றவர்களே ஆயினும் யாது பயன்? அவர்களைக் கசடறக் கற்ற மேலோர் மதியார்; நரகினையும் அடைந்து துன்புறுவர்; ஆதலால், இலக்கண நூலின் நெறியே கற்கத் தகுந்த நூல்களை ஆராய்ந்து இடைவிடாதுகற்று வருக

விளக்கவுரை: மாக்கள்—ஐயறிவினர், நன்மை தீமைகளைப்பகுத் துணரும் அறிவில்லாதவர். கசடு அறுரர்—மனம் வாக்குக் காயங்களால் செய்யும் குற்றங்களின் நீங்கார். நல்லார்—கற்பவை கசடறக் கற்றுக் கற்றவாறொழுகும் பெற்றியர். செய்யத்தகாதன என்று விலக்கியவற்றையும் கல்லாதார் விரும்பிச் செய்வராதலின் நரகிற் புகுவார் என்றார், 'சொல்'-என்பது ஆகுபெயராய் இலக்கண நூலை உணர்த்திற்று. கல்லாதார் மறுமையிலும் துன்புறுவரென்பது இதனுல் கூறப்பட்டது. (உ)

113. பாற்கடல்பெற் ருலும் பயனே வயிற்றளவே
நூற்கட லெல்லாம் சுரரு நுவலரிதால்
யாக்கை யிருக்குந் துணையு மியலளவால்
போக்கறுநூல் கற்க புரிந்து.

*பொழிப்புரை:* பாற்கடலையே உணவாகப் பெற்றாலும் அதனால் எய்தும் பயன் வயிற்றினளவினதேயாகும்; கடல் போன்று பரந்து கிடக்கும் நூல்களையெல்லாம் கற்று முடிக்க நீண்ட வாழ்நாளையுடைய விண்ணவராலும் இயலாது; ஆதலால், கற்கத் தகுந்த குற்றமற்ற நூல்களை உயிர் உடலோடு கூடியிருக்குமளவும் (இறக்குமளவும்) இயன்ற அளவு விரும்பிக் கற்று வருக.

விளக்கவுரை: 'பெற்றாலும்'—என்பது பெறுதற்கரிது என்பது தோன்ற நின்றது. 'சுரரும்'-உயர்வு சிறப்பும்மை. போக்கு அறுநூல்—மனமாசைப் போக்கும் நூல் (குற்றமற்ற நூல்) கல்லாது போகிய நாள் உளவாகாது கற்க வேண்டுமென்பது கருத்து. (ங)

114. இன்பநூல் கற்றலின் ஏற்றம் பொருணூலே
பின்பவற்றின் ஏற்றம் அறநூலிப் பெற்றியினுன்
முன்புறக் கற்க முறைப்படக் கல்லாக்கால்
என்பயன் ஒன்றுனும் இல்.

*பொழிப்புரை:* இன்பநூல் கற்பதைக் காட்டிலும் உயர்ந்தது பொருள் நூல் கற்பது; பின்னர் அவ்விரண்டினும் உயர்ந்தது அறநூலைக் கற்பது; இம்முறையே இளமைப் பருவத்தில் மூன்று நூலையும் கற்றுக்கொள்க. முறைப்படக் கல்லாதார் எய்தும் பயன் யாது? ஒன்றும் இல்லை.

விளக்கவுரை: இன்பநூல்—ஒரு காலத்தொரு பொருளால் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம வின்பத்தினைக் கூறுவது,

பொருள் நூல்—இல்லறத்தின் வழிப்படுவனவாய் இம்மை மறுமை என்னும் இரண்டினையும் பயப்பதாகிய பொருளினியல்பைக் கூறுவது. அறநூல்—செய்யத் தகுந்தனவும் செய்யத்தகாதனவுமாகிய விதி விலக்குக்களைக் கூறுவது.

இன்ப நூல்—இம்மையின்பம் ஒன்றையே உணர்த்தவல்லது. பொருள் நூல்—இம்மை மறுமை என்னும் என்னும் இரண்டினைப் பயப்பது. அறநூல்—இம்மை மறுமை வீடுபேறு என்னும் மூன்றினைத் தரவல்லது. இன்பநூல் பொருள்நூல் அறநூல் என்பன முறையே ஒன்றின் ஒன்று ஏற்றமுறுதற்குக் காரணம் இவையே ஆகும். (௪)

115. கலைநிறைந்த ஒண்மதிகண் டின்புறலிற் காசில்
புலவன் சகோரப்புட் போல்வன் சிறையொன்
றிலன்றிசை போய இசைபல கொண்டே
உலவா உலகும் உறும்.

*பொழிப்புரை:* *கலைநிறைந்த ஒண்மதி கண்டு இன்புறுதலால் குற்றமற்ற புலவன் சகோரமென்னும் பறவையை ஒப்பன்; சிறகு ஒன்றும் இல்லாதவனாகி இருந்தும் நான்கு திசைகளிலும் பரவிய பல புகழைக் கொண்டு அழிவில்லாத வீட்டினையும் அடைவான்.*

விளக்கவுரை: கலை நிறைந்த ஒண்மதி என்பது சிலேடை; சகோரப்புள் கலைகள் நிறைந்த ஒளி பொருந்திய பூரணச்சந்திரனைக் கண்டு இன்புறுமெனவும் புலவன் கல்வியால் நிறைந்த கூர்மையான அறிவினைக் கண்டு இன்புறுவன் எனவும் பொருள் கொள்க. இப்பாவினுள் வேற்றுமை அணி அமைந்திருத்தலைக் காண்க. (௫)

116. பன்றிக் குருளை படாம்போர்த்து நிற்பினும்
வென்றிக் களிறென விள்ளுப யாவரே
நன்றுகல் லார்கவி பாடினும் நாவலோர்
என்றும் மதித்த லிலர்.

*பொழிப்புரை:* *பன்றிக்குட்டி முகபடாத்தை அணிந்து கொண்டு நிற்பினும் அதனை வெற்றி தரும் ஆண் யானையென்று யாரும் கூறுர். கற்கத் தகுந்த இலக்கண இலக்கியங்களைக் கசடறக் கல்லாத புல்லர் கவி பாடினாலும் முறைப்படி கற்றுத் தெளிந்த புலவர் அவரை ஒருபோதும் புலவராக ஏற்றுக் கொள்ளார்.*

விளக்கவுரை: குருளை—குட்டி, படாம்—முகபடாம். களிறு—ஆண்யானை. நன்று கல்லார்—குற்றமறக்கல்லாதவர், கல்லாதார் கவி பாடினும் புலவராகார் என்பது இதனால் கூறப்பட்டது. இது எடுத்துக்காட்டுவமையணி. (சு)

117. கல்லா ரெனினுமெண் கற்றவரைச் சார்ந்தொழுக
வல்லார்க்கு நல்லறிவு வந்துறூஉங் கற்பனவூழ்
இல்லென்று வாளா விராஅ துறுதியுரை
நல்லார்பாற் கேட்க நயந்து.

*பொழிப்புரை:* கல்லாதவரெனினும் இழிவில்லை; கற்றவர்களைச் சேர்ந்து பழகவல்லார்க்கு மெய்யறிவு தானாகவே வந்து விடும்; கற்றற்குரிய நல்வினை இல்லையென்று வாளா இராமல் நல்லோர்பாற் சென்று அவர் கூறும் உறுதிமொழிகளை நாள்தோறும் தவறாது விருப்பத்தோடு கேட்டுக் கொண்டு வருக.

விளக்கவுரை: 'வந்துறூஉம்'-இன்னிசையளபெடை. 'இராஅது'-செய்யுளிசையளபெடை. கேள்வி வாயிலாகவும் மெய்யுணர் வெய்த லாகுமென்பது கருத்து. (எ)

118. கற்றலிற் கேட்டல் சிறப்புடைத்தால் கற்பானுக்
குற்ற விளமைபொரு ளூக்கநோ யின்மைகுலம்
மற்றின்ன வேண்டுமால் வேண்டாநூல் வல்லார்வாய்
முற்றுறக்கேட் பார்க்கு முயன்று.

*பொழிப்புரை:* கற்றலைக் காட்டிலும் கேட்டலே சிறப்புடையது; கற்பவனுக்கு இளமை பொருள் ஊக்கம் நோயின்மை உயர்குடிப் பிறப்பு முதலிய நற்பண்புகள் வேண்டும்; நூல்வல்லார்பால் சென்று உறுதிமொழிகளனைத்தும் விரும்பிக் கேட்பார்க்கு அவை வேண்டா.

விளக்கவுரை: கற்பவனுக்கு உள்ள இடையூறுகள் கேட்பவனுக்கு இல்லை என்பது இதனால் கூறப்பட்டது. (அ)

119. உலவாத நுண்பொருள் பேதைக் குரைத்தல்
மலர்மாலை வானரத்தின் கைக்கொடுத்தல் மானும்
நலனுடையார் தற்சாரின் நல்காதா னன்றே
பிலமிக்க பொன்காத்த பேய்.

***பொழிப்புரை:*** என்ஞான்றும் அழியாத பயனை நல்கும் உறுதிமொழிகளைப் பேதைக்குரைப்பது மலரால் தொடுத்த மாலையைக் குரங்கின் கையில் கொடுப்பதை ஒக்கும்; கூர்மையான அறிவும் நல்லொழுக்கமும் உடையோர் தன்பால் வந்து கேட்பினும் கற்பிக்காதவன் பூமிக்குள்ளிருக்கும் மிக்க பொன்னைக் காத்துக் கொண்டிருக்கும் பேய்க்கு நிகராவான்.

விளக்கவுரை: 'உலவாத'—எதிர்மறைப் பெயரெச்சம். நுண்பொருள்—நுண்ணிதாய் ஆராய்ந்தறிதற்குரிய பொருள். பேதை—அறிவில்லாதவன். வானரம்—குரங்கு. மானும்—ஒக்கும். 'நல்காதான்'-எதிர்மறை வினையாலணையும் பெயர். பிலம்—பாதலம். நூற்பொருளைக் கற்பிக்கத் தகாதாரும் தக்காரும் இவரென்பது கூறப்பட்டது. (௯)

120. வெற்றியுறு கோளரிப்பல் வீழ்ந்தசில கொண்டுநாய்
கொற்றப் புலிமுன் குரைப்பொக்கும் குற்றமறக்
கற்றவர்முன் முன்னூ லுரைசில கற்றார்பால்
மற்றவர் கேட்டுரைக்கும் மாண்பு.

***பொழிப்புரை:*** கற்றவர்பால் பழமையான நூற்பொருள் சிலவற்றைக் கல்லாதவர் கேட்டு அவற்றைக் கசடறக் கற்ற புலவர் முன் உரைக்குமியல்பு வெற்றி பொருந்திய சிங்கத்தின் பற்களுள் விழுந்தன சிலவற்றைக் கொண்டு நாயானது வெற்றியையுடைய புலி முன் குரைத்தலை ஒக்கும்.

விளக்கவுரை: கொற்றம்—வெற்றி. முன்நூல்—பழமையான நூல். குற்றம்—ஐயம் திரிபுகள். மற்றவர்—கல்லாதவர். குற்றமறக் கற்றவர்முன் கல்லாதார் சொல்லும் சொல் சிறப்புறுது என்பது இதனால் கூறப்பட்டது.

'கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று'

என நாலடியார் கூறுதலுங் காண்க. (க0)

## 13. முயற்சி

121. ஊழான் வருமென் றுழார்க்கு விளைவுண்டே
தாழா முயற்சி யுறுதிபெறத் தாம்வேண்டின்
வீழாமை வேண்டும் வெறிதே கணமேயும்
வாளா கழித்தல் மறு.

*பொழிப்புரை:* நல்வினையால் தானே விளையும் என்று எண்ணி நிலத்தை உழுது பயிர் செய்யாதார்க்கு விளைவு உண்டாகுமா? உண்டாகாது. தாம் நன்மை அடைய வேண்டின் கணப்பொழுதேனும் வீணாகக் கழியாதவாறு இடைவிடாது நன்கு உழைக்க வேண்டும்; வாழ்நாளை வீணாகக் கழிப்பது குற்றமாகும்.

விளக்கவுரை: ஊழ்—இருவினைப்பயனும் செய்தவனையே சென்று அடைதற்கேதுவாகிய நியதி. தாழா முயற்சி—இடைவிடாதமுயற்சி, குன்றாதமுயற்சி. உறுதி—நன்மை. வெறிது—பயனின்மை. மறு—குற்றம். முயற்சியுடையார்க்கே ஊழும் உதவுமென்பது கருத்து. (க)

122. உடையுணவு நீக்கும் உளமறிவு தேய்க்கும்
நடைகளிப்பு மாய்க்கும் நலிவெல்லாந் தோய்க்கும்
திடன்மதிப்புக் கல்விகுணம் சீர்சாய்க்கும் சார்ந்தே
மடிதான் முயற்றில் வழி.

*பொழிப்புரை:* முயற்சியில்லாதாரிடத்துச் சோம்பலானது சேர்ந்து உடையையும் உணவையும் நீக்கும். எண்ணுந் திறனையும் அறிவையும் குறைக்கும், ஒழுக்கத்தையும் உவகையையும் கொல்லும், துன்பங்கள் எல்லாவற்றையும் பொருந்துமாறு செய்யும், வலிமை, மதிப்பு, கல்வி, குணம், புகழ் முதலியவற்றை அழிக்கும்.

விளக்கவுரை: உளம்—எண்ணம். நடை—ஒழுக்கம். களிப்பு—உவகை. நலிவு—துன்பம். திடன்—வலிமை. சீர்—புகழ். மடி—சோம்பல். முயற்று—முயற்சி. முயற்சியில்லா வழி நேரும் தீமைகளைத் தொகுத்துக் கூறியவாறு.

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு. —குறள் (உ)

123. தலைவற்குங் காலந் தனக்குந்தான் கொண்ட
நிலைமைக்கும் வேலைக்கும் நீங்காவா ளாக்கும்
நலமென்னோ சேவையின் நன்றுபிற வெல்லாம்
உலையாது காக்கும் உழவு.

*பொழிப்புரை: தலைவனுக்கும் காலத்தினுக்கும் தான் மேற்கொண்டுள்ள நிலைமைக்கும் தொழிலுக்கும் நீங்காத அடிமையாகச் செய்யும் ஊழியத்தால் விளையும் நன்மை யாது? அதனிற் பிற தொழில்கள் நன்று; எவ்வாற்றானும் அழிவுறாது காக்கவல்லது உழவேயாகும்.*

விளக்கவுரை: தலைவன், காலம், தான் கொண்ட நிலைமை, வேலை ஆகிய நான்கும் அடிமையைக் கட்டுப்படுத்துகின்றன; ஆதலால் அவன் தன் விருப்பப்படி நடக்க இயலாதவனாகின்றான்; அதனால் அது நன்மை பயப்பதில்லை. பிறதொழில்கள் செய்வாரையும் உணவளித்துக் காக்க வல்லது உழவேயாதலின் அது எல்லாவற்றினும் சிறந்ததாயிற்று.

'சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனால்
உழந்து முழவே தலை'. —குறள், (ங)

124. உழுதல் உழுவித்தல் ஒவ்வா விடத்துந்
தொழுதூண் அறிஞர்க்குத் துன்பேகற் பித்தல்
பழுதில் வணிகம் முதலபிற பற்றி
வழுவாது நிற்றல் வழக்கு.

*பொழிப்புரை: உழுதலும் உழுவித்தலும் செய்ய இயலாதவிடத்தும் பிறரை வணங்கி அவர் ஏவின தொழிலைச் செய்து வாழ்வது அறிஞர்க்குத் துன்பமேயாகும்; கற்பித்தல் குற்றமற்ற வாணிகம் முதலாகவுள்ள பிறதொழில்களை மேற்கொண்டு தவறாது செய்து வருதல் முறைமையாகும்.*

விளக்கவுரை: பழுதில் வணிகம்—கொள்வதூஉ மிகைகொளாது. கொடுப்பதூஉங் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்திதல். வழுவாது

நிற்றல்—இடையறுது செய்து வருதல். அடிமை வாழ்வை அறிஞர்கள் மேற்கொள்ளல் ஆகாது என்பது கருத்து. (ச)

125. தின்னக் கரும்பு தெறுவார் கரமறுப்புண்
டின்னற் படலு முளவினையி னின்புற
எண்ணித் தொடங்கி னிடருமுள அஞ்சாமே
திண்ணத்தாற் பின்னுஞ் செயல்.

*பொழிப்புரை:* தின்னும் பொருட்டுக் கரும்பினை அழிப்பவர் கை அறுப்புண்டு துன்பப்படுதலுமுண்டு; ஒரு தொழிலால் நன்மை அடைய விரும்பி அதனைத் தொடங்கிச் செய்யும் பொழுது துன்பம் வருதலுமுண்டு; துன்பம் வரினும் அஞ்சாமல் ஊக்கத்தோடு பின்னும் செய்து வருக

விளக்கவுரை: தெறுவார்—அழிப்பவர். இன்னல்—துன்பம். திண்ணம்—மன உறுதி, ஊக்கம். 'செயல்'-அல் ஈற்று வியங்கோள்.

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்'. --குறள்.

இடையில் எய்துந் துன்பத்தைக் கண்டு அஞ்சாது மேலும் முயன்று தொழில் செய்வார் பயன் எய்துவார் என்பது கருத்து. (ரு)

126. கடைபோகா வாயினலங் காட்டா வெனினும்
இடரில செய்க இருநீர்க் கிணறு
திடனுறத் தாண்டிற் சிறிதிழுக்கு மேனும்
இடரெய்தல் தப்பாமை யின்.

*பொழிப்புரை:* ஆழமான நீரையுடைய பெரிய கிணற்றை மிக்க ஊக்கத்தோடு தாண்டுங்கால சிறிது தவறினும் துன்பம் அடைதல் தவறாது; ஆதலால் நிறைவேறாத செயலாக இருப்பினும் பயன் தராத செயலாக இருப்பினும் துன்பம் இல்லாத செயலையே செய்க.

விளககவுரை: கடை போதல்--நிறைவேற்றுதல். நலம் காட்டா—பயன் தராதன. விளையாட்டிற்காக வேனும் துன்பந்தருஞ் செயல்களைச் செய்யலாகாது என்பது இதனுல் கூறப்பட்டது. (சு)

127. தானுற்று நின்ற வினைதான் தகவருவாய்
ஈனு தெனினும் இனியபிற வெய்தினவும்
ஆனுமை வேண்டும் அவாவான் விடினுய்நீர்
மீனுடி வாயூன் விடல்.

***பொழிப்புரை:*** **தான் செய்து வரும் தொழில் முயற்சிக்குத் தக்க ஊதியத்தை நல்காதிருப்பினும் மிக்க ஊதியத்தை நல்கும் தொழில் வேறு கிட்டுமளவும் அதனின் நீங்காதிருத்தல் வேண்டும்; மிக்க ஊதியந் தரும் தொழிலை அடைந்து விடலாம் என்னும் வேட்கையால் செய்து வரும் தொழிலை விடின் அது நாயானது நீரில் உலாவும் மீனை அடைய விரும்பித் தன் வாயிலிருந்த இறைச்சியை விட்டு விடுதலை ஒக்கும்.**

விளக்கவுரை: ஆற்றுநின்ற—செய்துவருகின்ற. வினை —தொழில் தக—முயற்சிக்குத் தக்க. ஆறுமை—நீங்காமை. நாடி—விரும்பி. ஊன்—இறைச்சி. நல்ல தொழில் கிடைக்குமளவும் செய்து வருந் தொழிலை விடலாகாது என்பது இதனால் கூறப்பட்டது.

காற்றொழி லென்று கருதற்க கையினால்
மேற்றொழிலு மாங்கே மிகும். —நாலடியார். (எ)

**128. வைகறை யாமம் துயிலெழுந்து நீர்மாந்திப்**
**பைய நடந்தொழிப்ப பற்றற நீக்கித்தான்**
**செய்வினையூ ணொக்குந் திறன்தெரிந்து கொள்ளுமேல்**
**உய்யும் நெடுநாள் உடல்.**

***பொழிப்புரை:*** **அதிகாலையில் படுக்கையினின் றெழுந்து நீர் பருகிப் பின்னர் மெல்லச் சிறிது தூரம் நடந்து சென்று கழிவுப் பொருள்களை முற்றிலும் கழித்து விட்டுச் செய்தற் குரிய செயலையும் உணவையும் உடலுக்கு ஒக்கும் வகையினை யறிந்து கொள்ளின் உடல் பல்லாண்டுகள் நிலைத்திருக்கும்.**

விளக்கவுரை: வைகறையாமம்—இரவின் கடையாமம். பைய—மெல்ல. ஒழிப்ப—மலம் மூத்திரம் முதலியன. பற்றற நீக்குதல்—முற்றிலும் நீக்குதல். ஒக்கும் திறன் தெரிதல்—தொழிலை உடல் வலிமைக்கு ஏற்பவும் உணவை அறும் அளவினுக்கு ஏற்பவும் அறிதல். நெடுநாள் வாழ விரும்புவோன் மேற்கொள்ள வேண்டியன இவை என்பது இதனால் கூறப்பட்டது.

'அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு'. —குறள். (அ)

**129. நெடுந்துயில்பே ருண்டி ஒழித்துண்ட நீங்கப்**
**படுந்துணையும் உண்ணார் மருந்தெனினும் பண்பான்**
**விடுந்தகைய மூன்றினொன்று மிக்குவிடார் காலை**
**ஒடுங்கார்நோய் ஒன்றும் உறார்.**

*பொழிப்புரை:* நீண்ட நேரம் துயிலுதல், அளவிறந்து உண்ணுதல் ஆகிய இரண்டினையும் நீக்கி, உண்ட உணவு அறுமளவும் மருந்தே எனினும் உண்ணுர்; இயல்பாகக் கழித்தற்குரிய மூன்றனுள் ஒன்றை மிகுதியாகக் கழியார்; இளமைப் பருவத்தில் மடியின் கண்ணே வீழார் இவ்வியல்புகளை உடையார் நோய் சிறிதும் அடையார்.

விளக்கவுரை: பண்பான் விடுந்தகைய மூன்று—மலம் மூத்திரம் சுக்கிலம் என்பன. ஒன்று—சுக்கிலம். மிக்குவிடாமை—அடிக்கடி கழிக்காதிருத்தல், புணர்ச்சியில் அடிக்கடி ஈடுபடாதிருத்தல்; 'மாதத்திரண்டுமுறை மாதரைப் புல்குவது' எனப் பிறர் கூறுதலும் காண்க. (கூ)

130. உண்ண லுறங்க லொழிபு முடலொப்பப்
பண்ணிநூ லாய்வு மளவிற் பயில்கமன்
அண்ணல் களிறனையா ரானு மவைபிறழின்
எண்ணில் பிணியுற் றிடும்.

*பொழிப்புரை:* உண்ணலும் உறங்குதலும் பிற செயல்களும் உடல் நிலைக்கு ஏற்பச் செய்து நூலாராய்ச்சியையும் அளவாகச் செய்து வருக; பெருமை மிக்க ஆண் யானை போன்று ஆற்றல் மிக்கவராயினும் உண்ணல் முதலியன மாறுபடின் அளவிறந்த நோய்கள் அவரை அடையும்.

விளக்கவுரை: ஒழிபு—உண்ணலும் உறங்குதலும் ஒழிந்த பிற செயல்கள். உண்ணல் முதலியன மிகுதலும் குறைதலுமின்றி உடல் நிலைக்கு ஏற்றனவாகவுமிருத்தல் வேண்டுமென்பது கருத்து.

'மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'. —குறள்
மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. —குறள் (௧0)

# 14. பொருளாட்சி

131. பொருளான் அறமுறும் இன்பம் புணரும்
தெருள்வருநூல் கற்பினது முட்டின்றிச் செல்லும்
அரிதுமுறும் ஒன்னார்த் தெறலும் அரசும்
உரனும் அதனல் உறும்.

*பொழிப்புரை:* பொருளால் அறம் எய்தும், இன்பமும் எய்தும், அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களைக் கற்கத் தொடங்கின் அது இடையூறு இன்றி இனிது முடியும், அடைதற்கரிய பிற பொருளும் தானே வந்தெய்தும், பகைவரை வெல்லுதலும் அரசும் வலிமையும் அப்பொருளானே எய்தும்.

விளக்கவுரை: தெருள்வரும் நூல்—அறிவை வளர்க்கும் நூல். முட்டு இன்றிச் செல்லுதல்—தடைபடுதலின்றி நிறைவேறுதல். தெறல்—அழித்தல். உரன்—வலிமை. எல்லாம் செயவல்ல பொருளை அறநெறியில் நின்று ஈட்டல் வேண்டுமென்பது கருத்து.

'அறனினு மின்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்'. —குறள்.
'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணதெய்த இருதலையு மெய்தும்.'

எனப் பிறருங் கூறுதல் காண்க. (க)

132. எல்லா முடையா னியக்கனை நட் டானைமுவர்ப்
பல்லக்கா ளாக்கினன் பல்கலைதேர் வேந்தனும்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு.

*பொழிப்புரை:* மண் நீர் தீ வளி வான் முதலிய எல்லாப் பொருளுக்கும் தலைவனாகிய சிவபெருமான் மிக்க செல்வத்தினையுடைய குபேரனை நண்பனாகச் செய்துகொண்டான்; பல கலைகளுந் தேர்ந்த இந்திரனும் தமக்கென ஒரு பொருளுமில்

*லாத முனிவரெழுவரையும் தான் ஊர்ந்து செல்லும் பல்லக்கினைச் சுமக்கும்படிச் செய்தான்; இச்செயல்களால் எல்லா நன்மையும் உடையரராயினும் பொருளில்லாரை யாவரும் இகழ்வர், எல்லாத் தீமையும் உடையராயினும் பொருளுடையாரை யாவரும் உயர்த்துவர் என்பது நன்கு விளங்கும்.*

விளக்கவுரை: எல்லாம் உடையான் — சிவபெருமான். இயக்கன்—குபேரன், எழுவர்; அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன் என்னும் முனிவர் எழுவர். அருவருப்பான உடலும பொன்னிறமுள்ள ஒற்றைக்கண்ணும் உடையவனுக இருந்தாலும் பொருளுடைமையால் குபேரன் சிவபெருமானுல் நட்பினனுகக் கொள்ளும் பேற்றினையடைந்தான்; குணமென்னுங் குன்றேறிநின்ற மேலோராக இருந்தும் பொருள் இன்மையால் முனிவர் எழுவருக்கும் தன் சிவிகையைத் தாங்கிச் செல்லும் தொழிலை இந்திரன் வழங்கினுன்; இச்செயல்களால் செல்வரை யாவரும் சிறப்பிப்ப ரென்பதும் இல்லாரை யாவரும் இகழ்வர் என்பதும் நன்கு விளங்கும். சிறப்பினை நல்கும் காரணங்கள் பலவற்றுள்ளும் பொருளுடைமையே மிகச் சிறந்ததென்பது இதனுல் கூறப்பட்டது. இறுதி இரண்டடிகளும் திருக்குறள் என்பது உணரத்தகுந்தது.

எதிர் நிரல்நிறையணி. (உ)

133. மெல்லிலை காயோ டுறுமெனினும் வெண்சுண்ணம்
இல்லாயிற் றோன்றுது செம்மை யிறப்பவே
கல்வி குணனே டுறினுங் கவினுதே
செல்வமில் லாயிற் சிறந்து.

***பொழிப்புரை***: *வெற்றிலையானது பாக்குடன் சேர்ந்தாலும் சுண்ணும்பு இல்லை எனின் சிவப்பு நிறம் தோன்றுது; (அதுபோல்) கல்வியானது நற்குணங்களோடு மிகப் பொருந்தியிருந்தாலும் பொருள் இல்லையாயின் சிறந்து விளங்காது.*

விளக்கவுரை: மெல்லிலை—வெற்றிலை. காய்—பாக்கு. சுண்ணம்—சுண்ணும்பு. குணன்—நற்குணம். கவினுது—விளங்காது. 'இறப்ப' என்பதை 'உறினும்' என்பதனெடுகூட்டுக. இப்பாடலில் எடுத்துக் காட்டுவமையணி அமைந்திருத்தல் காண்க. கசடறக் கற்றுக் கற்றவா றெழுகும் பெற்றியரேனும் செல்வம் இன்றேல் சிறப்பிக்கப் பெருர் என்பது கருத்து. (கூ)

134. இடம்பொரு ளேவ லெழுச்சிக் கயலார்
உடனிணை யாதற் குடற்றற் குவத்தற்
கடர்பல் தீநெறிக் காய்வின்று பொன்னைக்
கடன்கோடல் துன்பக் களன்.

*பொழிப்புரை:* இடம் பொருள் ஏவல்களின் வளர்ச்சிக்கும் அயலாருடன் ஒப்பாதற்கும் போர் புரிதற்கும் இன்ப நுகர்ச்சிக்கும் தொக்க பல தீ நெறிகட்கும் ஆராயாமல் பிறர் பால் பொருளைக் கடனாக வாங்கிச் செலவு செய்தல் துன்பத்துக் கிருப்பிடமாகும்.

விளக்கவுரை: இடம் பொருள் ஏவல் எழுச்சி—மனை, விளை நிலம் முதலியவற்றை விரிவாக்குதல் பொருளைப் பெருக்குதல் ஏவலாட்களை வைத்துக் கொள்ளுதல் முதலியன. பலதீநெறி—கள்ளுண்ணல் சூதாடல் வரைவில் மகளிரைச் சேர்தல் முதலியன. கோடல்—கொள்ளுதல்; முதனிலை திரிந்த தொழிற் பெயர். கடன் படுவோர் துன்புறுதல் ஒருதலை என்பது இதனால் கூறப்பட்டது. (சு)

135. இன்றி யமையாக் கருமம் இடர்ப்படில்
குன்று மளவு குறித்துப்பல் காநோக்கி
என்று தரலொல்லும் யாதனி னென்றுய்ந்து
சென்றுகடன் கோடல் செயல்.

*பொழிப்புரை:* செய்யாதவழித் தாம் வாழ்தற் கியலாத செயல் குறித்தும், துன்பம் வந்தவிடத்து அது நீங்குமளவு குறித்தும் வாங்கும் கடனை எப்பொழுது எதனால் தீர்க்க முடியும் என்பதனைப் பலமுறை எண்ணி நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்னர் ஒருவன்பாற் சென்று கடன் கொள்க.

விளக்கவுரை: இன்றியமையாக் கருமம்—உயிர் வாழ்தற்கின்றியமையாத செயல். குன்றும் அளவு—குறையும் அளவு. நோக்குதல்—எண்ணுதல். ஒல்லும்—இயலும். கோடல்—கொள்ளுதல். செயல்—செய்க. வாங்கும் கடனைத் திருப்பித்தர வகையில்லாத விடத்துக் கடன் கொள்ளலாகாது என்பது கருத்து.

136. கடங்கொண்டு பின்னைக் கொடாது கழிப்பின்
இடங்கொண்டு நிற்கும் இகழ்ச்சி அதாஅன்று
மடங்கொள் விலங்கா உழைப்பர்பின் வந்தே
தொடங்கற்க இத்தீத் தொழில்.

*பொழிப்புரை:* ஒருவரிடம் கடனாகப் பொருளைப் பெற்றுக்கொண்டு பின்னர் அதனைத் திருப்பிக் கொடாதுபோனால் அதனால் வரும் பழியானது ஊர் முழுதும் பரவி நிலைத்து நிற்கும்; அதுவேயன்றி மறுபிறப்பில் அறிவில்லாத விலங்காகப் பிறந்து அவருக்கு உழைத்து வரவும் வேண்டும். ஆதலால் இத்தீய செயலைச் செய்யாதொழிக.

விளக்கவுரை: கடங்கொள்ளல்—குறித்த காலத்திற்குள் திருப்பிக் கொடுத்து விடுவதாக வாக்குறுதி செய்துவிட்டுத் தமக்கு வேண்டிய பொருளை ஒருவர்பால் கடனாகப் பெற்றுக்கொள்ளுதல். கொடாது கழித்தல்—கொடுக்க முடிந்தவிடத்தும் கொடாமல் காலங்கடத்தி ஏமாற்றுதல். மடம்—அறியாமை. பின்வருதல்—மறுபிறப்பினையடைதல். 'தொடங்கற்க'-எதிர்மறை வியங்கோள். (சு)

137. தீர்வழி தேற்ற மிலையேற் சிறிதானும்
யார்வயி னுங்கடன் கோட லறிவன்றால்
தேர்வழி யீவார்பாற் சென்றிரப்பு நன்றுகரும்
பார்வழித் துன்பப் படார்.

*பொழிப்புரை:* வாங்கும் கடனைத் தீர்க்க வகையில்லாத பொழுது யார் மாட்டும் சிறிதளவு கூடக் கடன் வாங்குதல் அறிவுடைமையாகாது; ஆராயுமிடத்துக் கரவாமல் உவந்து ஈவாரிடம் சென்று இரந்து பெறுதல், நன்றாமென்பது புலனும் கரும்பைத் தின்னுங்கால் யாரும் துன்புறார்.

விளக்கவுரை:வாங்கும் கடனைத் தீர்ப்பதற்கு வகை யாதேனும் உளதா என்று நன்கு ஆராய்ந்து உளதாயின் கேட்டதும் மறுக்காது கொடுப்பவர்பால் கடன் கோடல்நன்று; மறுப்பவர்பால் எஞ்ஞான்றும் கேளாதிருத்தலும் நன்றேயாகும். தீர்க்க வகையில்லாத விடத்துக் கடன் வாங்குவதைக்காட்டிலும் கரவாது வந்தீவார்பால் இரந்துபெறுதல் நன்று என்றார், பின் துன்பம் பயவாமையின். 'யார் வயினும்' என்பது உற்றுழி யுதவும் நண்பரிடத்தும் எனப் பொருள்படும்.

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோர் ஏஎர் உடைத்து." —குறள்

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு." —குறள் (எ)

**138.** மறம்புகுத்தா வாற்றல் பொருளீட்டி மற்றும்
இறந்து படாமைப் புரக்கவிவை செய்தும்
அறம்பொரு ளினபப் பொருட்டளியா னாயின்
பிறந்தும் பயனெய்தாப் பேய்.

*பொழிப்புரை:* பாவமும் பழியும் உண்டாகும் நெறியில் உள்ளத்தைச் செலுத்தாது, நன்னெறியில் சென்று பொருளை யீட்டி அதனை அழிந்து போகாத வழியில் நன்கு புரந்து வருக. ஈட்டல், புரத்தல் என்னும் செயல்களை நன்றாகச் செய்து வரினும் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு வழங்காமலிருப்பானாயின் அவன் ஆண் மகனாகப் பிறந்திருந்தும் அப்பிறப்பினாலெய்தும் பயனை எய்தாத பேயே ஆவன்.

விளக்கவுரை: நன்னெறியில் பொருளை ஈட்டவேண்டும். ஈட்டியதைத் தீயவர்கள் கவர்ந்து கொள்ளாதவாறு காத்து வருதலும் வேண்டும். காத்துவரும் பொருளை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு உதவுதலும் வேண்டும். அங்ஙனம் செய்யாதவன் மக்கட் பிறப்பின் பயனை இழந்தவனே ஆவான். 'பிறந்தும்' என்பதிலுள்ள உம்மை மக்கட் பிறப்பின் அருமையை உணர்த்தி நின்றது. (அ)

**139.** மடைத்தலை யேரி வருவாயின் மிக்க
கொடுத்தலைச் செய்யிற் கொடாதுபின் வற்றும்
அடுத்தள வாராய்ந் தளித்துண்ண லன்றே
வடித்தநூ றேர்ந்தார் வழக்கு.

*பொழிப்புரை:* ஏரியின் மதகை அடுத்துள்ள வயலிலிருந்து வரும் வருவாயினும் மிக்க பொருளை இரவலர்க்கும் பிறர்க்கும் வழங்கி வந்தால் பின்னர் தன்பொருட்டுச் செலவு செய்தற்கும் பொருள் இல்லாது ஒழியும்; தனக்குள்ள பொருளினளவை ஆராய்ந்தறிந்து அதற்கு ஏற்ப அறத்தின் பொருட்டு வழங்கித் தானும் உண்டு வருதலே குற்றமற்ற நூல்களையுணர்ந்த மேலோர் கண்ட நெறியாகும்.

விளக்கவுரை: மடை—மதகு. கொடுத்தலைச் செய்யின்—செலவு செய்து வந்தால். வற்றும்—இல்லாதொழியும். அளித்து—ஈந்து. வடித்த நூல்—குற்றமற்ற நூல். வழக்கு—நெறி.

'ஆற்றின் அளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.'
'உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.'

என்னும் குறட்பாக்களை நோக்குக. (கூ)

140. பெருந்துயர மாற்றிப்பொன் னீட்டினும் பின்னை
அருந்தவர்ப் பேணா னறஞ்செய்யா னாயின்
மருந்தரிதாற் பெற்றும் வயிற்றுட்பெய் யாது
பரிந்தளற்றுட் பெய்த பதர்.

*பொழிப்புரை:* ஒருவன் தனக்கு நேருந் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பெருமுயற்சி செய்து பொருளை ஈட்டினாலும் பின்னரதனைக் கொண்டு அருந்தவரைப் பேணாமலும் அறத்தினைச் செய்யாமலுமிருப்பானாயின் அவன் கிடைத்தற்கரிய மருந்தினைப் பெற்றும் அதனை உண்ணாமல் சேற்றினுட் பெய்து விட்டு நோயால் வருந்தும் அறிவிலியை ஒப்பான்.

**விளக்கவுரை:** அறிவாகிய உள்ளீடின்மையின் பதர் என்றார். 'செல்வத்துப் பயனே ஈதல்.' 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல தூதிய மில்லை யுயிர்க்கு.' என வரும் அறவுரைகளைக் காண்க. (கO)

## 15. செருக்கின்மை

141. தன்னினு மிக்க தவம்புகழ் கல்விமதி
பொன்னடலி னின்பங் குணனெறி பொற்புளார்
தன்முற் பலருளராத் தான்கண்டு மெண்மன்றே
கொன்னே செருக்குக் கொளல்.

*பொழிப்புரை:* தன்னைக் காட்டிலும் மிக்க தவமும் புகழும் கல்வியும் அறிவும் பொருளும் வலிமையும் இன்பமும் குணமும் ஒழுக்கமும் உள்ளவர் தனக்கு முன்னே பலர் உளராதலைத் தானே நேரிற் கண்டும் வீணே செருக்கடைதல் மிக்க அறிவீனமேயாகும்.

விளக்கவுரை: மதி—இயற்கையறிவு. பொன்—பொருள், அடல்—வலிமை. குணன்—நற்குணம். நெறி—ஒழுக்கம். பொற்பு—அழகு. தவம் புகழ் கல்வி மதி பொன் அடல் இன்பம் குணன் நெறி பொற்பு—உம்மைத் தொகை. 'மண், ஓ' அசைநிலைகள். (க)

142. யாது செயலும் அறிவும் தமக்குளவென்
றோத வுளவே உறக்கத் தொழிவதென்
ஆதியிறை கூத்தாட்டும் உண்ணின் றறிவார்க்குத்
தீதன்றோ யானென் செருக்கு.

*பொழிப்புரை:* எச்செயலையும் செய்வதற்கு உரிய ஆற்றலும், எதனையும் ஆராய்ந்து அறியவல்ல பேரறிவும் தமக்கு உள்ளன என்று எவரும் கூறுவதற்கு இல்லை; உள்ளனவாயின் அவை உறக்கத்தில் நீங்குவதற்குக் காரணம் யாது? முதற் கடவுள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நின்று கூத்தாட்டுவதனால் அவை உளவாகின்றன. ஆதலால், யான் செய்தேன் யான் அறிந்தேன் எனச் செருக்கு உறுதல் அறிஞர்க்குத் தீது ஆகும்.

விளக்கவுரை: யாது செயலும்—எச்செயலும்; 'செயல்-ஆகு' பெயர். 'உளவே' 'ஏ'-எதிர்மறை. 'என்'-எவன் என்னும் விளுப் பெயர் என் என்று ஆயது. அன்றே—ஆகும்; இரண்டு எதிர்மறை சேர்ந்து ஓர் உடன்பாட்டை உணர்த்திற்று.

யாவும் இறைவன் செயலாதலால் செருக்கு அடைதல் கூடாது என்பது கருத்து. (௨)

143. அறிவுடையம் யாமென் றகம்செருக்கல் ஒன்றும்
அறியாத பான்மை அறிவுயிர்க் குண்டோ
பிறவுஞான் றின்மையிற் பின்னரிவ் வெல்லாம்
இறையான் அறிவ தெனல்.

*பொழிப்புரை*: *யாம் அறிவுடையோம் என யாரும் உள்ளத்தில் செருக்கு அடையற்க; பிறக்கும் பொழுது ஒன்றும் அறியாத இயல்பினையுடைய உயிர்க்குத் தானுகவே அறியும் அறிவுண்டோ? இல்லாமையால், பின்னர் அறிவு ஆற்றல் முதலியன எல்லாம் இறைவன் அருளால் வருவன என்க.*

விளக்கவுரை: அகம்—உள்ளம். 'செருக்கல்'-அல் ஈற்று எதிர்மறை வியங்கோள். பான்மை—இயல்பு. பிறவு ஞான்று—பிறக்கும் பொழுது. இவ்—இவைகள். இறை—கடவுள். எனல்—என்று கூறுக; உடன்பாட்டு வியங்கோள். (௩)

144. அண்டம் கிணற்றின் அளவென் றதிற்றேரை
கண்டுரை ஒக்குமால் கல்லார் நெறிப்படப்
பண்டைநூல் எல்லாம் பயன்தெரிந்தாம் என்னவே
கொண்டு களியுறூஉங் கூற்று.

*பொழிப்புரை*: *ஐயம் திரிபுகள் இன்றி முறைப்படக் கல்லாது சில கற்றவர்கள் பழமையான நூல்கள் எல்லாவற்றையும் மாசறக் கற்றுத் தேர்ந்துள்ளோம் என்று செருக்குற்றுக் கூறும் சொல், கிணற்றில் உள்ள தவளை ஆகாயத்தைப் பார்த்து இது இக்கிணற்றின் அளவினதாகவே யுள்ளது என்று கூறுவதை ஒக்கும்.*

விளக்கவுரை: அண்டம்—ஆகாயம். தேரை—தவளை. நெறிப் படக்கல்லார்—கற்கவேண்டிய முறைப்படிக் கல்லாமல் அங்கொன் றும் இங்கொன்றுமாகச் சில கற்றவர்கள். பண்டை நூல் பழமை யான நூல் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு

முதலியன). பயன்—பொருள், களி—செருக்கு. 'ஒச்குமால்'-என்பதில் ஆல்-அசைநிலை. 'களியுறாஉம்'-இன்னிசையளபெடை.

முறைப்படி கற்றவர் செருக்கடையார் என்பது கருத்து. (ச)

145. கன்று பிறந்தவுடன் தாய்முலைப்பால் காட்டாமே
சென்றிருந்தி யாங்குச் சிலர்தாமே காணினுமென்
தொன்றுபயில் வானவை தோன்றலிற் காட்டாமே
ஒன்றுமிலை தாமே யுணர்வு.

*பொழிப்புரை:* கன்றானது பிறந்தவுடனே ஒருவர் காட்டாமல் தாய் முலைப்பாலைத் தானே சென்று அருந்துவது போன்று பிறர் அறிவிக்காமல் சிலர் தாமே அறியினும் என்? முற்பிறப்பில் பயின்றவை தாமே தோன்றுவதனால் உணர்த்தாது உணரும் தன்மை உயிருக்குச் சிறிதும் இல்லை.

விளக்கவுரை: அருந்தியாங்கு—பருகுவது போன்று; 'ஆங்கு'-உவம உருபு. 'காட்டாமே'-எதிர்மறை வினையெச்சம். 'தொன்று'என்பது முற்பிறப்பை உணர்த்தியது. பயில்வு—கற்றல்; ஈண்டுத் தொழிலாகுபெயராய்க் கற்ற நூல்களை உணர்த்தி நின்றது. 'ஒன்றும்'-என்பதில் உள்ள உம்மை இழிவு சிறப்பு. (ரு)

146. துக்கவெயில் காய்பிறவிக் கான்கடப்பத் தூயநெறிப்
புக்கார்க் குறிற்பொன் புயல்நிழல்போ லாம்பயன்
அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

*பொழிப்புரை:* துன்பமாகிய வெய்யில் சுடுகின்ற கொடிய பிறவியாகிய காட்டினைக் கடக்க விரும்பித் தூய அறநெறியை அடைந்தவர்க்குச் செல்வம் கிடைக்குமாயின் வேனிற் பருவத்து நண்பகலில் வெய்யபாலையில் இயங்குவார்க்குப் புயல் நிழல் வாய்ப்பின் எவ்வாறு உதவியாக இருக்குமோ அவ்வாறு உறுதியாக இருக்கும். நில்லாத இயல்பினையுடையது செல்வம்; அதனைப் பெற்றால் பெற்ற அப்பொழுதே செய்தற்குரிய அறங்களைச் செய்க,

விளக்கவுரை: துக்கம்—துன்பம். கான்—காடு. தூயநெறி—அறநெறி (துறவறம்), புயல்—மேகம். இயல்பிற்று—இயல்பினையுடையது. செயல்—செய்க. 'துக்கவெயில்', 'பிறவிக்கான்'—உருவகங்கள்.

'காய் பிறவி'-வினைத்தொகை. அற்கா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'செயல்'-அல் ஈற்று வியங்கோள். ஈற்றடி இரண்டும் திருக்குறள். (சு)

147. இளையம் வலியம் எனக்களித்து நல்ல
உளவாகத் தீயசெயல் ஓஒ கொடிதே
பளகில் பருவநீர்ப் பாய்ச்சின்றிப் பைங்கூழ்
விளைவறத்தீ மூட்டி விடல்.

***பொழிப்புரை:*** *யாம் இதுபோழ்து இளமைப் பருவமும் வலிமையும் உடையவராயுள்ளோம் எனச் செருக்கடைந்து நல்ல செயல்கள் பல இருக்கவும் அவற்றுள் எதனையும் செய்யாமல் தீய செயல்களைச் செய்வது மிகக் கொடியது ஆகும்; அங்ஙனம் செய்வது கதிர் ஈனும் பருவத்தில் நீர் பாய்ச்சாமல் பசிய பயிருக்கு விளைவு கெடுமாறு நெருப்பு வைத்து அழிப்பதை ஒக்கும்.*

விளக்கவுரை: களித்து—செருக்கு அடைந்து. நல்ல—அறமும் புகழும் பயக்கும் செயல்கள். தீய—பாவமும் பழியும் பயக்கும் செயல்கள். 'ஓஒ கொடிதே' என்பதில் ஓஒ-மிகுதி குறித்து நின்றது. பளகு—குற்றம். பளகில் பருவம்—நல்ல பருவம், கதிர் ஈனும் பருவம். பாய்ச்சு—பாய்ச்சுதல், முதனிலைத் தொழிற் பெயர். ஒக்கும் என்பது அவாய் நிலையான் வந்தது. (எ)

148. இறையென முத்தொழிலும் செய்யினும் என்கொல்
குறையும் அறிவு செருக்கொன்று கொள்ளின்
உறுமே இடும்பை உயலில்லை என்றும்
அறிவுடையான் கொள்வான் அலன்.

***பொழிப்புரை:*** *எல்லாம் வல்ல இறைவன் போன்று படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழிலையும் செய்ய வல்லவனாயினும் அதனால் விளையும் பயன் யாது? செருக்கு என்னும் ஒரு தீய பண்பைக் கொள்வானாயின் அறிவு குன்றும்; துன்பம் வந்து சேரும்; உய்யும் வகையும் இல்லை, அதனால், அறிவுடையான் ஒரு போதும் செருக்கு அடையான்.*

விளக்கவுரை: இறை—கடவுள். 'முத்தொழிலும்'-உம்மை முற்றும்மை, 'செய்யினும்' என்பது செய்தற்கருமை என்பதை விளக்கி நின்றது. உயல்—உயிர் வாழ்தல்.

செருக்குள்ளவன் ஒரு போதும் நன்மை அடையான் என்பது கருத்து. (அ)

149. தெருளாதார்ப் பற்றும் செருக்கெனும் பேயால்
குருடாம் புறக்கண்ணும் நல்லசெவிக் கொள்ளா
மருளும் மதிதிறப்பில் வாய்திறக்கு மேனும்
பருவந்து சோர்வு படும்.

*பொழிப்புரை:* தெளிந்த அறிவினைப் பெறுதவர்களைப் பற்றும் செருக்கு என்னும் பேயால் புறக்கண் (ஊனக்கண்) ணும் குருடாய்; பெரியோர் கூறும் உறுதிமொழிகள் செவியில் நுழையா; அறிவு மயங்கும்; திறவாத வாய் ஒருகால் திறக்குமேனும் சொற் சோர்வுபட்டுத் துன்பத்தை உண்டாக்கும்.

விளக்கவுரை: தெருள்—தெளிந்த அறிவு. செருக்கு—ஆணவம் புறக்கண்—ஊனக் கண். நல்ல—உறுதி மொழிகள். மருளும்—மயங்கும். பருவரல்—துன்பம்.

'செருக்கு எனும் பேய்'-உருவகம். 'ஆம்'-ஆகும் என்பதன் இடைக்குறை. 'புறக்கண்ணும்'-என்பதில் உள்ள உம்மை ஞானக் கண்ணேயன்றி என்பதைத் தழுவி நின்றது.

செருக்கினால் விளையும் தீமைகள் இதனால் தொகுத்து உணர்த்தப் பட்டுள்ளன. (கூ)

150. தேவருந்தீப் போற்றுப நிற்பிற் றிரியளவின்
யாவரும் நீர்பெய் தவிப்ப அகம்பற்றின்
மேவாரும் போற்றுப தாமடங்கின் மிக்குழி
யாவரும் செய்ப இடர்.

*பொழிப்புரை:* தீயானது திரியளவில் நிற்குமாயின் அதனைத் தேவர்களும் போற்றுவார்கள்; இல்லத்தைப் பற்றி எரியின் எல்லோரும் அதனை நீர்பெய்து அவிப்பார்கள்; ஒருவன் மனம் மொழி மெய்களால் தீயன செய்யா தடங்கியிருப்பின் அவனைப் பகைவரும் போற்றுவர்; செருக்குற்றுத் தீயன செய்யப் புகின் எல்லோரும் அவனுக்குத் தீங்கு செய்து அடக்குவர்.

விளக்கவுரை: போற்றுப—வாழ்த்தி வணங்குவர். தீ திரியளவில் நிற்றல்—தீயானது விளக்கின்கண் உள்ள திரியைப் பற்றி எரியும்

பொழுது, அகம்—மனை (இல்லம்), மேவார்—பகைவர். மிக்குழி—செருக்குற்று மிகையாயின் செய்யுங்கால்.

'தேவரும்'—உம்மை உயர்வு சிறப்பு. 'யாவரும்'—முற்றும்மை. 'போற்றுப', 'அவிப்ப', 'செய்ப'—பலர்பால் எதிகால வினைமுற்று அடக்கத்தால் எய்தும் நன்மையும், அடங்காமையால் எய்தும் இடரும் இதனால் கூறப்பட்டன. (க0)

# 16. நட்பு

**151. நடையாற் றலையாயார் நட்பைமற வாமே**
**கடையாயார் மாட்டுண்மை காட்டாமே மற்றை**
**இடையாயார் மாட்டுமிகை காணின் இடித்தல்**
**உடையாரே தீமை யுறார்.**

*பொழிப்புரை*: ஒழுக்கத்தால் சிறந்து விளங்கும் உயர்ந்தோர் நட்பை மறவாமலிருத்தலும், மனம்போன போக்கில் ஒழுகும் கீழ்மக்களிடத்து உண்மையை உரைக்காமலிருத்தலும், இடையாயாரிடத்துத் தவறு காணின் இடித்துரைத்துத் திருத்துதலும் உடையாரே தீமை உறாதவராவர்.

விளக்கவுரை: நடை—ஒழுக்கம். தலையாயார்—உயர்ந்தோர். மறவாமே—மறவாதொழுகுதல். கடையாயார்—கீழ்மக்கள். உண்மை காட்டாமே தனக்கு உள்ள பொருளைக் காட்டாதிருத்தல். இடையாயார்—நடுத்தரமானவர். மிகை—தவறு. இடித்தல்—நல்லன கூறித் திருத்துதல்.

'மறவாமே' 'காட்டாமே'— என்பன எதிர்மறைத் தொழிற்பெயர்கள். 'காணின்'-செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

உலகினர் மாட்டொழுகுதற்குரிய முறைமை இதனுல் கூறப்பட்டது. (க)

**152. நாடி நலந்தீங் கவற்றுள் நலமிக்கார்க்**
**கூடுக கூடிற்பிற் குற்றங் கருதற்க**
**நாடுங்கால் தோன்று நவைபலபிற் காணினுடன்**
**வீடாது மெல்ல விடல்.**

*பொழிப்புரை*: ஒருவர்பால் உள்ள நற்குணங்களையும் தீயகுணங்களையும் ஆராய்ந்து அவற்றுள் நற்குணம் மிக்குடையராயின் அவரோடு நட்புக்கொள்க; கொண்டால் பின் குற்றத்தினை நினையற்க. ஆராயும்போது காணப்படாத குற்றங்

*கள் பல பின்னர் காணப்படின் உடனே அவரின் நீங்காது சிறிது சிறிதாக விட்டு நீங்குக.*

விளக்கவுரை: நாடி—ஆராய்ந்து, நலம்—நற்குணம், தீங்கு—தீயகுணம், கூடுக—நட்புக்கொள்க கருதற்க-எண்ணற்க, தோன்ரு—காணப்படாத, நவை—குற்றம், 'நலந்தீங்கு'-உம்மைத் தொகை. 'கருதற்க'-எதிர்மறை வியங்கோள். 'தோன்ரு'-ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். விடாது-எதிர்மறை வினையெச்சம்.

'குணநாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'. —குறள். (உ)

153 சான்றவர் கேண்மை தலைப்படி னஞ்ஞான்றே
ஆன்ற பெருமை யளிக்கும் உயிர்த்துணையாம்
வான்றரினுந் தீயார்தம் கேண்மை மதியற்க
தோன்றும்பின் எண்ணில் துயர்.

*பொழிப்புரை: நற்குணங்கள் பலவற்ருனும் நிறைந்த பெரியோர் நட்பு ஒருவர்க்கு வாய்க்குமாயின் அது அவர்க்கு அப்பொழுதே மிக்க பெருமையைக் கொடுக்கும்; அவர் உயிர்க்கும் உற்ற துணையாகும். விண்ணுலகத்தையே கொடுப்பினும் தீயோர் நட்பினைக் கொள்ளற்க; கொள்ளின் அது பின்னர் அளவு கடந்த துன்பங்களை உண்டாக்கும்.*

**விளக்கவுரை:** சான்றவர்—நல்லகுணங்கள் பலவற்ருனும் நிறைந்தவர் தலைப்படின்—வாய்க்குமாயின், அஞ்ஞான்றே—அப்பொழுதே ஆன்ற பெருமை—மிக்க பெருமை. வான்—விண்ணுலகம். மதியற்க—கொள்ளற்க. துயர்—துன்பம்

நட்புக் கொள்ளத் தக்கவரும் தகாதவரும் இன்னுரென்பதை இது உணர்த்திற்று. (ங)

154. பெரியார்தம் கேண்மை பெருந்துணையா மீண்டும்
அரிதே மறுமையினு மஃதொப்ப தொன்றில்
பெரியார் தொடர்கை விடலிற் பெருங்கே
டெரிபோற் பகையானு மில்.

*பொழிப்புரை: பெரியோர் நட்பு இம்மையிலும் மறுமையிலும் பெருந் துணையாய் நன்மை செய்யும்; ஆதலால் அது போன்று அடைதற்குரிய அரிய பொருள் உலகில் வேறொன்று இல்லை. மறுமையிலும் அஃதொப்பது ஒன்றில்லை. பெரியோர்*

நட்பை விடுவது போன்று பெருங் கேட்டினை விளைவிக்க எரி போன்று ஆற்றல் வாய்ந்த பகைவரானும் ஆகாது.

விளக்கவுரை: ஈண்டு—இம்மை (இப்பிறப்பு) மறுமை—மறு பிறப்பு. அரிது—அரியது. தொடர்கை—நட்பு. கேடு—அழிவு எரிபோற் பகை—எதிர்ந்த பொருளை அழிக்க வல்ல ஆற்றல் வாய்ந்த நெருப்பினை ஒக்கும் பகைவர், 'பகை'-ஆகுபெயர்.

பெரியோர் நட்பால் விளையும் நன்மையும் அதனைவிடுவதால் விளையும் கேடும் இதனுல் கூறப்பட்டுள்ளன. (௪)

**155.** ஆத்திகர் எம்மத மாயினுந் தோமிலை
நாத்திகர் நட்பைக் கனவினும் நாடற்க
தீத்தொழி லின்றவர் தெள்ளிய ராயினும்
ஈத்து விடுமால் இடர்.

*பொழிப்புரை:* தெய்வ நம்பிக்கை உடையோர் வேறு மதத்தவராயினும் அவர்பால் நட்புக் கொள்வது தவறு ஆகாது; தெய்வம் இல்லை என்பவர்பால் நட்புக் கொள்ளக் கனவினுங் கருதற்க; தீயன செய்யாமல் தெளிந்த மனத் தினராயிருப்பினும் அவர்பால் கொண்டுள்ள நட்பு தீமை யைப் பயந்தே விடும்.

விளக்கவுரை: தோம்—குற்றம். 'இன்றி' என்பது இன்று எனத் திரிந்து நின்றது. 'தெள்ளிய ராயினும்' என்பது தெள்ளியராதல் அரிது என்பதனை விளக்கி நின்றது.

நாத்திகர் நட்பு எவ்வாற்ருனும் தீயநெறியிற் செலுத்திவிடும் என்பது கருத்து. (௫)

**156.** வெவ்வாய் நிரயத்து வீழ்த்துமாற் கீழோர்நண்
பெவ்வகை யானும் விடல்பகையு மெய்தற்க
செவ்வியோர் தம்பகை தீரும்பிற் றீராவே
எவ்வகையுந் தீயார் இகல்.

*பொழிப்புரை:* கீழோர் நட்பு கொடிய நரகில் வீழ்த்தி விடும்; ஆதலால், அதனை எப்படியாவது விட்டுவிடுக; அவர் பால் பகையும் கொள்ளற்க. நல்லோர் பகை நீங்கிவிடும்; தீயோர் பகை எவ்வாற்ருனும் தீரா.

விளக்கவுரை: வெவ்வாய்—கொடுமை வாய்ந்த, நிரயம்—நரகம் விடல்—விடுக. செவ்வியோர்—நல்லோர். இகல்—பகை.

கீழோர்பால் நட்பு மாத்திரமன்று பகையும் கொள்ளலாகாதென் பது இதனுல் கூறப்பட்டது. (சு)

157. வறியரைச் செல்வர் மதித்துறவு கொள்ளல்
உறினு மறிவுடையார் பேதையரை ஒன்ருர்
அறிதுமவர் சேர்க்கையெனின் அம்புயநீர் சேரப்
பெறுமுறவு போலாம் பிற.

*பொழிப்புரை:* நல்கூர்நதாரை மதித்துச் செல்வமுள்ள வர் நட்பினராகக் கொண்டாலும் கொள்ளலாம்; அறிவில்லா தவர்களை அறிவுடையார் ஒருபோதும் நட்பினராகக் கொள் ளார்; அறிஞரும் பேதையரும் சேர்ந்திருத்தலை அறிவோ மெனின் அது தாமரையிலையில் நீர் சேர்ந்திருப்பது போலாகும்.

விளக்கவுரை மதித்து—மேன்மையுடையவராக எண்ணி. உறவு—நட்பு. பேதையர்—தமக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஊதியம் பயப்பனவற்றைக் கை விடுபவர். ஒன்ருர்—நட்பினராகக் கொள்ளார். அம்புயம்—தாமரை. 'பிற'-அசைநிலை, 'அம்புயம்'-ஆகுபெயர்.

'உறவு கொள்ளல் உறினும்' என்பது உறவு கொள்ளலின் அருமையை விளக்கி நின்றது. அவர் சேர்க்கை அம்புயம் நீர் சேரப் பெறும் உறவு போலாம் என்பது அறிஞரும் பேதையரும் சேர்ந்து வாழினும் பேதையர்பால் அறிஞர் நட்புக்கொள்ளார் என்பதை விளக்கி நின்றது. (எ)

158. அணுத்துணை வித்தும் அறன்மண்ணைச் சாரிற்
பணைத்த பெருமரமாம் அம்மரம்தீப் பற்றின்
அணுத்துணையும் நில்லா தறிஞர் கயவர்
கணத்துறவு மத்தகைய காண்.

*பொழிப்புரை:* அணு அளவினதாகிய நுண்ணிய விதை யும் நீருடன் சேர்ந்துள்ள (ஈரமான) மண்ணை அடையின் முளைத்து வளர்ந்து கிளைகளுடன் கூடிய பெரிய மரமாகும்; அம்மரம் தீப்பற்றின் அணுவளவும் நில்லாது அழிந்து போகும். அவைபோன்று அறிஞர் குழுவின் நட்பினையுற்ருேர் மிக மிகத் தாழ்ந்தோராயினும் உலகோர் நன்கு மதிக்கத்

*தகுந்த பெருமையை அடைவர்; கீழ்மக்கள் குழுவினை யடைந்தோர் மிக மிக உயர்ந்தோராயினும் யாவரானும் இகழப்படும் நிலையினை அடைந்து அழிவர்.*

விளக்கவுரை: துணை—அளவு. அறல்—நீர். பணைத்த—கிளை களையுடைய, கயவர்—கீழ்மக்கள். கணம்—கூட்டம். 'காண்'-அசை நிலை.

நல்லோர் நட்பு, தீயோர் நட்பு ஆகிய இவற்றால் விளையும் பயன் இதனால் கூறப்பட்டது. (அ)

**159.** **நீரிற் பதர்மிதப்ப நெல்லமிழ லொக்குமால்**
**கூரியன் மந்தன் அரியநூல் கொள்ளுமுறை**
**மாரி யெனத்தரினு மந்தனைவிட் டென்கொடுத்தும்**
**கூரியனைச் சார்ந்து கொளல்.**

***பொழிப்புரை:*** *கூர்மையான அறிவு இல்லாதவனும், கூர் மையான அறிவு உடையவனும் அரிய (உறுதிப் பொருள்களை உணர்த்தும்) நூல்களைக் கற்கும் முறை பதர் நீரில் மிதப்ப தையும், நெல் நீரில் அமிழ்வதையும் ஒக்கும்; மாரிபோல் வழங்கினாலும் மந்தனை விட்டு நீங்கி உள்ளனவெல்லாம் கொடுத்தாவது கூர்மையான அறிவுள்ளவனைச் சார்ந்து நட்புக் கொள்க.*

விளக்கவுரை: பதர்—உள்ளீடு (அரிசி) இல்லாதது. கூரியன்—நுண்ணிதாய் மாட்சிமைப்பட்ட அறிவுடையவன். மந்தன்—ஆராய்ந்து அறியவல்ல அறிவு இல்லாதவன். மாரி—மழை. என் கொடுத்தும்—உள்ளன எல்லாம் கொடுத்தாவது. கொளல்—கொள்க.

கூரியன் தன் உள்ளத்தில் பதியுமாறு உறுதிபயக்கும் சீரிய நூல் களையேகற்பன்; மந்தன் மேலெழுந்த வாரியாகப் பயன்தராத நூல் களையே பயில்வன் என்பதாம். (கூ)

**160.** **வளிமுதலா மூன்றொத்து வாழினுடல் வாழும்**
**விளியு மவையிகலின் வேந்துமுயிர் வாழும்**
**உளமொத் துழையருற நான்குபதை யானும்**
**தெளியானேல் மாய்வே தெளிவு.**

***பொழிப்புரை:*** *வாதம் முதலாகவுள்ள மூன்றும் ஒத்து வாழின் உடல் வாழும். அம்மூன்றும் ஒன்றுக்கொன்று மாறு படின் உடல் அழியும். தன் கருத்தினுக்கிசைந்த அமைச்சர்*

*களிருப்பின் அரசனும் உயிர் வாழ்வான்; நான்கு உபதைகளானும் தேர்ந்து தெளியாது அமைச்சர்களை அமைத்தால் அரசனுக்கு அழிவு வருவது உறுதி.*

**விளக்கவுரை:** வளிமுதலா மூன்று—வாதம், பித்தம், சிலேத்துமம் என்பன. விளியும்—அழியும். உழையர்—அமைச்சர். நான்கு உபதை—அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்பன.

அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு அவரான் இவ்வரசன் இவறன்மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

இன்பவுபதையாவது தொன்று தொட்டு உரிமையொடு பயின்றுளொரு தவமுது மகளைவிட்டு அவளால் உரிமையுள் இன்னுள் நின்னைக் கண்டு காதலுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள்; அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப்பெரும் பொருளும் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினர் என்று தான் காவல் செய்து ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

இந்நான்கினுந் திரிபிலன் ஆயவழி எதிர்காலத்தும் திரிபிலன் எனக் கருத்தளவையால் தெளிதல் வேண்டும்.

'அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்' —குறள். (கo)

# 17. பகை

161. ஆகா தனசெயினும் யார்மாட்டுந் தீதுபகை
சோகாப்பத் துன்னூர்ச் செறினும் சுகமிலையால்
ஏகா கவலையினி என்னுறுங்கொல் என்றஞ்சும்
போகா கரவுசினம் பொய்.

*பொழிப்புரை:* எப்பொழுதும் தீயன செய்து வருவார் மாட்டும் பகைமை கொள்ளுதல் தீது ஆகும்; துன்பம் அடையுமாறு பகைவரை ஒறுத்தலாலும் இன்பம் உண்டாகாது; பகைமை காரணமாக வரும் கவலைகள் நீங்கா; இனி என்ன தீங்கு வருமோ என்று அஞ்சவும் நேரும்; மறைந்து திரிதலும், வெகுளலும், பொய் புகலலும் அவரை விட்டுப்போகா.

விளக்கவுரை: ஆகாதன—தீமை பயக்கும் செயல்கள். சோகாப்ப—துன்பம் உற. செறுதல்—ஒறுத்தல். சுகம்—இன்பம்.

பகைமை கொள்ளுவதால் வரும் தீமைகளை விளக்கிக் கூறியுள்ளார். (க)

162. பகைத்தார்க்குங் கேடு பயப்பன சூழல்
தகைத்தன் றெனினுந்தற் சேர்ந்தாருந் தானும்
மிகைக்குட் படாது விடலெண்ணிச் செய்யின்
வகுத்தார் அறமாக வைத்து.

*பொழிப்புரை:* பகைவருக்கும் அழிவு பயக்கும் செயல்களை ஆராய்ந்து செய்வது தகாது எனினும் தன்னைச் சேர்ந்தவர்களும் தானும் அப்பகைவரால் செய்யப்படும் கேட்டினுக்கு உட்படாது உய்ய விரும்பிச் செய்யின் அது அறத்தின் பாற்படும் என ஆன்றோர் கூறியுள்ளார்கள்.

விளக்கவுரை: கேடுபயப்பன—அழிவினைச் செய்யும் செயல்கள். சூழல்—ஆராய்ந்து செய்தல், தகைத்து அன்று—தகாது (தகுதியுடைய செயல் ஆகாது) மிகை—கேடு.

தன்னைச் சேர்ந்தாரையும் தன்னையும் கொல்ல முயலும் பகைவனைக் கொல்வது தவறாகாது என்பது கருத்து. (உ)

163. மிக்கோர் நடுவரெனின் வெல்லற் குபாயமுன்மூன்
றெத்திறத்துந் தண்டம் இகக்கபகை கீழாயின்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

*பொழிப்புரை:* பகைவர் தம்மினும் மிக்க வலிமை உடையாரும் தம்மை ஒத்த வலிமை உடையாருமாயின் அவர்களை வெல்லுதற்குச் சாமம் பேதம் தானம் என்னும் மூன்று உபாயங்களே உரியன ஆகும்; எவ்வகையிலும் தண்டம் என்னும் உபாயத்தை மேற்கொள்ளாது நீக்கி விடுதல் வேண்டும்; பகைவர் தம்மினும் வலிமை குறைந்தவராயின் தக்க சமயம் வருமளவும் கொக்கே போன்று அடங்கியிருந்து சமயம் வாய்த்த பொழுது அதன் குத்தைப் போன்று விரைந்து போர் புரிந்து வெல்லுதல் வேண்டும்.

விளக்கவுரை: நடுவர்—தம்மை ஒத்தவர். முன்மூன்று உபாயம்—சாமம், பேதம், தானம் என்பன. தண்டம்—ஒறுத்தல், இகக்க—நீக்குக. கூம்பும் பருவம்—அடங்கியிருக்க வேண்டிய காலம். சீர்த்த இடம்—பகையை வெல்லுதற்கேற்ற காலமும் இடமும்.

பின்னிரண்டு அடிகளும் திருக்குறளிலிருந்து எடுத்துக் கொண்ட ஓர் குறட்பா ஆதல் காண்க. (ங)

164. உளத்தால் பகைத்தாரை ஓராது நட்டல்
வளத்தோ டுயிர்போக்கு மந்தோ வயவர்க்
களப்பில் புறப்பகை யாற்றுயரென் அஃதே
விளக்கின்கண் விட்டில் விழல்.

*பொழிப்புரை:* உள்ளத்தில் பகைமை பூண்டு புறத்தே பணிவுடைமை காட்டி ஒழுகும் வஞ்சகரை ஆராய்ந்தறியாது நட்பினராகக் கொள்ளுதல் செல்வத்தோடு அந்தோ உயிரையும் போக்கிவிடும். வெற்றியையுடைய வேந்தர்க்கு அளவு கடந்த புறப்பகையிருப்பினும் அதனால் ஒருபோதும் துன்பம் செய்ய இயலாது; உட்பகையோடு நட்புக்கொள்ளுதலோ விளக்கில் விட்டிற்பூச்சி விழுதலை ஒக்கும்.

**விளக்கவுரை:** ஓராது—ஆராய்ந்து அறியாது. நட்டல்—நட்புக் கொள்ளல். வளம்—செல்வம். 'அந்தோ'-இரக்கக் குறிப்பு. அளப்புஇல்—அளவுகடந்த. 'என்'-என்பது இன்மை குறித்து நின்றது. விழல்—விழுதல்.

இது உட்பகையால் வரும் கேட்டினை உணர்த்திற்று.

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துட் டெவ்வர்
எழுபது கோடி யுறும். —குறள்.

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. —குறள். (௪)

**165.** களிமயில் கோம்பியைக் கண்டஞ்சு மன்றே
எளியர் வலியரை எற்றலு முண்டே
விளியுங் கொடும்புலியாற் கற்றுவும் வென்றி
ஒளியில் கொடியார்க்கும் உண்டு.

***பொழிப்புரை:*** *நடனத்தால் கண்டாரை மகிழ்விக்கும் மயில் பச்சோந்தியைக் கண்டு அஞ்சும்; வலிமையற்றவர் வலிமை மிக்கவரைக் கொல்லுதலும் உண்டு; கொடிய புலியால் கன்றையுடைய பசு கொல்லப்படுவதும் உண்டு; பிறரால் சிறிதும் மதிக்கப்படாத கொடியவர்களுக்கும் வெற்றி கிட்டுவது உண்டு.*

விளக்கவுரை: களி—மகிழ்ச்சி. கோம்பி—பச்சோந்தி. எற்றல்—கொல்லுதல். விளியும்—இறக்கும். கற்று—கன்றையுடைய பசு. ஒளி—மதிப்பு.

பகையின் சிறுமை கண்டு இகழ்ந்து வாளா இருக்கலாகாதென்பது கருத்து. (௫)

**166.** கொல்லும் பயன்குறித்துக் கோடரி யெம்மரனும்
கொல்லாதா லஃதுறிற் காம்பெனக் கூடாரை
நல்ல குறித்தட னன்றெனினு நாடியவர்
புல்லியக்கால் காக்க புரிந்து.

***பொழிப்புரை:*** *பயன் கருதி எல்லா மரத்தினையும் வெட்டும் கோடரி தனக்குக் காம்பாக அமைந்துள்ள மரத்தினை ஒரு போதும் வெட்டாது; நன்மை கருதிப் பகைவரைக் கொல்லுதல் அறமே எனினும் அவர்கள் விரும்பி வந்து தம்பால் அடையின் அவர்களை அன்பொடு காத்து வருதல் வேண்டும்.*

விளக்கவுரை: எம்மரனும்—எல்லா மரத்தினையும். அஃது—அம்மரம். கூடார்—பகைவர். நன்று—அறம். நாடி—விரும்பி. அவர்—அப்பகைவர்.

பயன்குறித்து எம்மரனும் கொல்லும் கோடரி அஃது காம்பென உறிற் கொல்லாது என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

இதில் எடுத்துக்காட்டுவமை யணி அமைந்துள்ளது. (சு)

**167. கன்னியை நோன்பினைக் காப்பக் கருதியே**
**மன்னு மிராமனும் வீடுமனும் மாறுற்றார்**
**தந்நல முன்னிப் பிறர்போ லுறுபவோ**
**பன்னிற் பெரியார் பகை.**

***பொழிப்புரை:*** *அம்பை என்னும் கன்னியைக் காப்பதற்காகப் பரசுராமனும், தான் மேற்கொண்டுள்ள நோன்பினைக் காப்பதற்காக வீடுமனும் ஒருவரோடொருவர் பகைமை பூண்டு போர் புரிந்தனர். மிக்க புகழினையுடைய பெரியோர் பிறர்போல் தம் நலங்கருதி யாரையும் பகைத்துக் கொள்ள மாட்டார்கள்.*

விளக்கவுரை: கன்னி—காசிமன்னன் மகளாகிய அம்பை. வீடுமன் மேற்கொண்டுள்ள நோன்பு-'திருமணஞ் செய்து கொள்வதில்லை' என்பது. தம்பால் அடைக்கலமாக அடைந்த அம்பையைத் திருமணஞ் செய்து கொள்ளுமாறு பரசுராமர் வீடுமரிடம் வற்புறுத்திக் கூறினார். தாம் மேற்கொண்டுள்ள நோன்பினைக் கூறித் திருமணஞ் செய்து கொள்ள இயலாதென மறுத்தார். தம் வேண்டுகோளை மறுத்ததனால் பரசுராமர் வெகுண்டு போர் புரியத் தொடங்கினார். தம் நோன்பினைக் காத்துக் கொள்ளப் பரசுராமரோடு போர் புரிந்து வீடுமர் வெற்றியுற்றார். இருவரும் பகைமை கொள்ளக் காரணம் இவைகள்தாம்; தந்நலமன்று. இவ்வரலாற்றின் விரிவைப் பாரதத்தில் ஆதிபருவத்துள் காண்க.

168. தீதே பெயர்சொலினும் சீச்சீ யெரியளற்றுக்
கேது மூகடிக் கிருக்கைபிற தீவினைக்குத்
தூதுபே ராசை தொலையாத் துயர்ப்புணரி
பேதைக் குழாம்பேணுஞ் சூது.

***பொழிப்புரை:*** *அறிவில்லாதார் விரும்பி ஆடும் சூது தன் பெயரைக் கூறுவார்க்கும் தீமை பயக்கும்; சீச்சீ எரிவாய் நரகினுக்கும் ஏதுவாகும்; மூதேவிக்கு இருப்பிடமும்*

ஆகும்; பிற தீவினைகளை அழைக்கும் தூதும் ஆகும். பேராசை நீங்காத் துன்பக் கடலும் ஆகும்.

விளக்கவுரை: 'சீச்சீ'-இகழ்ச்சிக் குறிப்பு. அளறு—நரகம். முகடி—மூதேவி. இருக்கை—இருப்பிடம். தொலையா—நீங்காத. புணரி—கடல். குழாம்—கூட்டம். (அ)

169. பெருகுமவாத் தோல்வியினும் பின்னைத் தமக்கென்
றொருபொழுதும் நெஞ்சம் உருமையி னென்றும்
திருவுடையூண் கல்வியொளி எட்டனையும் சேரார்
பருவரலே சூதின் பயன்.

*பொழிப்புரை:* தோல்வியுற்ற காலத்தும் சூதினிடத்துப் பேராவல் உண்டாகும்; தமக்கு என்று நெஞ்சம் ஒரு பொழுதும் நில்லாமல் சூதினையே விரும்பி நிற்பதால் செல்வம் உடை ஊண் கல்வி ஞானம் முதலியவற்றுள் எதனையும் எள்ளளவு கூட என்றும் அடையார்; சூதினால் எய்தும் பயன் துன்பமே ஆகும்.

விளக்கவுரை: அவா—ஆசை. திரு—செல்வம். ஊண்—உணவு ஒளி—ஞானம். பருவரல்—துன்பம்.

இவ்விரண்டு பாவானும் சூதினால்வரும் தீமை கூறப்பட்டது. (கூ)

170. உணர்வொழியும் கண்முதல வுண்ணிற் பொருள்போம்
குணம்போம் கொலைகளவு காமநிலை கொள்ளும்
பணவரவின் தாயுமஞ்சும் நீங்கா பழியும்
உணல்மிகிற் சாதலும் உண்டு.

*பொழிப்புரை:* கள் முதலிய மது வகைகளைப் பருகின் உணர்வு கெடும் செல்வமும் நீங்கும்; நல்ல குணமும் போம்; கொலையும் களவும் காமமும் நிலைபெறும்; படத்தினையுடைய பாம்பைக் காண்பது போல் குடிகாரனைக் காணின் பெற்ற தாயும் அஞ்சுவாள்; பழியும் நீங்கா; பருகுவது மிகுமானால் இறந்து போதலுமுண்டு.

விளக்கவுரை: உணர்வு—அறிவு. பணவரவு—படத்தையுடைய பாம்பு, நாகம். மிகின்—மிகுமானால்.

இதனால் கட்குடியால் விளையும் தீமைகள் கூறப்பட்டுள்ளன; (க0)

# 18. மேலோரியல்பு

171. முத்திக் குபாயமுணர் மூதறிஞர் மந்திரமுஞ்
சித்திக்கு வேண்டுஞ் செயலும் பிறவுமெண்ணுர்
பத்திநெறி ஏனேரும் பற்றற் பொருட்டுலகோ
டொத்து நடப்ப வுவந்து.

*பொழிப்புரை:* முத்தி அடைவதற்குரிய நெறியை அறிந்து ஒழுகும் பேரறிஞர் மந்திரமும் சித்தியடைவதற்குரிய செயலும் பிற நலங்களும் விரும்பார்; பக்தி நெறியை மற்றையோரும் மேற்கொண்டு ஒழுகும் பொருட்டு விரும்பி உலகத்தோடு ஒத்து நடப்பர்,

விளக்கவுரை: முத்தி—வீடுபேறு. மூதறிஞர்—பேரறிஞர். சித்தி—அட்டமாசித்தி. அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. பிற—இந்திரபதவி முதலியன. எண்ணுர்—அடைய விரும்பார்.

பத்தி நெறியையும் பிறர் பொருட்டன்றித் தம் பயன் கருதி மேற்கொள்ளார் என்பது கருத்து. (க)

172 அடுத்தார்ப் புரப்ப அவரடித் தாழ்ந்தும்
வடித்தநூ லாய்ந்தார் மதியார்தம் மேன்மை
நடித்துநீத் தானென நண்ணிய பார்த்தன்
அடித்தாழ்ந்தான் கண்டீர் அரி.

*பொழிப்புரை:* குற்றமற்ற நூலை ஆராய்ந்தறிந்த மேலோர் தம் பெருமையை எண்ணுது தம்பால் அடுத்தவர் அடிகளில் விழுந்து வணங்கியும் அவரைக் காத்து வருவர்; துறவிபோல் வஞ்சக வேடம் பூண்டு தன்பால் வந்த அருச்சுனன் அடிகளில் கண்ணபிரான் விழுந்து வணங்கி அவன் விருப்பத்தை நிறைவேற்றினுன்.

விளக்கவுரை: தாழ்ந்தும்—வணங்கியும். வடித்த நூல்—குற்ற மற்ற நூல். மதியார்—எண்ணுர். நீத்தான் என—துறந்தவன் (துறவி) போல். நண்ணிய—அடைந்த. அரி—கண்ணபிரான்.

வடித்தநூல் ஆய்ந்தார் தம் மேன்மை மதியார் அடுத்தார் அடித்தாழ்ந்தும் அவர்ப் புரப்ப என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. 'கண்டீர்'-அசைநிலை.

பெரியோர் தம் பெருமையைச் சிறிதும் எண்ணுது எவ்வாற்ருனும் அடுத்தவர்க்கு உதவுவர் என்பது கருத்து. (உ)

173. நீதித் தலைநின்ற நீர்மையர் யார்மாட்டும்
தீதே பயப்பினும் சொல்லார் திறம்புரை
சாதேவன் தன்முன் தலைதுணிப்ப நன்னுளாய்ந்
தோதினன் றெவ்வி னுழை.

*பொழிப்புரை:* தம் சொல் தமக்கே தீங்கு பயப்பதாயி ருப்பினும் நன்னெறிக்கண் நின்ற பெரியோர் பகைஞரிடத் தும் பொய் சொல்லாது உண்மையையே உரைப்பர்; சகா தேவன் தன் தமையனுகிய தருமனின் தலையைத் துணிப்ப தற்கு நல்ல நாள் தெரிந்து கூறுமாறு பகைவனுகிய துரியோ தனன் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி ஆராய்ந்து போர் தொடங்குதற்கு உரிய நாளைத் தெரிந்து கூறினன்.

விளக்கவுரை: நீதி—நன்னெறி. நீர்மையர்—இயல்பினையுடைய பெரியோர். தீது—துன்பம். திறம்புரை—பொய். தன்முன்—தன் தமையன். துணிப்ப—துண்டிக்க; தெவ்—பகை. 'உழை'-ஏழனுருபு.

பெரியோர் தம் உயிர்க்கு இறுதியே வருவதாயிருப்பினும் பொய் சொல்லார் என்பது கருத்து. (௩)

174 தாய்தந்தை யாசான்சொல் தக்கார் மருஜரென்றும்
ஆயின் அருமறையின் மிக்க அவையன்ருே
தூய வியாத னிராமன் துணிந்துவிரல்
ஈயுமவன் சான்ரும் எனல்.

*பொழிப்புரை:* தாயின் சொல்லையும் தந்தையின் சொல் லையும் ஆசிரியரின் சொல்லையும் பெரியோர் என்றும் மறக்கா மல் ஏற்று நடப்பர்; ஆராயின், அவை அரிய மறை மொழியி னும் சிறந்தன ஆகும் என்பது புலனும். குற்றமற்ற வியாச முனிவரும், இராமபிரானும், துணிந்து விரலைத் துணித்துக் கொடுத்த ஏகலைவனும் முறையே சான்று ஆவர் என்க.

விளக்கவுரை: ஆசான்—ஆசிரியன். மறை—வேதம். மிக்க—சிறந்தன. சான்று—உதாரணம். எனல்—என்க.

தாய் தந்தை முதலானவர் கூறும் சொல்லைத் தமக்கு வரும் இடருக்கு அஞ்சித் தக்கோர் மறுக்கமாட்டார்கள் என்பது கருத்து. நிரல் நிறையணி. (ச)

175. என்சொலினுந் தாய்முதலோர் செய்த லியல்பெனினும்
புன்சொல் எனநிரயம் உய்ப்ப புரியாரே
கன்னனீன் ருர்சொற் கடந்தான் பலிகொன்ருன்
முன்னங் குரவன் மொழி.

*பொழிப்புரை*: தாய் முதலானவர்கள் கூறுஞ் சொல் எது ஆயினும் அதனைச் செய்வது முறையே எனினும் அச்சொல் நரகிடைச் செலுத்துவதாயிருப்பின் தீய சொல் எனக் கருதிப் பெரியோர் அதனை ஏற்றுக்கொள்ளார்; தாய் தந்தையர் சொல்லைக் கன்னன் ஏற்றுக் கொள்ளவில்லை; ஆசிரியன் சொல்லை மாபலி ஏற்றுக்கொள்ளவில்லை.

விளக்கவுரை: தாய் முதலோர் என்சொலினும் என மாற்றுக. புன்சொல்—அறத்திற்கு மாறுபட்ட சொல். நிரயம்—நரகம். புரியார்—செய்யார். கன்னன்—கர்ணன். குரவன்—ஆசிரியன், சுக்கிரன்.

அறத்தொடு மாறுபட்டதாயின் யார் சொல்லையும் ஏற்கலாகாது என்பது கருத்து. (ரு)

176. இறந்தா ரெழினு மிறும்பூ துருமை
திறம்பாமை தந்நிலை தீப்புக நேர்ந்தாலும்
மறந்தானு மொல்வ கரவாமை யின்னம்
சிறந்த அறிவோர் செயல்.

*பொழிப்புரை*: மேலும் மிக்க அறிவினையுடையோர் செயல் இறந்துபோனவர் உயிர்பெற்று எழுந்தாலும் வியப்பு உருமையும், தீப்புக நேர்ந்தாலும் தாம் மேற்கொண்டுள்ள அறநெறியிலிருந்து மாறுபடாமையும், ஈதற்கியைந்த பொருளை மறந்தும் மறைத்துவையாமையும் ஆகும்.

விளக்கவுரை: இறும்பூது—வியப்பு (ஆச்சரியம்). திறம்பாமை—மாறுபடாமை. ஒல்வ—ஈதற்கியைந்த பொருள். கரவாமை—மறைத்து வையாமை. இன்னம்—மேலும். (சூ)

177. அறனதிப் பாற்புல் லருங்கானத் தன்றி
நிறைகுள மாதியுள் வேலி நிலத்துட்
சிறுமுய லுண்ணுதால் சீரியரு மன்னர்
பிறர்தேட்டால் வாழ்வு பிழை.

*பொழிப்புரை:* *நதியினிடத்து நீரையும் அரிய காட்டினிடத்துப் புல்லையும் அருந்துதலன்றி நீர் நிறைந்த குளம் முதலியவற்றில் உள்ள நீரையும் வேலி சூழ்ந்த நிலத்தில் உள்ள பயிரையும் சிறு முயல் உண்ணுது. பெரியோரும் அவ்வியல்பினரேயாவர்; பிறர் ஈட்டிய செல்வத்தால் வாழ்வது பிழையே ஆகும்.*

விளக்கவுரை: அறல்—நீர். கானம்—காடு. சீரியர்—பெரியோர் தேட்டால்—ஈட்டிய செல்வத்தால், பிறர் தேட்டால் வாழ்வது பழிக்கும் துன்பத்துக்கும் ஏதுவாம் ஆதலின் பிழை என்றுர்.

தம் உழைப்பால் வருவதுகொண்டு வாழ்வதே புகழும் இன்பமும் பயக்கும் என்பது கருத்து. (எ)

178. அன்பா னினிதா வறத்துறையை யார்மாட்டும்
என்பா டுறினு மியம்புப நீதியால்
துன்பமுறு சொற்சொலினுஞ் சொல்லரே எஞ்ஞான்றும்
என்பயனு மில்லாத சொல்.

*பொழிப்புரை:* *மிகப் பெரிய துன்பங்கள் வந்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு அன்போடு இனிதாக அறநெறியை எல்லோர்க்கும் முறைப்படி பெரியோர்கள் கூறி வருவார்கள். தாம் துன்புறுதற்கு ஏதுவாகிய சொற்களைப் பிறர் கூறினும் தம் வாயால் எப்போதும் பயன் சிறிதுமில்லாத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.*

விளக்கவுரை: அறத்துறை—அறநெறி. பாடு—துன்பம். நீதி—முறை. துன்பமுறுசொல்—புறங்கூறல், வன்சொல் முதலியன. என்பயனும் இல்லாத சொல்—அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் உறுதிப்பொருள் நான்கனுள் ஒன்றையும் பயவாத சொல்.

தமக்கு வருந் துன்பத்திற்கஞ்சி மேலோர் உலகிற்கு உறுதி பயப்பனவற்றைக் கூருமலிரார் என்பது கருத்து. (அ)

179. அறவோர் பிறர்பழி யாண்டும் இசையார்
உறுதி யுறவருளா லுன்னி னவர்முற்
செறலொடு சொல்லினும் சொல்பவே யன்றிக்
குறைபுறன் கூறார் குறித்து.

*பொழிப்புரை:* அறநெறியின் மாறுபடாத நல்லோர் அயலார் பழியைத் தம் நட்பினரிடத்தும் கூறார். எல்லோரும் நன்மையுற வேண்டுமென்று தம் அருளால எண்ணிப் பிறர் பால் தவறு கண்டவிடத்து அவர்முன் சினத்தொடு இடித்துக் கூறினுங் கூறுவரேயன்றிப் பிறர் பழியை ஒருபோதும் அயலாரிடம் குறித்துக் கூறார்.

விளக்கவுரை: யாண்டும்—ஒத்த உள்ளத்தினையுடைய நட்பினரிடத்தும். உறுதி—அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்பன. செறல்—சினம். சொல்ப—சொல்வர். குறித்து—கருத்துட்கொண்டு. கருத்துட் கொள்ளவும் மாட்டார்; பிறர்பால் கூறவும் மாட்டார் என்க. (கூ)

180. கூகை பகற்கட் குருடெனின் யார்குற்றம்
ஈகையரில் லென்னின் இரப்பார்தம் குற்றமே
சோகம் பெரியாரைச் சார்ந்துந் தொடர்ந்தக்கால்
ஆகுமே குற்ற மவர்க்கு.

*பொழிப்புரை:* கூகைக்குப் பகலில் கண் தெரியாது எனின் அது பகலின் குற்றம் ஆகுமா? ஈவோர் இல்லையெனின் அது இரப்பவர்களின் குற்றம் ஆகுமா? பெரியோரைச் சார்ந்த பின்னரும் ஒருவனுக்குத் துன்பம் தொடர்ந்து வருமாஞல் அது அப்பெரியோருக்குக் குற்றம் ஆகுமா? ஆகாது.

விளக்கவுரை: கூகை—கோட்டான். ஈகையர்—இரப்பவர்க்கு ஈவோர். இல்எனின்—இல்லை என்று கூறுவராயின். சோகம்—துன்பம். சார்ந்தும்—அடைந்த பின்னரும். தொடர்ந்தக்கால்—நீங்காது தொடர்ந்து வருமாயின்.

ஊழின் காரணமாக வருவனவற்றைப் பெரியோராலும் தடுத்தல் அரிது என்பது கருத்து. (கo)

# 19. கீழோரியல்பு

181. இரவு விளக்கங் குருடேந்திச் செல்லின்
வருவோர் வழிவிலங்கு மாறுணர்த்தி யற்றே
பெரியா ரவைப்புக்குப் பேதைநா ணுமை
தெரியத்தன் தீவாய் திறப்பு.

*பொழிப்புரை*: அறிஞர் அவையுள் புகுந்து அறிவில்லாத ஒருவன் தன்னுடைய நாணின்மை தோன்றத் தீய வாயைத் திறந்து பேசுதல், குருடன் ஒருவன் இரவில் விளக்கைப் பற்றிக் கொண்டு செல்லுவானாயின் அவ்விளக்கு அவனுக்கு வழியினியல்பை உணர்த்தாது எதிரில் வருவோருக்கு வழி விலகிச் செல்லுமாறு உணர்த்துவதை ஒக்கும்,

விளக்கவுரை: இரவு—இருள் செறிந்த இரவு. விளக்கம் (விளக்கு + அம்) 'அம்'-சாரியை. வருவோர்—எதிரில் வருவோர். வழி விலங்கு மாறு—தன் மீது மோதாமல் விலகிச் செல்லுமாறு. அவைப்புக்கு—சபையுள் புகுந்து. தீவாய்—கேட்டார் வெறுக்குஞ் சொற்களைச் சொல்லிப் பழகியவாய்.

பேதையின் சொல்லைக் கேட்டமேலோர் அப்பேதையை நட்பாகக் கொள்ளாது நீங்குவர் என்பது கருத்து. (க)

182. வெள்ளென்பு பெற்றநாய் துண்ட விடக்குறின்
கொள்ளும் நனிகளி கோடியும் வேண்டுமோ
உள்ளதுடன் இம்மி மிகினும் உறுபகீழ்
வெள்ளத் தனைய வியப்பு.

*பொழிப்புரை*: தசை சிறிதும் இல்லாத வெண்மையான எலும்பைக் கடித்து உழலும் நாய் ஒரு துண்டு இறைச்சி கிடைத்தாலும் மிக்க மகிழ்ச்சி அடையும்; பெருஞ்செல்வம் வேண்டுமென்பதில்லை, தம்மிடத்துள்ள பொருளுடன் இம்மியளவுள்ள பொருள் சேர்ந்தாலும் கீழ்மக்கள் மிக்க செருக்கினையடைவர்.

விளக்கவுரை: என்பு—எலும்பு, விடக்கு—இறைச்சி. நனிகளி—மிக்க மகிழ்ச்சி, 'நனி'-உரிச்சொல். கோடி, வெள்ளம் என்பன பெருமையையும் இம்மி என்பது சிறுமையையும் உணர்த்தி நின்றன.

"முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்" —நாலடியார் (உ)

183. வேந்தொடு பொற்சிவிகை மேவி அறுசுவையூண்
மாந்தினும் பவ்வீ மறக்குமே நாய்கீழும்
வேந்தன் எனத்திரு மேவினும் வெஃகுமே
போந்துபரி தானப் பொருள்.

*பொழிப்புரை:* *அரசனோடு பொன்னால் ஆகிய பல்லக்கிலமர்ந்து சென்று ஆறுவகைப்பட்ட சுவைகளுடன் கூடிய உணவையே அருந்திவரினும் நாய் மலம் தின்னும் வழக்கத்தை விடாது; மன்னவன் போன்று வளநிதி பெறினும் கீழ்மகன் (கயவன்) பிறர் அளிக்கும் கையூட்டினை (இலஞ்சமாக ஈயும் பொருளை) வாங்கிக்கொள்ளவே விரும்புவான்.*

விளக்கவுரை: சிவிகை—பல்லக்கு. அறுசுவை—இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு என்பன. 'பவ்வீ'-மலம், இடக்கரடக்கல். 'மறக்குமே'-ஏ-எதிர்மறை. வெஃகும்—விரும்பும்; 'வெஃகுமே'-ஏ அசை நிலை. பரிதானம்—இலஞ்சம்.

கீழ்மக்கள் பெற்றது கொண்டு ஒரு போதும் அமையார் என்பது கருத்து. (கூ)

184. களைப்பினும் பல்கால் கனல்சுட விட்டில்
விளக்கத்துப் பின்னும் விழுந்துயிர் மாயும்
அளப்பில் துயரத் தழுந்தினுங்கீழ் பின்னும்
களித்துவிழும் காமக் கனல்.

*பொழிப்புரை:* *திரியில் எரியும் நெருப்புச் சுடுவதனால் பலமுறை களைப்புற்றாலும் விட்டிற்பூச்சி பின்னரும் விளக்கில் விழுந்து உயிரைவிடும்; அளவுகடந்த துன்பத்தில் அழுந்தினாலும் கீழ்மக்கள் மேலும் மேலும் காமக்கனலில் விரும்பி விழுந்து வீணே மாய்ந்து ஒழிவர்.*

விளக்கவுரை: விளக்கத்து—விளக்கின்கண், பின்னும்—பின்னரும். உயிர்மாயும்—இறந்து போகும். அளப்பு இல்—அளவிட முடி

யாத. கீழ்—கீழ்மக்கள்; ஆகுபெயர். காரித்து—விரும்பி. காமக்கனல்—உருவகம், உள்ளத்தைச் சுடுதலின் காமக்கனல் என்றார்.

காமம் காரணமாக மேலும் மேலும் துன்பங்கள் வந்தாலும் கீழ்மக்கள் அதன்பால் கொண்டுள்ள பற்றினை விடாது ஒழுகிமாய்வர் என்பதாம். (ச)

185. அருத்தினும் பாலை அராக்கடு வன்றிக்
குருத்திண் மணிகொடா கொன்றுகொளா ராயின்
வருத்திற் பயன்படுங்கீழ் நன்றியற்றின் மாய்க்கும்
கருத்துடையார் நாடல் கடன்.

*பொழிப்புரை:* பாலையே வார்த்து வளர்த்து வந்தாலும் நாகம் விடத்தை நல்குவதன்றிக் கொன்று கொள்ளாரா யின் அழகும் திட்பமும் வாய்ந்த மணியைக் கொடா; துன்புறுத்தின் கீழ்மக்கள் பயன்படுவார்கள்; நன்மை செய்தால் அந்நன்றியை மறந்து செய்தவரையே கொன்று விடுவார்கள்; உணர்வுடையார் மக்களியல்பினை நன்கு ஆராய்ந்து அறிந்து ஒழுகுதல் முறைமையாகும்.

விளக்கவுரை: அருத்தினும்—அருந்துமாறு செய்து வளர்த்து வந்தாலும். 'அரா'-பால்பகா அஃறிணைப் பெயர். கடு—விடம். குரு—நிறம் (அழகு) திண்—திட்பம். கீழ் வருத்திற் பயன்படும் நன்று இயற்றின் மாய்க்கும் என்க.

தமக்குப் பிறர் செய்த நன்றியைக் கீழ்மக்கள் விரைவில் மறந்து விடுவர் என்பது கருத்து. (ரு)

186. ஒற்றுயிரைச் சாரி னுருத்திரியு மாத்திரைபோம்
பற்றிய வன்மை முதல படாமன்னே
கற்று ரவைச்சாரிற் காட்டும் பலவுருக்கீழ்
பற்றுவிடா வுள்ளதும்போம் பண்பு.

*பொழிப்புரை:* மெய்யெழுத்து உயிரெழுத்தைச் சார்ந்தால் வடிவம் வேறுபடும்; ஒலியின் அளவை இழந்துவிடும்; வன்மையும் மென்மையும் இடைமையும் நீங்கா, கீழ்மக்கள் கற்றோர் அவையின்கட் சார்ந்தால் வேடம் பல கொள்வர்; தம் பண்பை இழப்பர்; பற்றினை விடார்.

விளக்கவுரை: ஒற்று—மெய்யெழுத்து. உயிர்—உயிரெழுத்து. சாரின்—அடைந்தால். உரு—வரிவடிவம். மாத்திரை—ஒலிக்கும் கால அளவு. வன்மை முதல—வன்மை மென்மை இடைமை என்பன

உயிர் நீங்கின் ஒற்று தன் இயல்பின் மாறுபடாது நிற்பது போன்று கீழ்மக்களும் சுற்றாரவையினின்றும் நீங்கின அளவில் தம் மியல்பினையே மேற்கொண்டு ஒழுகுவர் என்க.

கீழ்மக்களின் நடிப்பைக் கண்டு உண்மை என எண்ணி ஏமாறலாகாது என்பது கருத்து. (சு)

187. இடுகாட்டை நன்கா டெனவிசைத்தும் அச்சொல்
இடுகாடே தன்பொரு ளென்றுணர்த்தும் சான்றோர்
வடுவுரையாம் என்றுதம்போல் மாண்பினரென் றாலும்
கெடுவுடைமை காட்டிவிடும் கீழ்

***பொழிப்புரை:*** *இடுகாட்டினை நன்காடு என்று கூறினாலும் அச்சொல் தன்பொருள் இடுகாடே என்று தெரிவிக்கும்; பழிச்சொல் ஆகும் என்று எண்ணித் தம்போல் மாண்புடைய (நல்ல)வரென்று கீழோரைச் சான்றோர் கூறினாலும் அக்கீழ் மக்கள் பிறருக்குக் கேடு பயக்கும் செயலையே செய்துவருவர்.*

விளக்கவுரை: இடுகாடு—சுடுகாடு. இசைத்தும்—கூறினாலும்; இசைத்தாலும் என்பது இசைத்தும் எனத்திரிந்து நின்றது. உணர்த்தும்—தெரிவிக்கும். வடுவுரை—பழிச்சொல். மாண்பினர்—நற்குணமும் நற்செயலும் உடைய மேலோர். கெடுவுடைமை—அழிவு பயக்கும் தன்மை.

கீழோர் தமக்கு வரும் நற்பெயரைக் காத்துக் கொள்ளார் என்பதாம். (எ)

188. முல்லை குறிஞ்சி முறையிற் றிரிந்துபெயல்
இல்லாமை யாற்பாலை யென்னப் படிவமுறும்
வல்லார் செயலும் மனமும் புகழறம்
புல்லாவேல் புன்மை புகும்.

***பொழிப்புரை:*** *மழை பெய்யாது பொய்க்குமாயின் முல்லை நிலமும குறிஞ்சி நிலமும் தம் இயல்பு கெட்டுப் பாலை நிலமாக மாறிவிடும உலகோரால் புகழப்படும் அறத்தொடு பொருந்தாதாயின் வலிமை மிக்கவர் செய்யும் செயலும் மனமும் பழியையே அடையும்.*

விளக்கவுரை: முல்லை—காடும் காட்டைச் சார்ந்த இடமும். குறிஞ்சி—மலையும் மலையைச் சார்ந்த இடமும். திரிந்து—வேறுபட்டு. படிவம்—வடிவம். 'புகழறம்'-வினைத்தொகை.

அறத்தொடு பொருந்தாத செயலும் உள்ளமும் உடையோர் வலிமை மிக்கவராக இருப்பினும் புல்லியரே ஆவர் என்பது கருத்து.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளுங்~~காலை~~
காலை" —*சிலப்பதிகாரம்* (அ)

189. கற்பன கல்லாக் கயவர் கருமங்கள்
நிற்பன அல்ல நினைந்தன செய்வரால்
அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது.

***பொழிப்புரை:*** *கற்கத் தகுந்த நூல்களைக் கற்காத கீழ் மக்கள் செய்யும் நற்செயல்கள் நிலைத்திருப்பன அல்ல. நல்லனவோ தீயனவோ என்று ஆராயாமல் விரும்பியவற்றை விரும்பியவாறே செய்வர்; கீழ்மக்களிடத்து நல்லொழுக்கம் காணப்படின் அதற்குக் காரணம் அரச தண்டனைக்கு அஞ்சும் அச்சமே ஆகும்; அஃது அன்றாயின், தம்மால் விரும்பப்படும் பொருள் அவ்வொழுக்கத்தால் வருவதாயிருப்பினும் அதனைச் சிறிது மேற்கொள்வர்.*

**விளக்கவுரை:** கற்பன—அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் உறுதிப் பொருள்களையுணர்த்துவன. கருமங்கள்—நற்செயல்கள். ஆசாரம்—ஒழுக்கம். அவா—விரும்பும் பொருள். 'அவா' ஆகு பெயர்.

கீழ் மக்களின் ஒழுக்கத்திற்கு அச்சம் அல்லது அவாவே காரண மாகும் என்பதாம். பின் இரண்டடிகளும் திருக்குறள். (கூ)

190. வளித்துணை பெற்றக்கால் வன்னிசுடும் அக்கால்
ஒளித்தக்கால் தானும் ஒளியும் கயமை
இளைத்த பொழுதும் ஒளியாதே எல்லாம்
கொளுத்தலின் யாமஞ்சும் கூற்று.

***பொழிப்புரை:*** *பிராணவாயு ஆகிய தன் துணையைப் பெற்றபொழுதுதான் நெருப்புச்சுட்டு எதனையும் அழிக்கும். அக்காற்று மறைந்தவிடத்துத்தானும் மறைந்துவிடும்; மெலிந்த பொழுதும் கீழ்மையானது மறையாமல் சேர்ந் தாரை எல்லாம் கெடுத்து ஒழிப்பதால் அதுவே, யாம் அஞ்சு வதற்குரிய கூற்று ஆகும்.*

**விளக்கவுரை:** வளி—காற்று (ஈண்டுப் பிராண வாயுவை உணர்த்திற்று). வன்னி—நெருப்பு. இளைத்த பொழுதும்—வறுமையுற்ற விடத்தும். கூற்று—இயமன்.

தீயினும் கொடியர் கயவராதலால் அவரொடு ஒருபோதும் நட்புக் கொள்ளுதல் கூடாது என்பது கருத்து. (க0)

# 20. மேல் கீழ் நடு இயல்பு

191. தலையாயார் ஏனையோர்ச் சாரினுந் தங்கள்
நிலையிற் பிரியாரந் நீரவே கீழும்
தலையாயார்ச் சாரின் தலையாய்க்கீழ்ச் சாரின்
நலமில்கீ ழாமே நடு.

*பொழிப்புரை:* மேலோர் ஏனையோரைச் சார்ந்தாலும் தங்கள் நிலையினின்றும் நீங்கார்; கீழ்மக்கள் மேலோரைச் சார்ந்து வாழ்ந்தாலும் தங்கள் தீய பண்பினின்றும் நீங்கார்; இடையாயார் மேலோரைச் சார்ந்தால் மேலோராகவும், கீழ் மக்களைச் சார்ந்தால் கீழ் மக்களாகவும் மாறி விடுவர்.

விளக்கவுரை: இந்நூலாசிரியர் மக்களைத் தலையாயார், இடையாயார், கடையாயார் என மூவகையினராகப் பகுத்துக் கொண்டு அவர்தம் இயல்பு கூறுகின்றார்.

ஏனையோர்—இடையாயாரும், கடையாயாரும். நிலையிற் பிரியாமை—நற்குண நற்செயல்களை விடாது மேற்கொண்டு ஒழுகுதல். கீழும் அந்நீரவே—கீழ் மக்களும் தம் தீய பண்பையும் தீய செயலையும் விடாது மேற்கொண்டு ஒழுகுவர்.

தீயோர் நல்லோரைச் சார்ந்து ஒழுகினும் அவரை நட்பினராகக் கொள்ளல் தக்கதன்று என்பது கருத்து. (க)

192. சீரியர் செம்மை திறம்பார் மிடியினும்
பூரியர் செல்வம் பொருந்தினும் என்பயன்
சீரிற் சிறந்து மிடியிற் சிதையுமே
பாரின் இடையாயார் பண்பு.

*பொழிப்புரை:* வறுமை வந்துற்ற காலத்தும் மேலோர் அறநெறியின் வழுவாது ஒழுகுவர்; கீழ்மக்கள் செல்வத்தொடு வாழ்ந்தாலும் அறநெறியை மேற்கொள்ளாது தீநெறியையே

மேற்கொண்டு ஒழுகுவர்; இடையாயோர் செல்வமுள்ள பொழுது அறநெறியை மேற்கொண்டும், வறுமையுற்ற வழி அறநெறியின் மாறுபட்டும் ஒழுகுவர்.

விளக்கவுரை: சீரியர்--பெரியோர். செம்மை—அறநெறி. பூரியர்—கீழ்மக்கள். சீரின்--செல்வம் வந்தபொழுது. மிடி—வறுமை

பூரியர் செல்வத்தினும் சீரியர் மிடியே சாலச்சிறந்தது என்பதாம். (உ)

193. இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்பமேல்
இன்னுவே செய்யும் இனியசெய் தார்க்குங்கீழ்
இன்னுத செய்தார்க் கிகலா யினியசெயும்
இன்னுத செய்யார்க் கிடை.

*பொழிப்புரை:* தமக்குத் துன்பமே செய்து வருவார்க்கும் பெரியோர் நன்மையே செய்துவருவர். தமக்கு நன்மையே செய்துவருவார்க்கும் கீழோர் தீமையே செய்து வருவர். தமக்கு நன்மை செய்வார்க்கு நன்மையும், தீமை செய்வார்க்குத் தீமையும் இடையாயார் செய்துவருவர்.

விளக்கவுரை: இன்னு—துன்பம். இனிய—நன்மை செய்யும் செயல்கள். இகல்—பகை (ஈண்டுப் பகைவர் செய்யும் தீமையை உணர்த்தி நின்றது); ஆகுபெயர்.

மேல், கீழ், இடை என்பன ஆகுபெயர்கள். 'செய்தார்'-'செய்யார்' வினையாலணையும் பெயர்கள். மேல், கீழ், இடை என்னும் மூவகையினர்க்கும் உரிய இயல்பு இதனுல் கூறப்பட்டது. (ங)

194. கரும்பொடு கூட்டினும் வேம்பினிமை காட்டா
இரும்புட னென்றினும் ஏமமியல் குன்று
கரும்பாநீர் வேம்பா மவற்றிற் கலப்பின்
விரும்பிடைமேல் கீழுமன்ன வே.

*பொழிப்புரை:* கரும்பொடு சேர்த்து வளர்த்தாலும் வேம்பு இனிக்கா; இரும்பொடு சேர்ந்து கிடப்பினும் பொன்னின் இயல்பு மாறு; நீர் கரும்பொடு கலப்பின் இனிக்கும், வேம்பொடு கலப்பின் கசக்கும். அவைகளே போன்று மேலோரொடு சேர்ந்து பயின்ருலும் கீழோர் தீமையே செய்

*வர்; கீழோரொடு சேர்ந்திருந்தாலும் மேலோர் நன்மையே செய்வர். மேலோரொடு சேர்ந்தால் நன்மையும் கீழோரொடு சேர்ந்தால் தீமையும் புரிந்துவருவர் இடையாயோர்*

**விளக்கவுரை:** ஏமம்—பொன். இயல்—தன்மை. நீர் கரும்பு ஆம் வேம்பு ஆம் அவற்ருெடு கலப்பின் என்க.

நீர் கரும்பொடும் வேம்பொடும் கலத்தலாவது; அவற்ருன் உண்ணப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் அவற்ருெடு ஒன்ருகக் கலந்து நிற்றல்.

இப்பாவில் எதிர்நிரல் நிறையணி அமைந்துள்ளது. கீழோர்பால், சேர்ந்திருப்பினும் நல்லோர் தொடர்பை விடலாகாது என்பது கருத்து. (௪)

195. தென்றலினும் நுண்பஞ்சு சேட்சென் றலைவுபடும்
என்றும் பெயரா பெருங்காற் றெனினுமலை
ஒன்றிற் சிறுபடரும் ஆற்ரு துடையுங்கீழ்
வென்றிடுமெத் துன்பினையும் மேல்.

***பொழிப்புரை:*** *நுண்ணிய பஞ்சானது தென்றற் காற்ருனும் அலைக்கப்பட்டு நெடுந்தூரம் செல்லும்; மலையானது மிகப் பெரிய புயற்காற்று வந்து தாக்கினுலும் தான் இருக்கும் இடத்தைவிட்டுப் பெயராது; சிறிய துன்பம் வந்தாலும் கீழ்மக்கள் ஆற்ருது மிகக் கலங்குவர்; மிகப் பெருந்துன்பங்கள் வந்தாலும் மேலோர் சிறிதும் கலங்காது அவற்றை வென்று மகிழ்வர்.*

**விளக்கவுரை:** தென்றல்—தெற்கேயிருந்து வரும் மெல்லிய காற்று. சேண்—நெடுந்தூரம். பெயராது—நீங்காது. படர்—துன்பம். 'சிறுபடர் ஒன்றினும்' எனக் கூட்டுக.

தமக்கு வரும் துன்பங்களுக்கஞ்சி மேலோர் பகைவரைப் பணிந்து வாழார் என்பது கருத்து. (ரு)

196. காய்த்த விளைநெற் கதிரிறைஞ்சல் காண்டுமால்
கோத்த பதர்கொள் குலைநிமிர்வே கொள்ளுமுல
கேத்தும் அறிஞர்க் கியல்பு பணிவுடைமை
வாய்த்தலிலை பேதை வயின்.

**பொழிப்புரை:** *நன்கு விளைந்து முதிர்ந்த நெற்கதிர் தலை தாழ்ந்து நிற்றலைக் காண்கின்ருேம்; போக்குதற்குரிய (பயனற்ற) பதர்களைக் கொண்டுள்ள கதிர் நிமிர்ந்தே*

நிற்றலையும் காண்கின்றோம், உலகோரால் போற்றப்படும் அறிஞர்க்குப் பணிவுடைமை இயல்பாகவே அமையும். அறிவில்லாதார்பால் ஒருபோதும் பணிவுடைமை அமையாது.

விளக்கவுரை: இறைஞ்சல்—தலைவணங்கி நிற்றல். குலை—கதிர். ஏத்தும்—புகழும். வாய்த்தல் இலை—பொருந்தா. பேதை—அறிவில்லாதவன். 'வயின்'-ஏழாம் வேற்றுமையுருபு.

மேலோர் ஒருபோதும் தம்மை வியந்து தருக்கார் என்பது கருத்து. (சு)

197. இரவியிருள் சீக்கும் புயல்மறைக்கு மேனும்
பெரியார் மிடியினும் பீழை துடைப்ப
திருவுற்ற போதுந்தாம் உண்ணலுங்கீழ் செய்யா
இருமணிபாம் பெய்தினும் என்.

பொழிப்புரை: முகிலானது தன்னை மறைத்தாலும் சூரியன் இருளைப் போக்குவான்; வறுமை வந்துற்றாலும் பெரியோர் பிறர்க்குற்ற துன்பத்தினைப் போக்குவர். மிக்க செல்வமானது வந்தாலும் கீழோர் தாமும் உண்ணார், பிறர்க்கும் கொடார்; நாகமானது பெருமை மிக்க மாணிக்கத்தைப் பெற்றிருந்தாலும் அதனால் அது அடையும் பயன் யாது? ஒன்றும் இல்லை.

விளக்கவுரை: இரவி—சூரியன். சீக்கும்—போக்கும். புயல்—மேகம். மிடி—வறுமை. பீழை—துன்பம். திரு—செல்வம். இருமணி—பெருமை மிக்க மாணிக்கம். 'என்'-என்பது இன்மை குறித்து நின்றது.

வறுமையுற்றார் என்று எண்ணிப் பெரியோர் தொடர்பை விடலாகாது என்பது கருத்து (எ)

198. நன்றொரு கோடி செயினுமவை நாடாமே
ஒன்று நவைநாடி ஊறு புரிவகீழ்
கொன்றன்ன தீங்குபல செய்யினுங் கொள்ளாமே
நன்றுன்னல் சான்றோர் நடை.

பொழிப்புரை: தமக்குப் பிறர் மிகப்பல நன்மைகளைச் செய்திருந்தாலும் அவைகளைச் சிறிதும் எண்ணாமல் தற்செயலாக நிகழும் ஒரு சிறுபிழையையே பெரிதாக எண்ணிக்

கயவர் அவருக்குத் தீங்கு செய்வர்; கொன்று லொத்த பல தீங்குகளைத் தமக்குப் பிறர் செய்து வந்தாலும் அவைகளைச் சிறிதும் எண்ணாமல் அவர் தமக்குமுன் செய்த நன்றி ஒன்றையே நினைந்து அமைதல் சான்றோர்க்கு இயல்பு ஆகும்.

விளக்கவுரை: 'ஒரு கோடி'-என்பது பன்மை குறித்து நின்றது. நாடாமே—எண்ணாமல். நவை—குற்றம். நாடி—எண்ணி. ஊறு—இடையூறு. உன்னல்—எண்ணுதல். நடை—இயல்பு.

மேலோருக்குச் செய்த நன்றி வீண் ஆகாதென்பது கருத்து. (அ)

199. உவ்வொடு குற்றுகரம் ஒக்கும் உருவெனினும்
தவ்வெனும் தன்மைசார் வல்லாறு தாங்காட்டும்
செவ்வியர் போல்வர் சிறியரும் வல்லாறே
வெவ்வேறு காட்டி விடும்.

பொழிப்புரை: முற்றுகரத்தொடு குற்றுகரம் வடிவில் ஒத்திருந்தாலும் அதன் (குற்றுகரத்தின்) ஒலி குறைந்திருத்தலை அதனால் தொடரப்பட்டுள்ள வலி மெலி இடை உயிர் நெடில் ஆய்தம் ஆகிய ஆறும் உணர்த்திவிடும்; கீழோரும் வடிவில் மேலோர் போன்றே தோன்றுவர் எனினும் அவரவர் மேற்கொண்டுள்ள நெறிகளே அவர்களை வேறுவேறாகப் பிரித்து உணர்த்தி விடும்.

விளக்கவுரை: தவ்வு—சிதைவு, குறைதல். வல்லாறு—வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர், நெடில், ஆய்தம் என்னும் ஆறும். செவ்வியர்—மேலோர். வல்லாறு—மேற்கொண்டுள்ள நெறி. வெவ்வேறு—வேறு வேறு.

மேலோர் கீழோர் என்பதை அவரவர் செயலால் தான் உணர முடியும் என்பது கருத்து. (கூ)

200. நகையீகை இன்சொலே நாண்செம்மை வாய்மை,
பகையுமிக ழாமை பணிவொழுக்கம் என்று
இகவாத நாரென ஈரைந்தும் மேல்கொள்
வகைதில்லா கீழோர் வயின்.

பொழிப்புரை: நகையும், ஈகையும், இன்சொல்லும் நாணும், செம்மையும், வாய்மையும், பகைவர் முதல் யாரையும் இகழாமையும், பணிவுடைமையும், நல்லொழுக்கமும்

நீங்காத அன்பும் ஆகிய பத்தும் மேலோரிடத்துக் காணும் நல்லியல்புகளாகுப். இவை கீழோர்மாட்டு நிற்பன அல்ல.

**விளக்கவுரை:** நகை—முகமலர்ச்சி. ஈகை—ஈதல். நாண்—தீயன செய்ய நாணுதல். செம்மை—நடுநிலைமை. இகவாதநார்—நீங்காத அன்பு. மேல் கொள் ஈரைந்து வகையும் என மாற்றிக் கூட்டுக.

உருவத்தால் கீழோரும் மேலோர் போன்றே காணப்படுவதால் மேலோரைத் தெரிந்து கொள்ளுதற்கு அடையாளங் கூறியவாறு. இதனால் மேலோரியல்பு தொகுத்து உரைக்கப்பட்டது. (க0)

அரசஞ்சண்முகனார்
இன்னிசை இருநூறு
பொன்னுசாமிப் பிள்ளை
உரைமுற்றும்



# இன்னிசை இருநூறு

## பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

*(எண் பக்கத்தைக் குறிக்கும்)*


அங்கண் விசும்பு 2
அங்கி தனைக்கொதிப்ப 48
அடுத்தார்ப் புரப்ப 94
அண்டம் கிணற்றின் 78
அணுத்துணைவித்தும் 86
அருத்தினும் பாலை 101
அறவோர் பிறர்பழி 98
அறனதிப் பாற்புல் 97
அறநெறியா னஞ்சா 19
அறிவுடையம் யாம் 78
அன்பா னினிதா 97
அன்பினைப் பேற்றுதாஉம் 5
ஆகா தனசெயினும் 89
ஆசா னவையில் 47
ஆசைப்பேய் 43
ஆத்திகர் எம்மத 85
ஆழி விரற்றுணையா 22
ஆற்றலிலா தார் 53
ஆறலைத்தல் கொள்ளை 29
இச்சை யறுத்துயர் 43
இடம்பொரு ளேவல் 73
இடுகாட்டை 102
இயமாதி நோய் 10
இரவு விளக்கங் 99
இரவியிருள் சீக்கும் 108
இல்லாள்சேய் சீடர் 47
இல்லார் பொருள்நாடல் 43
இல்லாருந் தானும் 14
இளையம் வலியம் 80
இறந்தா ரெழினும் 96
இறத்தலெஞ் ஞான்று 27
இறையென முத்தொழிலும் 80
இன்சொல் பிறர் 25
இன்பநூல் கற்றலின் 62
இன்ன லுருமே 17
இன்றி யமையா 73
இன்னுசெய் தார்க்கும் 106
ஈப்பிற் பிறமிக்க 36
ஈரத் திரிபின் 56
உடல்பொருள் 34
உடையுணவு நீக்கும் 66
உடையானை உள்ளத் 16
உண்ணுஞ் சுவையுணர்ந்து 26
உண்ண லுறங்கல் 70
உணர் வொழியும் 93
உலவாத நுண்பொருள் 64
உள்ளம் பொறிநா 27
உளத்தால் பகைத்தாரை 90
உழுதல் உழுவித்தல் 67
உவ்வொடு குற்றுகரம் 109
ஊழான் வருமென்று 66
எச்சநீ ராவிற்கு 28
எண்ணின் இரத்தம் 42
எண்ணிலனே யொன்றுனு 52
எல்லா வுயிரும் 50
எல்லா முடையான் 71
என்சொலினுந் தாய் 96
ஏதிலார் குற்றங்கள் 53
ஏற்றது பூவடிமண் 37
ஒருதலை யேனும் 41
ஒழுக்கம் பிழையாரை 31
ஒற்றுயிரைச் சாரின் 101
கடங்கொண்டு பின்னை 73
கடைபோகா வாயினலம் 68
கரவினு மிக்க 58
கரும்பொடு கூட்டினும் 106
கல்லாத மாக்கள் 61
கல்லா ரெனினுமென் 64
கலைநிறைந்த ஒண்மதி 63
களிமயில் கோம்பியை 91
களைப்பினும் பல்கால் 100
கற்பன கல்லா 103
கற்றலிற் கேட்டல் 64
கன்னி விலங்கு 23
கன்னியை நோன்பினை 92
கன்று பிறந்தவுடன் 79
காயமும் பொன்னும் 34
காய்த்த விளைநெல் 107
காவாமை யாற்பலநோய் 42
காலம் பிழைத்தக்கால் 57
கூகை பகற்கண் 98
கூலி கொடாதும் 33
கூறை மருந்தொடு 35
கேடு பிறரால் 46
கொடுப்ப தழுக்கறுப்பான் 38
கொண்டானிற் றீர்ந்தய 21
கொல்லக் கருதிலி 54
கொள்ளும் பயன்குறித்து 91
சான்றவர் கேண்மை 84
சிந்தித்து வாழ்த்துதாஉம் 5
சிப்பி முளரிசுரம் 60
சிவா நினக்கே 8
சிறுமை பிறர்சொல்லிற் 45
சின்னுட் பழகினும் 61

சினகரம்போய் 8
சீரியர் செம்மை 105
செய்யாமற் பேருதவி 25
செல்லாம விச்சைவழி 21
செல்வமும் கல்வி 24
செல்வம் விரும்பிற் 28
சொல்லுழவர் வித்திடா 9
ஞானி யெனத்தேவ 7
தம்மை இகழவுடல் 49
தமதிற் பிறர்தொடினும் 19
தலைமேல் அரதனமே 58
தலைவற்குங் காலந் 67
தலையாயார் ஏனையோர் 105
தன்னினு மிக்க 77
தாக முறினுமழை 21
தாய்தந்தை யாசா 95
தாழைமுன் பாம்பொடு 38
தானுற்று நின்ற 68
திருவா னறிவும் 56
தினையனவு மிசன் 10
தின்னக் கரும்பு 68
தின்றன வெல்லாம் 52
தீதே பெயர்சொலினும் 92
தீர்வழி தேற்ற 74
தீயரை யேனோர் 54
துக்கவெயில் காய்பிறவி 79
துய்ய புகழ்க்கற்பால் 15
தூய விடுத்தாயுள் 51
தூய மலர்தூ 4
தெருளாதார்ப் பற்றும் 81
தென்றலினும் நுண்பஞ்சு 107
தேவருந் தீப்போற்றுவ 81
தொழுநோய் முதற்பல 22
நகையிகை இன்சொலே 109
நட்டாராற் கேடு 47
நடையாற் றலையாயார் 83
நல்ல குடிப்பிறந்து 13
நன்றென்ப கண்ணப்பர் 9
நன்னெறி முன்னீர் 1
நன்றொரு கோடி 108
நாமகட் போற்றுதூஉம் 2
நாடி நலத்திங்கு 83
நீதித் தலைநின்ற 95
நித்தாரைப் போற்றுதூஉம் 3
நீரிற் பதர்மிதப்ப 87
நூலறியா மாக்கள் 45
நூலினைப் போற்றுதூஉம் 2
நெடுந்துயில்பே ருண்டி 69
பகைத்தார்க்குங் கேடு 89
பண்பு பலபெற்றும் 35
பயனில் பொருண 30
பறழ்பல பன்றி 15
பனையடியிற் பாலுணினும் 58
பன்றிக் குருளை 63
பாத்தூ ணறிந்து 18
பாரி ததீசி 36
பாலை கடந்தினிய 40
பாற்கடல் பெற்றாலும் 62
பிறர்பொரு ளன்று 29
பிறர்தம்மின் மேலா 32
பிறராக்கங் காணிற் 32
பிறன்மனை வேட்டொழுகு 20
பிறனில் விழைந்த 20
புரவலர் வீரர் 50
புள்விலங் கினுள்ளும் 26
புறத்துமனஞ் செல்லாமே 40
பெரியார் தம்கேண்மை 84
பெருகுமவாத் தோல்வி 93
பெருந்துயர மாற்றிப் 76
பேதைமை மக்கட் 15
பேய ரொடுபாலர் 11
பொருளான் அறமுறும் 71
பொன்னே எனினும் 59
போற்றுதூஉந் தன்னின் 1
மகளிர் கருச்சிதைத்தல் 33
மகவு மனைபொன் 39
மடைத்தலை யேரி 75
மலைத்துணைப் பஞ்சுமொரு 11
மறப்புகுத்தா வாற்றல் 75
மற்றோர்பாற் சொல்லேன் 31
மன்னுயிரை தன்போல் 16
மன்னுயிர்க்குத் தூய 30
மாணறிவ ரென்றுணரின் 37
மிக்கோர் நடுவரெனின் 90
முத்திக் குபாயமுணர் 94
முல்லை குறிஞ்சி 102
மெய்யுணர் வுற்றுயர் 48
மெய்யறிவ னூலின் 7
மெல்லிலை காயோ 72
யாது செயலும் 77
வஞ்சத்தாற் செய்த 24
வஞ்சத் துறவால் 39
வண்மை தவங்கல்வி 59
வல்லோர் சினந்து 46
வளிமுதலா மூன்றொத்து 87
வளித்துணை பெற்றக்கால் 103
வறியரைச் செல்வர் 86
வாழ்நாள் ளுடனறிவு 51
வானம் பரவுதூஉம் 4
வானெறி வித்து 57
விருந்தோம்ப றென்புலந் 13
வெவ்வாய் நிரயத்து 85
வெள்ளென்பு பெற்றநாய் 99
வெற்றியுறு கோளரிப்பல் 65
வேறதொடு பொற்சிவிகை 100
வைகறை யாமம் 69